வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 தைத் திங்கள் 25-ம் நாள் (7—2—1965) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 4 | இதழ் 37

# தமிழரசாரின் தயவை நாடும் அரசியற் கட்சிப் பிரமுகர்கள்

## அடுத்த ஆட்சியைகைபற்ற ஆசை காட்டப் பார்க்கின்றனர்

கொழும்பிலுள்ள தமிழரசுக்கட்சி பிரமுகர்கள் சிலரின் விடுகளுக்கு இந்நாட்டின் பிரபலமான அரசியற் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் அடிக்கடி சென்று வருவதாக ஒரு செய்தி கிடைத்துள்ளது. அடுத்து ஏற்படவிருக்கும் புதிய அரசாங்கத்துக்குத் தமிழரசுக்கட்சியின் ஆதரவைப் பெறவே இப்பிரமுகர்கள் முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது.


மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெறுவார்கள் என்பது நிச்சயமாகி விட்டதை அறிந்ததும் சிங்கள மக்களின் கட்சிகளுக்கிடையில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

சமபலமுள்ள பல கட்சிகள் ஒன்றோடொன்றுமோதுவதனால் எக்கட்சியும் தனியாக ஆட்சிப்பொறுப்பை ஏற்கக் கூடிய வகையில் போதுமான உறுப்பினர்களைப் பெறமுடியாது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தெரிவுசெய்யப்படுவது நிச்சயமாதலினால், அவர்களின் உதவியுடனேயே ஆட்சியைக் கைப்பற்றலாம் என்பதனால் தமிழரசுக்கட்சியை வசீகரிக்கவே இம் முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

தமிழரசுக்கட்சித் தலைவர்கள் அனைவரும் தேர்தற் பிர

(9-ம் பக்கம் பார்க்க)



திரு சிவலிங்கம் அவர்கள் தீக்குளிப்பதற்கு முன்னர் அவர் கைப்பட எழுதி வைத்த கடிதம். இக்கடிதம் அவர் தீக்குளித்த இடத்திற்கு அண்மையிலிருந்து எடுக்கப்பட்டது.

## கொழும்பு மாநகரசபை கலைக்கப்படுமா?

## உள்ளூராட்சி அமைச்சு அந்தரங்க ஆலோசனை

கொழும்பு மாநகர சபையைக் கலைத்து விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு உள்ளூராட்சி அமைச்சு அந்தரங்கத் திட்டம் வகுத்து வருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது. மாநகர சபையின நிர்வாகத்தில் ஊழல் மலிந்திருப்பதாகக் காரணம் காட்டி சபையை கலைத்துவிட முடியாதா என்று உள்ளூராட்சி அமைச்சர் பலருடன் ஆலோசனை நடாத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது.


கொழும்பு மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சியின் கையில் இருப்பது தெரிந்ததே. இம் மாநகர சபையைச் சில ஆண்டுகளுக்கு முன்னரும் உள்ளூராட்சி அமைச்சு கலைத்துவிட்டு விசேட ஆணையாளரின நிர்வாகத்தின் கீழ் சில காலம் ஒப்படைத்திருந்தது.

இப்பொழுதும், அதே போன்று மாநகர சபையைக் கலைத்துவிட்டு விசேட ஆணையாளரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க சில அந்தரங்க ஆலோசனைகள் நடப்பதாகத் தெரிகிறது. கொழும்பு மாநகர சபையை கலைத்துவிட்டால் பொதுமக்கள் மத்தியில் ஐ. தே. கட்சியிடம் நிர்வாகத் திறமையில்லை யென்ற கருத்தும் தோன்றக்கூடும். இதனால் ஐ. தே. கட்சியின் செல்வாக்கையும் பாதிக்க வழி அமைத்துக்கொள்ளலாம் என்று தெரிகிறது.

டிரலிபஸ் போக்குவரத்து சேவையை நிறுத்தியமையைக் காரணம்காட்டி மாநகரசபையைக் கலைத்துவிடுவதற்கு சட்டம் இடம்கொடுக்கவில்லையாம். இப்பொழுது நிர்வாகத்தில் ஏதாவது தவறு கண்டுபிடிக்கலாமா என்று அமைச்சு ஆராய்ச்சி நடத்துகிறதாம்.

இம்மாத முடிவிற்குள் மாநகரசபை கலைக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை யென்று அவ்வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

## இந்தியை எதிர்த்து இன்னுயிர் ஈந்த வீர இளவல்கள்



இந்தியை எதிர்த்து சென்னையில் தீக்குளித்த வீர இளைஞர்களின் உடல், தீக்குளித்து உயிர் பிரிந்தபின் கருகிக் கிடக்கின்றன. (மேல்):சிவலிங்கம் வயது 24 (கீழ்) திரு. இரங்கநாதன் வயது 32.

## பத்திரிகை நிருபர் தாக்கப்பட்டார்?

ஆளைப்பந்திக் கட்சித் தலைவரின் வீட்டில் பத்திரிகை நிருபர் ஒருவர் தாக்கப்பட்டதாக யாழ்ப்பாணச் செய்தியொன்று கூறுகிறது. அந்த நிருபர் பொலீசுக்குப் புகார் செய்தாரென்றும், புகார் பற்றி பொலீசார் புலன் விசாரணை நடத்துகிறார்களென்றும் கூறப்படுகிறது.

சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு நிதி திரட்டுவதற்காக 'ஈழநாடு' பத்திரிகையின் ஊழியர்கள் ஒரு கலைவிழா நடத்தினர். இவ்விழாவுக்கான அனுமதிச் சீட்டொன்றை ரூபா 50 க்கு ஆளைப்பந்திக் கட்சித் தலைவரின் பாரியாரும் வாங்கினாராம்.

இந்தப்பணத்தை வசூலிப்பதற்காக 'ஈழநாடு' நிருபர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




# 4. 'கோபியர் கொஞ்சும் ரமணன்!'

"தம்பி! உலகம் தெரியாத சின்னப் பெடியன் நீ. இந்த உலகத்தில் 'நல்லவன், என்று பெயர் எடுப்பதற்கு மிகுந்த சிரமம் எடுக்க வேண்டும். கெட்டவன், காவாலி என்று பெயர் எடுப்பதற்கு ஒரு நொடிப் பொழுது போதும்'' என்று பீடிகை போட்டார் தலைமையாசிரியர்.

கணேசனுக்கு இந்தப் பீடிகையின் அர்த்தம் பிடிபடவில்லை.

'இந்த உபதேசத்துக்கு இப்போ என்ன நேர்ந்தது?'' என்று அடக்கத்தோடு கேட்டுவைத்தான் கணேசன்.

"ஒன்றுமில்லை. நீ இப்போ போய்விட்டு வந்திருக்கின்றாயே தோட்டத்துரையின் பங்களா? அந்த உயர்ந்த இடம் பற்றி இந்தச் சுற்று வட்டாரததில் அத்தனை உயர்ந்த அபிப்பிராயம் இல்லை!"

'நான் வேண்டுமென்று அங்கு செல்லவில்லை. சந்தர்ப்பவசத்தால் அங்கு போக நேர்ந்தது. இனிமேல் ஜாக்கிரதையாக நடந்தால் போகின்றது.'' என்று கூறிய கணேசன் மீண்டும் தொடர்ந்து, 'ஏன் மாஸ்டர்? எதற்காக பங்களாவைப் பற்றி அத்தனை உயர்வான எண்ணம் இல்லாமல் இருக்கின்றது?' என்று கேட்டான்.

'தம்பி! அதெல்லாம் பெரிய கதை. போகப் போக நீயாகவே எல்லாம் தெரிந்து கொள்ளுவாய். இப்போ ஆகவேண்டியதைக் கவனி'.

'வந்ததும் வராததுமாக அப்படி ஓர் உபசரிப்பும், இப்படி ஓர் 'உபதேச'மும் கிட்டியதால், சற்றுக் குழப்பமடைந்தான் கணேசன். இந்த மலைப் பிராந்தியத்தில் ஏதோ ஒரு மர்மம் புனி போல் கவிந்திருப்பதாக அவனுடைய உள்ளுணர்வு உணர்த்தியது.

அன்று சனிக்கிழமையான தால் பாடசாலை இருக்கவில்லை. ஏதோ உத்தியோக விஷயமாகத் தலைமையாசிரியரும், அவருடன் கூட இருந்த உதவியாசிரிய இளைஞரும் 'டவுனு'க்குச் செல்வதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். 'விருப்பமானல் கணேசனும் தங்களுடன் வரலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

பிரயாண அலுப்புக் காரணமாகத் தன்னல் வர இயலவில்லை என்று மறுத்துவிட்டான் கணேசன்.

தலைமையாசிரியரும், உதவியாசிரியரும் போகும் போது கணேசனுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத்தான் சென்றனர். பாடசாலைக்குப் பக்கத்தில் ஒரு 'லயம்' இருந்தது. அதிலிருந்து கிருஷ்ணன் என்ற ஒரு பையனை அழைத்துக் கணேசனுக்கு உதவியாக விட்டுச் சென்றனர். மத்தியானத்துக்கும் சேர்த்துக் காலையிலேயே அவர்கள் சமைத்து வைத்திருந்த சாப்பாட்டையும் கணேசன் சாப்பிடுவதற்காகத் தயாராக வைத்துவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள்.

அந்தப் பாடசாலை அரசாங்க இல்லத்தில் இப்பொழுது கணேசனும், கிருஷ்ணனும் தான் தனியாக இருந்தனர்.

பொழுது போக்கிற்காகச் சும்மா கிருஷ்ணனேடு பேச்சுக் கொடுத்தான் கணேசன்.

'தம்பீ! உன் பேரென்னடா?'

'ஏம் பேரு கிருஷ்ணனுங்க'

'படிக்கிறுயா?'

'ஆமாங்க'

'எந்த வகுப்பு?'

'ரெண்டாவதுங்க!'

'என்னடா இரண்டாம் வகுப்பா? உன் வயது என்ன?

'ஒம்போதுங்க'

'ஒம்போது வயதில் இரண்டாம் வகுப்பா படிக்கின்றுய்? கெட்டிக்காரன்!' என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, தனக்குள்ளாகவே நொந்து கொண்டான் கணேசன். தான் மட்டும் சிந்தித்து முடிவு காணக் கூடிய சமுதாயக் கொடுமை அல்ல இது என்று, பேச்சை வேறு பக்கமாகத் திசை திருப்பினன் கணேசன்.

'இந்தத் தோட்டத்துத் துரை நல்லவராடா கிருஷ்ணு?'

'தெரியாதுங்க!'

'அவருடைய பெயர் என்னடா?'

'ஒக்கின் தொரையுங்க'

'நீ அவருடைய பங்களாவுக்குப் போயிருக்கின்றுயா?'

'சின்னப் பசங்கள் ளாம், அங்கே போவிறதில்லீங்க'

'பெரிய ஆட்கள் தான் போவார்களோ?'

'இல்லீங்க...பொம்புளையாளுங்கதான் போவாங்க!'

'ஏன்டா?'

'தெரியாதுங்க...'

கிருஷ்ணன் இதைச் சொல்லிவிட்டுச் சிரித்துக்கொண்டு தலையைக் கவிழ்த்துக்கொண்டதில் எல்லாம் புரிந்தது கணேசனுக்கு! மேற்கொண்டு அவன் வாயைக் கிளறி அவன் மறைக்க இருந்த இரகசியத்தை வெளிக்குக் கொண்டுவர விரும்பாத கணேசன், மெல்ல அவன் முதுகில் அன்போடு தடவிக் கொடுத்துக்கொண்டு, 'குளிக்கிறதற்கு எங்கேடா போகலாம்?' என்று கேட்டான்.

'பீலிக்கும் போகலாமுங்க; ஆத்துக்கும் போகலாமுங்க'

'எங்கேடா நல்லாக் குளிக்கலாம்?'

'எங்கு வேணுலும் நல்லாக் குளிக்கலாமுங்க. பீலிக்கே போவோமுங்களா?'

'[illegible] ஆத்துக்குப் போறது என்ன?'

'அங்கே இந்த நேரத்தில் பொம்பளையாளுங்க நிறையப்பேர் இருப்பாங்க சேர்'

'பறவாயில்லை. ஆற்றுக்கே போவோம்'

இருவரும் ஆற்றைநோக்கி நடையைக் கட்டினர். சுமார் அரை மைல் தூரத்திலிருந்த ஆற்றுப்படுக்கையை அடைய அரை மணித்தியாலத்துக்கு மேல் பிடித்தது கணேசனுக்கு, கல்லிலும், மலைச்சரிவிலும், தேயிலைக் கன்றுகளுக்கு மூடாகசமதரையில் நடப்பதுபோல் கணேசனுக்கு முந்திக் கொண்டுவிரைந்தான் கிருஷ்ணன். அவனைப் பின்பற்ற முனைந்த கணேசனின் கால்களில் சிராய்ப்பும், வரியும் ஏற்பட்டன. 'இன்னும் போக வேண்டுமா?' 'இன்னும் தூரமா?' என்று கேட்டுக் கொண்டே நடந்தான் கணேசன். கங்கைக் கரையை அடைவதற்குள் கணேசனுக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கிவிட்டது.

ஆனாலும், கரையை அடைந்ததும் அங்கு அவன் கண்ட காட்சி அவனுடைய களைப்பையும், கால்களில் ஏற்பட்டிருந்த காயங்களையும் மறக்கப் பண்ணிவிட்டன.

'கதகத' என்று ஒரே வெதியில் ஓடிக்கொண்டிருந்த கங்கையில் பத்துப்பன்னிரண்டு பெண்கள் நீராடிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே ஒன்றிரண்டு ஆண்களும், சிறுவர்களும் தங்கள் பாட்டில் குளித்துக் கொண்டிருந்தனர்.

பெண்கள் அங்கு குளித்துக் கொண்டிருந்த தோற்றம் கணேசனை என்னவோ செய்தது. அங்கு குளித்துக் கொண்டு நின்ற அத்தனை பெண்களின் மார்புகளிலும் துணிகள் இல்லை! இடுப்பில் ஒரு துணியை மட்டும் கட்டிக் கொண்டு, மார்பகம் முழுக்க அப்படியே தெரியும் வண்ணம் அவர்கள் தங்கள் பாட்டில் குளித்துக்கொண்டு நின்ற காட்சி கணேசனுக்குக் கூச்சத்தை ஏற்படுத்தியது. கணேசன்தான் அப்படிக் கூசினனே தவிர, அங்கு நின்ற பெண்களோ? ஆண்களோ? எந்தவித விகற்பமும் கொண்டதாகத் தெரியவில்லை. தங்கள் பாட்டில் குளிப்பதும், அழுக்குப் போகத் தேய்த்துச் சோப்புப் போடுவதுமாக இருந்தனர். அங்கு நிலவிய இந்த அலட்சியம், கணேசன் உள்ளத்தில் குடிபுகுந்திருந்த கூச்ச உணர்வை மெல்ல மெல்ல விரட்டியடித்தது. கூச்சப்பட்டுத் தங்களைக் 'காத்து'க் கொள்ள வேண்டியவர்களே அதைப் பற்றிக் கவலைப்படாதிருக்கும் போது, நாம் ஏன் மனசைப் போட்டு அலட்டிக் கொள்ள வேண்டும்? நாம் இதைப் பாரதூரமாக எடுத்துக் கொண்டால் நம்முடைய 'அநாகரீகத்தை' அவர்கள் புரிந்து கொண்டு விடுவார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் நம்மைவிட அதிகம் 'பக்குவம்' பெற்றிருக்கின்றூர்கள். அந்தப் 'படி'க்கு நாமும் உயர்ந்து விட்டால் விஷயம் தீர்ந்து போகின்றது' என்று எண்ணமிட்டான் கணேசன்.

அன்று அதிகாலையில் 'பீலி' களில் பார்த்த பெண்களுக்கும், அதன் பின்னல் பங்களாவில் பார்த்த அந்த வெள்ளைக்காரப் பெண்ணுக்கும் ஒரு படி மேலாகக் காட்சியளித்த இந்தக் 'கங்கைக் கரை மோகினி'களைக் கணேசன் மனதார வாழ்த்திக் கொண்டான். ஆடைகளையும், துணி மணிகளையும் மகானுபாவர்களை அவனுடைய உள்ளம் சபித்தது. குறை ஆடைகளுடன் நீரில் குளித்துக் கொண்டு நின்ற மங்கையர்களைக் கண்டதும், கண்ணனுடைய இரசனைத் தன்மையின் மகிமை கணேசனின் உள்ளத்தில் நினைவுக்கு வந்தது.

கோபியர்கள் ஆடைகளைந்து விட்டுக் குளித்துக் கொண்டிருந்த சமயம், கண்ணபிரான் திருட்டுத் தனமாக அவர்களுடைய ஆடைகளனைத்தையும் கவர்ந்து மறைத்து வைத்து 'ஹாட்டி' பண்ணிய அந்தக் காட்சிகணேசனுக்குஇப்போ நினைவுக்கு வந்தது.

அதற்காக அவன் கண்ணனைப் பின் பற்றத் தயாராக இருக்கவில்லை முன் பின் தெரியாத புது இடத்தில் அப்படியொரு விளையாட்டை நாம் செய்யப் போய், அது பெரிய பிரச்சினையில் முடிந்து விட்டால், அதைத் தீர்க்கும் திராணி தன்னிடம் இல்லை என்பதை அவன் ஏலவே நன்கு அறிந்திருந்தான். ஆனபடியால், மனம் அவ்வாறு செய்வதற்கு உந்தினலும், பேசாமல் இருந்து விட்டான்.

பேசாமல் இருந்து விட்டானு? இல்லை! அந்தப் 'பாவனை'யில் 'எல்லாவற்றை'யுமே எடைபோட்டான்.

நாகரீகமான 'வூலன்' துவாயை இடுப்பில் கட்டிக் கொண்டு மெள்ள ஆற்றுள் இறங்கினன் கணேசன். அவன் அப்படி இறங்கிய தோரணை, 'ஊருக்குப் புதுசு' என்பதை ஊரறியப் பறைசாற்றியது. குளித்துக் கொண்டு நின்ற பெண்கள் கணேசனைக் கண்சாடையால்

(11-ம் பக்கம் பார்க்க)

"தன்னறிவோடு பேசும் பேச்சையும், செய்யும், செயலையும் விட, சுய உணர்ச்சியில்லாதபோது வெளிப்படும் குறிப்புகளே ஒருவருடைய உண்மையான இயல்பை உள்ளது உள்ளவாறு காட்டிவிடுகின்றன."

—ராமுவேல்.

## உம் கழுத்து கவனம்....!

—கலையரசன்—

நடித்து வந்த நாடகத்தை
  நடுநிறுத்தி மேடையிலே
குடித்து விட்டு ஆடும்
  கோமாளிக் கும்பல்காள்
படித்துவந்த கொள்கையெலாம்
  பறக்கவிட்டுக் காற்றினிலே
துடித்துழலும் தமிழினத்தின்
  துயர்களைய வந்திரா?

'எலெக்சன்' எனும் கூத்தினிலே
  எட்டப்பர் வேடத்தில்
'செலெக்ச'னும் வந்திங்கு
  'சிற்று'ரிமை கேட்கின்றீர்
மலைக்காதீர் ஒன்று சொல்வேன்
  மகுடத்தை உடைத்தெறிந்து
கலைப்போமும் வேடமென்று
  கருவுகின்றூர் உம்மக்கள்

கோட்டைக்குள் வெட்டுண்டு
  கொடும்பகையாம் எதிரியவன்
வேட்டைக்கு விருந்தளிக்க
  விரும்புகின்றீர் தமிழினத்தை
காட்டிக் கொடுக்கவரும்
  கடமை உமக்கென்றல்
தீட்டிக் கூர்பார்த்த கத்தி
  திரும்பி வரும் உம் கழுத்தில்


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நெ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, சுணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நெ. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆர். எஸ். செல்லத்துரை,**
**யாழ்ப்பாணம்**

கே: சிவசிதம்பரம் சைக்கிள் பவனி செல்கிறாரமே?

ப: மார்ச் 22-ந் திகதி ஓட்டமெடுக்க ஒத்திகையாக இருக்கலாம்.

ஃ

**கல்வயல் அருள் வேலழகன்,**
**சாவகச்சேரி**

கே: வீரகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளில் பக்கங்கள் குறைந்திருக்கின்றனவே தவிர அதன் விலையும் விளம்பரமும் குறைக்கப்படவில்லையே! ஏன்?

ப: இலாபத்தைப் பெருக்க பேப்பர் முதலாளிகள் கையாளும் வழிகளில் இதுவும் ஒன்று.

ஃ

**வே. சிவலிங்கம்,**
**காரைதீவு, கி. மா.**

கே: தற்போதைய காபந்து அரசாங்கத்தின் வானொலிப் பெட்டி இறக்குமதி ஒரு தேர்தற் பிரசாரமா? பொதுப் பிரசாரமா?

ப: தேர்தற் காலத்தில் திடீரென பெருந்தொகையான வானொலிப் பெட்டிகளை இறக்குமதி செய்ததாலும், பத்திரிகைகள் ஐ. தே. கட்சியை ஆதரிப்பதாற்றான் வானொலியை உபயோகிக்கப் போவதாகப் பிரதமர் கூறியிருப்பதாலும், வானொலிப் பெட்டி இறக்குமதி தேர்தற் பிரசாரத்துக்காகவே என்று கருதலாம்.

ஃ

**ச. பாலச்சந்திரன்,**
**வியாபாரிமூலை**

கே: இம்முறை யாழ். மக்கள் திரு. துரையப்பாவை தோற்கடிப்பார்கள், 50 ரூபா பந்தயம் கட்டத் தயாரா?

ப: முடியாது. ரூபா 50 இழக்க நான் தயாரில்லை.

ஃ

**நல்லராஜா, மட்டுநகர்**

கே: சாத்திரி-சிறிமா ஒப்பந்தம் என்ன நிலையில் இருக்கிறது?

ப: சிறிமாவின் கையில் தேர்தற் பிரசாரக் கருவியாக உருமாறி நிற்கிறது.

ஃ

**தேன்மொழி அருளம்பலம்,**
**கல்வயல்**

கே: 25 ஆண்டுகளில் யாழ்ப்பாணம் பாலைவனமாகிவிடும் என்று சிலர் கூறுகிறார்களே! அதற்குள் திருவாளர் வீ. குமாரசுவாமி மகாவலிகங்கையைத் திருப்பிவிட்டால்?

ப: 22-3-65 ந்திகதி கங்கையைக் கொண்டுவர அவர் சிவனொளிபாத மலைக்குப் புறப்படுகிறாராம். திருப்பி வர 5 வருடங்களாகுமாம்.

ஃ

**ச. சுந்தரேஸ்,**
**வல்வெட்டித்துறை**

கே: துரையப்பா மொழியுரிமைக்காக தனக்குக் கிடைத்த பெரும் பதவிகளை உதறித் தள்ளியதாக கூறுகிறாரே?

ப: அவர் பதவிக்காக அலைந்து திரிந்தார் என்று அப்பொழுது கூறப்பட்டது. அவருக்குப் பதவி கிடைத்ததென்பது இப்பொழுது அவர் கூறும்வரை யாருக்கும் தெரியாதிருந்த சிதம்பர இரகசியமாகும். பதவிகளை உதறித் தள்ளினார் என்பது மற்றொரு சிதம்பர இரகசியமாகும். இதையெல்லாம் மக்கள் நம்ப வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார் போலும்.

ஃ

**ச. சபாநேசன்,**
**காரைதீவு**

கே: இவ்வளவு காலமும் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர், பொதுத் தேர்தற் சமயத்தில் தங்களைத் "திறமைசாலிகள்" என்று கூறிக் கொள்வதற்குக் காரணமென்ன?

ப: தூக்கத்தில் தாங்கள் "திறமைசாலிகள்" என்பது தான் காரணம்.

ஃ

**இ. அ. ஜோசப், பண்டாரவளை**

கே: "பொறாமை" என்றால் அதன் பொருள் என்ன?

ப: பொறாமை என்றால் பிறரின் நலன்களை எதிர்ப்பதல்ல. தனக்கும் அத்தகைய நன்மைகள் கிடைக்கவில்லையே என்ற கவலையைப் பிரதிபலிக்கும் எண்ணமே பொறாமையாகும்.

ஃ

**தமிழரசு அபிமானி,**
**ஆனைக்கோட்டை**

கே: இதற்கு முன்பு நான்கு முறை மண் கவ்விய திரு. அருளம்பலம் இப்பொழுது கொக்குவில் கிராம சபை 16-ம் வட்டாரத்தில் கூறியிருக்கிறாராம் தான் தேர்தலில் வென்றால் 'லைற்' போட்டுத் தருவதாக!

ப: (அவர் இப்படிக் கூறியது உண்மையானால்) அவர் தற்போது வகிக்கும் பதவியைக் கொண்டே 'லைற்' போட்டுவிடலாமே. இதைச் செய்வதற்காகப் பாராளுமன்றத்துக்கா போகவேண்டும்?

> **திருவாளர்**
> **குயுக்தியார்**
> **மே/பா சுதந்திரன்**
> **தபால் பெட்டி இல. 1183**
> **கொழும்பு-12.**
>
> **இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.**

**அ. மு இராசேந்திரன்,**
**கோப்பாய்**

கே: ஏதேதோ தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் தலையங்கம் எழுதும் இலங்கைத் தமிழ்த் தினசரிகள் (ஈழநாடு தவிர) இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றியோ, உயிர் நீத்த தியாகிகளைப் பற்றியோ ஒரு தலையங்கம் தானும் எழுதாதது ஏன்?

இதற்கு இரு காரணங்கள் உண்டு. (1) பௌத்தத்தையும் பிக்குகளையும் மார்க்சிய வாதிகளிடமிருந்து பாதுகாக்க இப்பத்திரிகைகள் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருப்பது. (2) இந்தித் திணிப்பை ஆதரிப்பது.

ஃ

**செல்வி ச. அற்புதம்,**
**வெள்ளவத்தை**

கே: அரசியலில் தாம் செய்த அயோக்கியச் செய்கைகளை மறைப்பதற்கு அழகான வார்த்தைகளை உபயோகிப்பவர்களைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

ப: வாய் வீச்சு வீரர்கள் என்பவர் அவர்கள் தான். அவர்களால் செய்யக் கூடிய சாதனை ஒன்றே ஒன்றுதான். அதுதான "சரணாகதி".

கே: சென்ற தேர்தலில் தமிழரசார் பெற்ற வாக்குத் தொகையை இத் தேர்தலிலும் பெற்றுவிடாமல் தடுப்பதற்கு தொகுதிகள் தோறும் சுயேச்சை அபேட்சகர்களைத் தேர்தலில் நிற்குமாறு செய்துள்ளார்கள் என்று கூறப்படுவது உண்மையா?

ப: இதில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால் தமிழ் பேசும் வாக்காளரிடம் அந்தத் தந்திரம் பலிக்காது.

கே: சனநாயகம் மேடையில் பேசிவிட்டு வாக்குகளை விலைக்கு வாங்குவதைப் பற்றி என்ன எண்ணுகிறீர்?

ப: அதுதான் அவர்களின் சனநாயகம். மேடையிற் பேசிய சனநாயகத்தை செயலில் அமுல் நடத்துகிறார்கள்.

ஃ

**இரா. வெ. அழகர்சாமி,**
**பண்டாரவளை**

கே: இலங்கை அரசு அஞ்சற் தலைகளில் மூன்று மொழிகளையும் பயன்படுத்துவதைப் போல் இந்திய அரசும் தமிழ் நாட்டிற்கு, அஞ்சற்தலை, அஞ்சல் அட்டை, தேதி முத்திரை (இன்னும் அஞ்சற்துறை அனைத்திலும்) இவைகளில் தமிழ்-இந்தி-ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பயன்படுத்தினால் நம் தமிழ் மொழியும் வளர்வதோடு வட நாட்டாரின் இந்தி வெறியும் குறையும் என்கிறேன் நான். இப்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் மொழிவாரி செய்துவிட்டால் இந்திய மொழிகள் அனைத்தும் வளர வாய்ப்புள்ள இருப்பதோடு மொழிச்சிக்கலும் குறையுமல்லவா?

ப: உங்கள் யோசனைக்கு ஒரு சிறு திருத்தம்—அனைவருக்கும் பொது மொழியான ஆங்கிலத்தை உபயோகிப்பதானால் இந்தி எதற்கு? பிரதேச மொழியும் ஆங்கிலமும் மட்டும் போதுமே!

**நா. சிவேந்திரன், கிருலப்பனை**

கே: ஒன்பது வருடங்களில் தமிழரசால் செய்ய முடியாததைத் தான் 2 வருடங்களில் நிறைவேற்றிக் கொடுப்பதாகத் திரு. பொன்னம்பலம் கூறுகிறாரே!

ப: காலத்தைப் பொறுத்த வரையில் அவர் சொல்லுவது தவறு. 2 வருடங்கள் ஏன்? இரண்டே நாளில் மந்திரிப் பதவியைக் கைப்பற்றி விடுவார் அவரும் வென்று, அவரது ஜனநாயகக்கட்சியானயு என்.பியும் வென்றால்.

கே: தமிழரசும், பொன்னம்பலம் கட்சியும் வடக்கு கிழக்கில் எத்தனை ஸ்தானங்களைக் கைப்பற்றுவார்கள் என்று சிங்களக் கட்சிகள் கணக்குப் பார்க்கின்றனவே. ஏன்?

ப: பொன்னம்பலம் கட்சி சில ஆசனங்களையாவது கைப்பற்றினால், பதவிகளைக் கொடுத்து மயக்கி தமிழ் இனத்தின் உரிமைகளை என்றென்றும் சூறையாடலாம் என்று யு. என். பி. திட்டமிடுகிறது. தமிழரசுக்கட்சி தமிழ்ப்பகுதி ஆசனங்களையெல்லாம் கைபபற்றிவிட்டால், உரிமைகளை வழங்கினாலன்றி தாங்கள் ஆட்சி செலுத்த முடியாத நிலை ஏற்படுமே என்று யு. என். பி. சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டும் அஞ்சுகின்றன.

ஃ

**மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு**

கே: காங்கேசன்துறைத் தொகுதியில் ஸ்ரீ பாஸ்கரனை ஆதரிக்கும் கூட்டத்திற்குச் சென்றேன். அங்கு வந்த சாவகச்சேரியிலுள்ள அதே கட்சி பிரமுகர் ஒருவர் தமிழ் மக்களின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தான் என்றும் பங்குனி 22-ம் திகதி தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியைப் போட்டுத் தமிழரசுக் கட்சியை ஏகோபித்து அனுப்புங்கள் என்றும் பேசினரே.

ப: இதன் அர்த்தம் தமிழரசு வேட்பாளர் அனைவரையும் ஏகோபித்துத் தெரிவு செய்ய வேண்டுமென்பது தான். மேடையில் ஏறியதும் சொல்லவிருந்த பொய்யை மறந்து உண்மையைப் பேசிவிட்டார்.

கே: திரு டட்லி சேனநாயக்காவின் தற்போதைய அரசியல் நிலை என்ன?

ப: திரிசங்கு நிலை தான் அவரது அரசியல் நிலை. தில்லி ஒப்பந்தத்தை ஆதரித்தால் தமிழர் வாக்கு கிடைக்காது. எதிர்த்தால், சிங்களவர் வாக்குக்கிடைக்காது. எனவே இரண்டுமின்றி அந்தரத்தில் தொங்குகிறார்.

---

### ஒன்பதுக்கு முன்னர்

தமிழரசுக்கட்சி கடந்த ஒன்பது வருடங்களாக தமிழ்பேசும் மக்களுக்கு சொல்லொணாத கஷ்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

—ஜீ ஜீ பொன்னம்பலம்.

உண்மைதான்! இந்தக் கஷ்டங்கள் எவையும் இன்று தலைதூக்குவதற்கான ஆயத்தங்களை அன்று தாமே புரிந்து விட்டதை மறைமுகமாகக் கூறுகிறார்.

### தீர்த்த பிரச்சினை எது?

தமிழ்பேசும்மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் எதையும் தமிழரசுக்கட்சி தீர்த்ததில்லை.

—ஜி. ஜீ. பொன்னம்பலம்.

தமிழ்பேசும் மக்களை தட்டி எழுப்பி தனிப்பெரும் தலைவராகிய இவர் எந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைத்தார் என்று நமது விடாக்கண்டர் ஒரு கேள்வியை விடுத்துள்ளார்.

### அடிப்படை

தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற வேண்டுமானல் தமிழ் காங்கிரஸ் அபேட்சகரையே தேர்ந்தனுப்பவேண்டும்.

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்.



ஏது...! அடிப்படை உரிமை என்பது தமிழர் ஒருவர் மந்திரிப்பதவி ஒன்றைப் பெறுவது தான் போலிருக்கிறது, என்று சந்தேகப் பிராணி ஒருவர் கேட்கிறார்.

### மந்தி(ரி)ர—சக்தி

தமிழரசுக்கட்சி அதன் தவறுதல்களினால் சிங்கள மக்களின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டுள்ளது.

—ஜி ஜீ. பொன்னம்பலம்.

அந்த விரோதத்தை நீக்குவதற்கு மந்தி (ரி) ர—சக்தி பிரயோகங்கள் சில வற்றைப் பாவிக்கத் திட்டங்கள் தயாரித்துள்ளார் போலும்.

### ஒப்பந்தம் உண்டோ?

தமிழ் மக்களின் கோரிக்கைகள் எதுவும் தமிழரசுக் கட்சியால் எடுக்கும் நடவடிக்கைகளால் நிறைவேறமாட்டா.

—ஜீ ஜீ. பொன்னம்பலம்.

தன்னால் மட்டுமேதான் நிறைவேற்றப்படலாம் என்று கூறுவதனால், ஏதோ இரகசிய ஒப்பந்தம் ஒன்றினை எவருடனோ வைத்துள்ளார் போலும்.

### முடங்காதிருக்க......!

இலங்கை முழுவதிலும் தமிழுக்கும் தமிழருக்கும் உரிமைகள் இருக்க வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களுள் மட்டும் தமிழ் உரிமை முடங்குவதை நான் சம்மதிக்கமாட்டேன்.

—ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

குந்துவதற்கே இடமில்லாத ஆண்டி ஊருகளெல்லாம் சொந்தம் கொண்டாடினானும். அதுபோலத் தானிருக்கிறது இக்கூற்று. தமிழ் பிரதேசத்திலேயே தமிழை ஒழித்துக்கட்ட நினைப்பவர்கள் அகில இலங்கையிலும் தமிழுக்கு [illegible] களா?



# ரிஷி லேகியம்

**ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்**

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர வைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கணைகால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-50**
**30 நாள் டின் ரூபா 6-50**

தபால் செலவு /-95

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த கூட்டணி வேட்பாளர்கள்?

வட—கிழக்கு மாகாணங்களில் கூட்டணி வேட்பாளர்கள் என்ற பெயரில் எழுவர் போட்டியிடுகிறார்கள் இவர்களில் நால்வர் கடந்த பொதுத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுக்கட்சியினதும், சமசமாசக் கட்சியினதும் வேட்பாளர்களாகப் போட்டியிட்டிருக்கிறார்கள். இம்முறை சமசமாச-கம்யூனிச 'லேபி'ளுடன் கூட்டணி என்ற புது 'லேபி'ளையும் தாங்கியுள்ளார்கள்.

கூட்டணி என்ற பதத்திற்கு வட-கிழக்கு மாகாணத்தில் இவர்கள் கொடுக்கும் விளக்கம் சமசமாசக் கட்சியினதும் கம்யூனிஸ்டுக் கட்சியினதும் ஐக்கிய முன்னணி என்பதாகும். இந்த ஐக்கிய முன்னணி என்று உருவானது? இந்த முன்னணியின் அடிப்படை வேலைத்திட்டம் என்ன? இந்த முன்னணியுடன் சட்சாத் கம்யூனிஸ்டுக்கட்சியும், சமசமாசக்கட்சியும் மட்டும்தான் இணைந்துள்ளனவா? என்ற கேள்விகளுக்கு இந்த கூட்டணி வீரர்கள் ஏனோ விளக்கம் கொடுக்க மறுக்கிறார்கள். தேர்தலையொட்டி இவர்கள் வெளியிடும் துண்டுப் பிரசுரங்களிலும் 'சமசமாச-கம்யூனிச கூட்டணி' என்றே குறிப்பிடுகிறார்கள்.

### உண்மையை மறைக்கிறார்கள்

ஆனால், தென்னிலங்கையிலோ சமசமாசிகள் திருமதி சிறிமா அம்மையாரின் சுதந்திரக் கட்சியுடன் இணைந்திருப்பதுடன், திருமதி சிறிமா அம்மையார் அவர்களை இக்கூட்டணியின் தலைவராகவும் ஏற்றுள்ளார்கள், இந்த உண்மையை ஏனோ வட-கிழக்கு இலங்கையில் தெரிவிக்க மறுக்கிறார்கள்.

இந்தக் கூட்டணிபற்றிய விபரத்தையோ அல்லது இக்கூட்டணி என்றுஉருவாக்கப்பட்டது என்ற உண்மையையோ இவர்கள மறந்தும்கூறுகிறார்களில்லை. கடந்தஆண்டு சுதந்திரக் கட்சியுடன் சமசமாசக்கட்சி இரண்டறக் கலந்து கூட்டரசாங்கத்தை உருவாக்கிய நாளிலிருந்து இக்கூட்டணியும் அமைக்கப்பட்டது.

### சிங்களம் மட்டும்

சமசமாசக்கட்சியும் கம்யூனிஸ்டுக்கட்சியும் நீண்டகாலமாக தேசியவாதம் பேசிக்கொண்டுதமிழ்மக்கள் மத்தியிலும் நடமாடி வந்தார்கள 1956ம ஆண்டு சிங்களம் மட்டும் என்ற பிரச்சினை தோன்றிய பொழுது முதலிற் கம்யூனிஸ்டுக் கட்சி சிறிது ஆட்டங்கண்டது, 1959ம் ஆண்டு கம்யூனிஸ்டுககட்சி பகிரங்கமாகவே சிங்களம்மட்டும் சட்டத்தை ஏறறுக்கொண்டோம் என்று கூறியது இச்சமயத்தில் சமசமாசககட்சியினர் சிலர் (எல்லாருமல்ல) கம்யூனிஸ்டுக்கட்சியினரைப் பிற்போக்குவாதிகள் என்று வர்ணித்தனர்.

ஆனல், 1960ம் ஆண்டு சமசமாசக் கட்சியும் தனது நிலையில் தளப்பங்கண்டது. முடிவில் அவர்களும் சிங்களம்மட்டும் என்றனர்.

1963ம் ஆண்டு உருவான இடதுசாரி ஐக்கிய முன்னணி பகிரங்கமாக சிங்களம் மட்டும் என்று கூறியது இடதுசாரி ஐக்கிய முன்னணியை இறுதியாக அதில் சாகடித்துவிட்டு, அப்பிணத்தின்முதுகில் பாதத்தை வைத்து சுதந்திரக்கட்சியின் அமைச்சரவையில் எட்டி இடம் பிடித்தார்கள் சமசமாசக்கட்சியினர். கம்யூனிஸ்டுக் கட்சியினரும் அமைச்சரவைக்குள் இடம்பிடிக்க எட்டினார்கள் முடியவில்லை. முன்னாள் அமைச்சர் பிலிப் குணவர்த்தன அவர்கள் அமைச்சர் பதவி எட்டாது என்றதும்,அது புளிக்கும் என்று கூறிவிட்டார்.

### சிறிமாவின் வேட்பாளர்கள்

சமசமாசக் கட்சியினரைத் தங்களுடன் இணைந்துக் கொள்ள முன்னர் சுதந்திரக் கட்சியினர் பதின்மூன்று அம்சங்களைக்கொண்ட திட்டம் ஒன்றைசமசமாசக்கட்சியின

**பூங்குன்றன்**

ரிடம் கொடுத்து அதை ஏற்றுக்கொள்வதென்றால் இணைத்துக் கொள்வதாகக் கூறினர்கள். சமசமாசக் கட்சியினரும் அந்தப் பதின்மூன்று அம்சத் திட்டத்தை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டு அமைச்சரவையில் இடம் பிடித்தனர்.

இந்த பதின்மூன்று அம்சத் திட்டத்தின்படி மொழி, மதம், இலங்கை-இந்திய பிரச்சினை ஆகியவற்றில் சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை சமசமாசக் கட்சியினர் ஏற்றுக் கொள்வதுடன், பொதுத் தேர்தலிலும் இவர்களின் வேட்பாளரை தெரிவு செய்யும் பொறுப்பை திருமதி சிறிமா அம்மையாரிடம் ஒப்படைத்தனர்.

ஒப்பந்தத்தின் பிரகாரமே இம் முறை வேட்பாளர் தெரிவு நடைபெற்றது. எனவே வட—கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் சமசமாச வேட்பாளர்களான எழுவரும் திருமதி சிறிமா அம்மையாரால் நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள் என்று கருதலாம். இதனை இவர்கள் மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது.

### கூட்டணியின் கொள்கை

மொழி, மதம், இலங்கை-இந்திய பிரச்சினைகளில்சுதந்திரக்கட்சியினரின் கொள்கைகளை இம்மியும் மாறாது ஏற்றுக்கொண்டனர் சமசமாசிகள் என்பதை அண்மையில் கம்பகாத் தொகுதியிலுள்ள நில்வந்தனை என்னுமிடத்தில் உணவு விவசாய அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நிகழ்த்திய பேச்சு உறுதிப்படுத்துகிறது.

'1964-ம் ஆண்டுக்கு முன்னர் நாங்கள் சமசமாசக்கட்சியுடனும், கம்யூனிஸ்டுக்கட்சியுடனும் தோதற் போட்டித் தவிப்பு ஒப்பந்தமே செய்து கொண்டோம் ஆனல், இத் தடவை நாங்கள மார்க்சியவாதிகளுடன கூட்டரசாங்கம் உருவாக்கிக் கொண்டோம். காரணம், மார்க்சியவாதிகள் காலம் சென்ற திரு. பண்டாரநாயக்கா மொழி, மதம்,இலங்கை-இந்தியப் பிரச்சினை ஆகியவற்றையிட்டுக் கருத்திற் கொண்டிருந்த கொள்கைகளை ஏற்றுக்கொண்டமையே' என்று திரு பீலிக்ஸ் டயஸ் கூறியுள்ளார்.

வர்த்தக அமைச்சர் திரு இலங்கரத்தின 'சமசமாசக்கட்சியும், கம்யூனிஸ்டுக்கட்சியும் 30 வருட காலத்திய அரசியல் வாழ்வை மறந்துஉண்மையான சோசலிசத்துக்காக (சோசலிசமா? வகுப்புவாதமா?) எங்கள் கட்சியுடன்தேர்தலில் கூட்டுச்சேர்ந்தன' என்று தெளிவாக சமசமாசக் கட்சியினதும்—கம்யூனிஸ்டுக் கட்சியினதும் அரசியற் புரட்டை அம்பலப்படுத்தியுள்ளார்.

### வகுப்புவாதமும் இனவொழிப்பும்

சுதந்திரக்கட்சி தனித்து நின்று ஆட்சி நடாத்துங்கால் வகுப்புவாதிகளாகமட்டுமே இயங்கினர்கள். ஆனல், சமசமாசக்கட்சி சுதந்திரக்கட்சியுடன் இணைந்தபின் வகுப்புவாதம் தீவிர இனவொழிப்புவாதமாகவடிவெடுத்தது. தமிழ்பேசும் மக்களை சுதந்திரக் கட்சி அரசினல் அடக்கி ஒடுக்கமட்டுமே முடிந்தது. ஆனல் கூட்டரசாங்கம் அடக்கி ஒடுக்குவதுடன் மட்டுமல்ல தமிழ்பேசும் மக்களை அழித்தொழிக்கவும் முற்பட்டது.

கூட்டரசாங்கம் தோன்றிய பின்னர் தமிழ்பேசும் மக்கள் சகல துறைகளிலும் ஒடுக்கப்பட்டார்கள். பௌத்த மதத்திற்கு அரசியல் அந்தஸ்துக் கொடுப்பதற்காக, சிறுபான்மையினருக்கு ஓரளவு பாதுகாப்புக்கொடுக்கும் அரசியற் சட்டத்தின் 29ம் பிரிவை மாற்றியமைக்கவும் கூட்டரசாங்கமே முதல் முதலாக நடவடிக்கை எடுத்தது இந்த உண்மையை அரசியல் அரிச்சுவடி தெரிந்தவர்களே அறிவார்கள். கூட்டரசாங்கம் எடுத்த தலையாய இனவொழிப்பு நடவடிக்கை இதுவாகும். இந்த உண்மையை எந்த சமசமாச-கம்யூனிசவாதியும் மறுக்கவோ அல்லது மறைக்கவோமுடியாது.

### பிரச்சாரப் படம்

கொழும்பு நகரவிதிகளில் 25 சதததிற்கு விற்பனையாகும் ஒரு படம் மேலும் இக்கூட்டணியினரின் இனவொழிப்பு நடவடிக்கையை அம்பலப் படுத்துவதாக உள்ளது. கூட்டரசாங்கத்தின் முதல்வர் திருமதி சிறிமா அவர்கள் திரு. லால்பகதூர் சாத்திரியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையிலுள்ள நாடற்றவர்கள் என்று கூறப்படும் தமிழ் மக்களை கப்பலேற்றி இந்தியாவுக்கு அனுப்பிவருவதாகவும், புத்த மதத்தின் புகழைக் கொடிகட்டிப் பறக்கச் செய்துள்ளதாகவும் அப்படத்தில் தெரி-

(9-ம் பக்கம் பார்க்க)



பொரளை ஜே ஜி. சில்வா என்பவரால் வெளியிடப்பட்டுள்ள இப்படம் வளவளப்பான கடுதாசியில் பெரிய அளவில் அச்சிடப்பட்டு கொழும்பு நகரில் விற்பனையாகிறது. இதற்கு ஒரு சிங்களக் கவிதை மூலம் படவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது "பரிசுத்தமான பக்தியுடன் பௌத்த சமயத்தைப் பாதுகாத்துக் கொண்டு, தோட்டப்பகுதித் தமிழர்களை அனுப்பி, தாயகத்தில் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீ லங்கா மண்ணில் வந்திறங்கும் சிறி தெய்வ ராணியை வரவேற்போம்! நாட்டைக் காக்கும் பிரதமர் சிறிமாவோ வாழ்க!" என்பது அக்கவிதையின் கருத்து இப்படத்தில் அச்சகத்தின் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கிறதெனினும், அச்சிடப்பட்ட திகதி குறிப்பிடப்படவில்லை.

# தமிழ்த் தொண்டன் அப்பையாசாமியார்

ஈாடு மெலிந்த உருவம். நரைத்த தாடி. பனையோலையாற் செய்யப்பட்ட தொப்பியுடன், ஈருருளிவண்டியின் இருபக்கங்களிலும் 'காட்போட்' மட்டையினுற் செய்யப்பட்ட தமிழ் மொழி பற்றிய விளம்பரம். இத் தோற்றத்துடன் யாழ்ப்பாண நகர விதிகளில் குறிப்பாகபஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள வீதிகளில், ஒருவரை நாம் கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சந்தித்து வந்துள்ளோம்.

மாலை நேரங்களில் யாழ். நகர வீதியோரங்களில் இவரைச்சுற்றி நான்கு ஐந்து இளைஞர்கள் நிற்பார்கள், சிரித்துச் சிரித்து அவர்களுக்குக் ஏதோ சொல்லிக் கொண்டு நிற்பார். சில சமயங்களில் இவருடன் சிலர் வாதிக்க முற்படுவார்கள். அப்பொழுதும் சிரித்துக் கொண்டே வாதிப்பார். அவரின் பேச்சு தமிழ், தமிழினம் என்ற அடிப்படையிலேயே இருக்கும்.

தமிழரசுக்கட்சி வட்டாரத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் இவரிடம் தனி மரியாதை செலுத்துவார்கள். 'சாமியார்' என்று அன்பாகவும், பண்பாகவும் அழைப்பார்கள். அவரும் வயது வேற்றுமையோ, பதவியேற்றத் தாழ்வோ பாராது 'தம்பி' என்று அனைவரையும் அன்புடன் அழைப்பார். இந்த அன்புள்ளம் கொண்ட தமிழ்த் தொண்டனை இத்திங்கள 16ம் நாள் நாம் இழந்து விட்டோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இயங்கும் உறுப்பினராக ஆரம்ப காலம் முதற் தொண்டு புரிந்து வந்த இவர் மலேயாவில் புகையிர நிலைய முதல்வராக இருந்து இளைப்பாறியவர். 1956ம ஆண்டு யூன்மாதம் ஐந்தாம் திகதி காலிமுகக் கடற்கரையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்திற் கலந்து கொண்டு காடையரின் கல்லடிக்கும் பொல்லடிக்கும் இலக்காகியுள்ளார்.

1961ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் உரிமைப் போராட்டத்திற் கலந்து கொண்டிருக்கும் கால் இவரின் வாழ்க்கைத் துணைவியார் தங்கம்மா அவர்கள் மருத்துவமனையில் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தார். மனைவியார் இயற்கையெய்தி விட்டார் என்பதை அறிந்த பின்னரே போராட்டக் களத்தை விட்டு இல்லாளுக்கு இறுதிக் கடமைகள் செய்ய விரைந்தார். இரவு பகல் என்று பாராது தமிழினத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் தொண்டர் இவர். தமது இளைப்பாற்றுப்படி [illegible] பெரும் பகுதியை [illegible] தமிழ்ப்பணிக்கே செலவு செய்து வந்துள்ளார்.

'நான்' என்ற எண்ணம் தமிழ் மக்கள் மத்தியிலிருந்துஒழிந்து'நாங்கள்'என்ற பரந்த ஒற்றுமை நோக்கு ஏற்பட வேண்டும் என்று எப்பொழுதும் கூறுவார். 'தனிப்பெரும் தலைவருடைய' 'நான்' என்ற கர்வத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டி விளக்குவார்.

தமது கருத்தைப் அன்பாகவும் பண்பாகவும் மாற்றார் உள்ளத்தில் பதியும் வண்ணம் எடுத்துக் கூறும் இவர், தமது இருருளி வண்டியையும் ஒரு பிரச்சாரக் கருவியாகப் பயன் படுத்தியுள்ளமை பலரும் அறிந்ததே. அன்னலட்சுமி, கமலலட்சுமி, செல்வலட்சுமி, தெய்வேந்திரன் ஆகிய நாலு பிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்த போதும் தமிழ் இனம் சமுதாயம் முழுவதும் தனது செல்வக் குழந்தைகள் என்றே கருதிச் சேவை செய்து வந்தார்.

திரு பொன்னம்பலம் அப்பையா அவர்களின் மறைவினுல் தமிழ்த்தாய் தனது உண்மையான தொண்டனை இழந்து விட்டாள். இலங்கைத தமிழரசுக் கட்சி தனது இயங்கும் உறுப்பினர் ஒருவரையல்ல சாதாரண மக்கள் மத்தியில் பிசாரம் செய்த திரிந்த ஒரு பிரசாரப் பீரங்கியை இழந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் மக்களின் கரைகாணா உற்சாகம்

## தமிழரசு வேட்பாளருக்கு திரளும் ஆதரவு

## வெற்றி நிச்சயம்

பொத்துவில் தொகுதி தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாப் எம். எஸ். காதர் அவர்களுக்கு பொத்துவில் வாக்காளப் பெரு மக்கள் கொடுத்து வரும் ஆதரவை பார்த்தால் இம்முறை தேர்தலில் அவர் மிகக் கூடுதலான அதிகப்படி வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்பது நிச்சயமாகி விட்டதென நமக்குக்கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரிய வருகிறது.

பொத்துவில் தொகுதியை பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களையே தங்கள் உயிருக்கும் மேலாக மதிப்பவர் வாழும் பகுதியாகும் தமிழ் மொழியின் பால் அமோகமான பற்றும், தன்மான உணர்ச்சியும் நிரம்பப் பெற்ற திருக்கோயில், தம்பிலுவில் ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் தமிழரசுக் கட்சியின் ஆணையைக் கேட்டு அதற்கேற்ற படி இதுவரை நடக்கப் பழகியவர்கள். இத் தொகுதியினுள்ள தமிழ் கிராமங்களில் வாழும் ஒவ்வொரு தமிழனும் தமிழ் மொழியையே தன்னுயிராகக் கருதுபவன்.



எம். எஸ். காதர்

தமிழ் காக்கும் படையான தமிழரசுப் படையை தனது கவசமாக அணிந்து கொள்வதில் பெருமைப்படுபவன்.

தியாக மனப்பான்மையில் ஊறித் திளைத்த இத் தமிழ் மக்களிடத்தில் உருட்டுப்புரட்டுச் செய்து கொள்கை விற்றுப் பிழைப்பவர்கள் கட்டிவிடும் புரளிகள் எதுவுமே பலியாது என்பது திண்ணம்.

கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி காட்டிய பாதையிலேயே இம் மக்கள் நடந்து வந்துள்ளனர். தாய்த்தமிழின் பெயர் சொல்லி, இம் மக்களின் ஆதரவை நாடி வந்தவர்களை இம் மக்கள் அமோகமாக ஆதரித்தனர். தீர்ப்பளிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லையென்பதை உணராது பாதை மாறிய

**நமது விசேட நிருபர்**

வர்கள் பல தடவைகள் இம் மக்களிடத்திலிருந்து செம்மையான பரிசு பெற்று ஒதுங்கியுள்ளனர். மீண்டும் பொத்துவில் மக்களை ஏமாற்ற நினைப்பவர்களுக்கும் கடந்த கால அரசியற பாடத்தைப் புகட்டவே இன்று இம்மக்கள் தயாராகிக் கொண்டுள்ளனர்.

பொத்துவில் தொகுதி மக்களின் தன்மையை நன்குணர்ந்த தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் அவர்கள் இதே பக்கத்தில் உள்ள வேண்டுகோளை விடுத்துள்ளார். தந்தையின் வார்த்தையை மந்திரமாகக் கொண்டு பொத்துவில் வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் செயற்படுவார்கள் என்பதனால் நிச்சயமாக தமிழரசு வேட்பாளர் ஜனாப். காதர் வெற்றியீட்டுவார் என்பது திண்ணம்.

## கட்சி வேட்பாளரையே ஆதரியுங்கள்!

அன்புடையீர்!

எமது கட்சி தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் பொதுவான ஒரு கட்சி.

தொகுதி பிரித்த ஆணைக் கழகத்தினர் கிழக்கு மாகாணத்தில் ஐந்து தொகுதிகளை முஸ்லீம்களுக்கும் ஐந்து தொகுதிகளைத் தமிழருக்காகவும் பிரித்தனர். இதில் பொத்துவில் தொகுதி முஸ்லீம்களுக்காக ஒதுக்கப்பட்டது. ஆகையால் தமிழரசுக் கட்சி இத்தொகுதியில் ஒரு தமிழரை வேட்பாளராகப் போடவில்லை. ஆகவே ஒரு முஸ்லீமாகிய ஜனாப். எம் எஸ். காதரை நியமித்திருக்கிறோம் தமிழராகிய உங்களின் தேவை என்னவென்றால் தமிழரசுக் கட்சி வெற்றிபெற வேண்டுமென்பதேயன்றி தமிழன் ஒருவன் வெற்றி பெறுவதில் ஒரு பிரயோசனமுமில்லை.

ஆகவே உங்கள் முழு ஆதரவையும் எமது கட்சி வேட்பாளர் ஜனாப். எம். எஸ். காதர் அவர்களுக்கே கொடுங்கள்.

இவ்வண்ணம்
(ஒப்பம்) சா ஜே வே செல்வநாயகம்

## சந்தித்து வந்தவை

காலைக்கண்ணன்

நமது தேர்தல் சஞ்சாரத்தில் ஒரு பெரும் புதுமை! அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், போட்டியிடுபவர்கள் மோட்டாரிலும், ரயிலிலும், விமானங்களிலும் செல்வதுண்டு. நாமும் குறைந்தவர்களல்ல. நாமும் விமானத்தில் பறந்து பிரசாரம் செய்தோம். மேல்நாட்டில் பல நாட்கள் தொடர்ந்து விமானங்களில் சென்று பிரசாரம் செய்வார்கள். ஆனால் ஆசு 15 நிமிடங்கள் மட்டும் பிரசாரம் செய்தோம்!

நமது சொந்த அலுவலுக்காக நாம் அடிக்கடி கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விமானத்தில் பயணம் செய்வதுண்டு இம்முறை நமது பயணத்தில் ஏற்பட்ட ஒரு சிறு வாய்ப்புத்தான்

### 15 நிமிட புதுமைப் பிரசாரம்

அந்தப் புதுமை—அதை பயன்படுத்திய முறைதான் பெரும் வேடிக்கை.

சுற்றி வளைத்து மூக்கைத் தொடுவது போல, சில நாட்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகளை, இலங்கை விமானங்கள் கல்லோயா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் இழுத்துச் சென்று விடுகின்றன. முன்பெல்லாம் இது பெரிய தொல்லையாகத் தெரிவது உண்டு. ஆனால் இத் தேர்தல் காலத்தில் இத்தகைய சுற்று விமானப் பயணம் ஜனாதிபதி ஜோன்சனின் பிரசார வேலை களிலும் பார்க்க எனக்குப் பன்மடங்கு உதவி செய்து விட்டன.

நான் யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருந்த விமானம் மட்டக்களப்புக்கும் சென்று 15 நிமிடங்கள் தங்கும் என்பதை அறிந்ததும், ஆக ரூ. 2-50 சதம் செலவில் ஒரு 'டெலிபோன்' போட்டேன். நமது மட்டக்களப்புப் பகுதி வேட்பாளர்களைக் கண்டு பேச நமக்கு ஒரு 15 நிமிட அவகாசம் கிடைத்தது பற்றி மகிழ்ந்தேன். விமானம் மட்டக்களப்பில் கரை தட்டப் போகும்போது நமது கட்சி வேட்பாள 'அறிவாளிகள்' ஒரு குதூகல விழா வைப்பார்கள் என்று எண்ணினேன். கேவலம்...! வெறும் கடுதாசி மாலைகளாவது கொண்டு வராமல் தனி மரங்களாக வந்து காட்சி கொடுத்தனர்.

சமாளித்துக் கொண்டு, கள்ளக் கும்பிடு போட்டு விட்டு மனதால் வைது கொண்டேன். எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போன்று நமது அறிவாளத் தோழர்கள் நம்மிடம் தேர்தல் செலவு கேட்கத் தலைப்பட்டனர்.

சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறப்பது போன்று நாமும் எமது கண்களாலேயே சில காரியங்களை முடித்து விடுவதுண்டு. ஒரு முறை உருட்டிவிட்டு நிமிர்ந்தேன். இரண்டடி பின்சென்று விட்டனர் ஒருவாறு சமாதானம் கூறிவிட்டு கிளம்பி

### தண்டத்துக்கு முன் தமிழறிஞர்

விட்டேன். எப்படியோ நமது வேட்பாளர்களுக்கு எம்தலை கறுப்பைக் கண்டதில் கரை கடந்த மகிழ்ச்சி. வோட்டுக்கள் கிடைக்காவிட்டாலும் தாங்கள் தலைவன் தங்களைக் கைவிடவில்லை என்பது அவர்கள் பெரும் எண்ணம்.

ஜீனிநொச்சியில் முன்பு நமக்குச் சாதகமாகப் பல வேலைகளை முடித்து வைத்திருந்த அந்தப் பழைய புள்ளியைத் தேடித் திரிந்தும் காண முடியவில்லை. ஓடி ஒளிந்து கொள்ளுபவரைத் தேடித் திரிவதில் பயனில்லை என்பதனால், நமது வேட்பாளரை அணுகிக் குசலம் விசாரித்தேன. சாம, பேத, தான, தண்டம் முதலிய நான்கு முறைகளையும் கையாண்டே காரியத்தை முடிக்கும்படி நமது வேட்பாளருக்குப் புத்தி கூறினேன்.

"தமிழ் படித்த தமிழறிஞர்களுக்கு பயம் அதிகமாக இருக்குமாகையினால், தமிழ் படித்தவர்களைச் சாம, பேத, தானத்தால் அசைக்க முடியாது. ஆகவே இறுதியான ஆயுதமான தண்டத்தை உபயோகித்தால் அவர்கள் பயந்து ஒதுங்கி விடுவார்கள். ஆகவே போதுமான குண்டர்களைத் தயார் செய்து தண்டத்துக்குத தூண்டிவிடும்' என்று கூறினேன். நமது சீடனல்லவா? உடனே தண்டச் சோற்றுப் பயல்கள் சிலரை ஆயத்தம் செய்துவிட்டான்.

ஆனாலும் இந்தத் தண்ட ஆயுதமும் அந்தக் தமிழ் காக்கும் தமிழறிஞர்களிடம் தெண்டனிட்டு விட்டதாக அறிந்து, 'அதைரியப்பட வேண்டாம்' என்று எமது வேட்பாளருக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தோம்

பேதம் செய்து வெல்லுவதில் வல்லவராகத் திகழும் ஒருவரை இம்முறை நாமே மந்திர பேதம் செய்து வெற்றி கண்டு கொண்டோம். இந்தப் பிரகிருதி முன்பெல்லாம் எமக்கும் எமது அறிவாளர் கட்சிக்கும் எமன் போன்று

### 'எட்டப்பர்' என்றால் என்ன?

கொக்கரித்தவர்; இன்று எம்முடனே ஐக்கியப்பட்டு விட்டார்.

யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான் என்று பேதகத் ... விட்டு அந்த ... யல் ஏணியாகப் பாவித்து விட்டு அதையே உதறித் தள்ளிவிட்டு இன்று ஐக்கியப்பட்டு விட்டார் நம்முடன். ஆனால் எமகாதகப் பேர்வழியான இவரை இலகுவில் நம்பிவிடுவோமோ...... என்ன?

நமது நோக்கங்களுக்குக் கருவியாகப் பாவிக்க வல்ல கைகாட்டி மரம் ஒன்று நம்முடன் இணைந்துவிட அரும் பாடுபட்டு விட்டு தானே ஒதுங்கி விட்டது. பாவம் நம்மைப் போன்று உருட்டுப் புரட்டுகள் அதிகமாக இவருக்கும் கைவரும். இன்றும் நாம் முதலில் ஆட்டி வைக்க ஆரம்பித்தால் நமக்காக இது ஆடும். நமக்காக கை காட்டும்.

ஏதோ ஒருமாதிரி சாவி கொடுத்து, இதைக் கிழக்கு மாகாணத்தில் ஒரு தொகுதியில், பிரத்தியேகமாக —எவருடனும் சாயாமல் பழைய மரம் போல் நிமிர்ந்து நிறுவைத்தாம். (இம்மரம் உள்ளே போறை தான்) ஆனால் வாக்குத் தேடி இது போகும் இடங்களிலெல்லாம் பேண்களும் இளமட்டங்களும் இதுக்கு நல்ல செ(ா)ல்வாக்குகளை அளிக்கின்றனராம். முடிசூடா 'மன்ன'ரென இந்த வட்டாரத்தில் நிமிர்ந்து நின்றவர், இப்போது நன்றாக அர்ச்சிக்கப்பட்டு முடி தாழ்த்தி படியிறங்கி வருகிறாராம்.

தான் செல்லும் வீடுகளில் சிலவற்றில் கறுப்புக் கொடி வரவேற்புகள் கிடைத்ததாகவும், பலர் பேசிய பேச்சுக்களால் தன் முகம் கரிபூசப் பட்டுவிட்டது என்றும் அழுது புலம்புகிறார். வீட்டில் ஆட்கள் இருக்கும் போதே தம்மைக் கண்டதும் கதவுகளை இழுத்து மூடுகின்றனர் எனறும் தெரிவித்துள்ளார்.

"எட்டப்பர், எட்டப்பர் என்று எம்மைக் கூறுகிறார்களே! எட்டப்பர் என்றால்

(9-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விஞ்ஞாபனம்

சிங்களவர்களின் அரசியல் கட்சிகளெல்லாம் தேர்தல்விஞ்ஞாபனங்களை வெளியிட்டுவிட்டன. தமிழர்களின் கட்சிகள் இதுவரை ஏன் விஞ்ஞாபனத்தை வெளியிடவில்லை என்று வங்கொடையிலிருந்து ஸ்ரீ வாசுதேவன் என்பவர் ஒரு தமிழ்த் தினசரிக்கு கடிதத்தை எழுதிப்போட்டார். அப்பத்திரிகை நிர்வாகிகள் விழுந்தடித்துக் கொண்டு ஆராயத் தலைப்பட்டு விட்டனர். கடிதம் அங்கொடையிலிருந்து வந்தமையினால் தான் இந்தப்பரபரப்பு.

அம்மானுக்கு விடயம் எட்டியதும் அவரும் தலையை உடைத்துக் கொண்டு விஞ்ஞாபனம் தயாரிக்கத் தலைப்பட்டார்.

ஆனால் கொள்கை கிள்கை எதிலுமே நம்பிக்கையில்லாத அம்மானுக்கு விஞ்ஞாபனம் தயாரிக்க என்ன அவசியமிருக்கிறது? முட்டி மோதித் பார்த்தும் பயனில்லை.

'நமது சீடனுக்கு ஒரு விடயம் தண்ணீர் பட்டபாடு. எங்குபோனாலும் அதையே அவிழ்த்து விடுவான். அதுதான் மகாவலி கங்கையை வடக்கே திருப்புவது இதையே நமது தேர்தல் விஞ்ஞாபனமாகக் கூறி விடலாம்' என்று திருப்தியடைந்து கொண்டு மேற்படி பத்திரிகை நிருவாகத்தர்களின் தலையையும் அம்மான் ஆட்டியிருப்பதாக செய்தி கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் வழங்கத் தடை போடும் அரசியல் சூது

## துறைநீலாவணை மக்கள் துவேஷிக்கப்படுவதேன்?

### வஞ்சனை வரலாறு பற்றி இராசமாணிக்கம்

துறைநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டி முனை ஆகிய கிராம மக்கள் குடிநீரின்றி பல்லாண்டுகளாக அனுபவிக்கும் துயரங்களைக் களைய திரு. சி மூ. இராசமாணிக்கம் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகப் பெரும பாடுபட்டுவந்துள்ளார். அரசியல் சூதாடிகளின் சூழ்ச்சிகளால் இக்கிராம மக்கள் வஞ்சிக்கப்பட்ட வரலாற்றை பாராளுமன்ற விவாதங்களைக் கொண்ட அறிக்கை (ஹன்சாட்)யிலிருந்து எடுத்துத்தந்துள்ளோம்.

**ஹன்சாட்,**

1964 செப்ரெம்பர் 4-ம் திகதி பந்தி 2845 — 2853

முதன் முதலில் நான் பட்டிருப்புத் தொகுதியின் பிரதிநிதியாக இச்சபைச்கு வந்த பொழுது—1954 மட்டில்—எனது தொகுதியிலுள்ள மூன்று கிராமங்களாகிய துறைநீலாவணை சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகியவற்றிற்கு ஒரு குளாய் நீர் திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென உணர்ந்தேன். இச்சபையில் பிரஸ்தாப விஷயமாக நான் சமர்ப்பித்த ஒரு தன்னிலைப் பிரேரணையின் மீதான வாதத்திற்கு முன்னேடியாக அன்றைய உள்ளூராட்சி அமைச்சரான கலாநிதி சி. டபிள்யு டபிள்யு கன்னங்கராவை இக்கிராமங்களுக்குக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினேன்.

ஏறக்குறைய வருடத்தில் எட்டு மாதங்கட்கு, போதிய குடி தண்ணீர் இல்லாது இக்கிராம மக்கள் அல்லல் உறுவதைக் கண்டு அவர் கலவரப்பட்டு அதிர்ச்சியடைந்தார். கோடை காலத்தில் கிணறுகள் வற்றிப்போய், நெல் சேமித்து வைக்கும் களஞ்சியக் கிடங்குகள் போல் அவை தோற்றமளிப்பனவாய் இருந்தன.

கொழும்பு திரும்பியதும் அமைச்சர் இம்மூன்று கிராமங்களுக்கும் ஒரு குளாய் நீர்த்திட்டத்தை ஆரம்பிப்பதாக ஒத்துக் கொண்டார். அந்த நேரத்தில் நான் இவ்விஷயமாகச் சபையில் சமர்ப்பித்த பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனது பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதின் சந்தர்ப்பத்தையும் நிலபரங்களையும் நான் அமைச்சருக்கும் பாராளுமன்றச் செயலவருக்கும் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிய வைக்க வேண்டும். 1953–54ம் ஆண்டின் 16ந் தொகுதி ஹன்சாட்டிலிருந்து 1803ம் பந்தியை வாசிக்கிறேன். சபையில் நான் சமர்ப்பித்த பிரேரணை இதுதான்:—

பிரேரணை

"துறைநீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடி ஆகிய கிராமங்களுக்குத் தேவைக்குரிய குளாய் நீர் விநியோக வசதி ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்சபை கருதுகிறது."

தொடர்ந்து நான் பேசும் போது கூறியதாவது:—

"எனது தொகுதியில் குடிப்பதற்கு நல்ல நீர் கிடைக்காது அல்லற்படும் ஒரு பகுதி மக்களின் அடிப்படை உரிமை ஒன்றை வழங்கி விடுங்கள் என்றே நான் கோரிக்கை விடுக்கிறேன். அடிப்படை மனித உரிமைகள் என்றும் வேறு பலதிறப்பட்ட சுதந்திரங்கள் என்றும் நாம் பேசிக் கொள்ளும் இந்த நவீன யுகத்தில், கேவலம், உயிர் பேணும் முதற் தேவையான நல்ல நீர் கிடைக்காது மக்கள் கஷ்டப்படுவது கற்பனை செய்ய முடியாத ஒரு நிலையாகும்.

மட்டக்களப்புக் கச்சேரியில் இருக்கும் அந்தப் பழங்காலப் பதிவேடுகளைக் கிண்டி எடுத்துப் பார்த்தால் இந்தக் கிராமத்து மக்கள் இம்மாகாண அதிபதிகளுக்கு எழுதி எழுதிக் களைத்துவிட்ட பெட்டிசங்களையும் முறைவீடுகளையும் அவை கூறும். இம்மக்களின் துயரக்கதைகளையும் நாம் பெருமளவில் காணமுடியும்.

**அமைச்சர் எடுத்த முயற்சி**

தற்போதைய எதிர் கட்சித் தலைவர் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது அவருக்குப் பல முறையீடுகள் செய்யப்பட்டன என்றும் இக்கிராமங்களுக்கு குளாய் நீர்வசதி ஏற்படுத்துவதற்குரிய திட்டங்களை



ஆராய்வதற்கு அவர் முயற்சி எடுத்தார் என்றும் நான் அறிகிறேன். தொடர்ந்து பண மதிப்பீடுகள் செய்யப்பட்டன; ஆனால் ஏதோ ஒரு வழியில் திட்டம் எதுவும் நிறைவேறுதே போயிற்று என்றும் அறிகிறேன்."

திரு. சி. பி. டி. சில்வா பொது நிர்மணப் பகுதி (பி. டபிள்யு. டி) தான் அதற்குக் காரணம்! [ஹன்சாட் தொகுதி 16, 1964 சனவரி 6—பந்திகள் 1803—1804]"

இதைத் தொடர்ந்துயான் இக்கிராமத்து மக்களின் நிலமையைவிபரித்திருக்கிறேன். இது பற்றி ஒரே ஒரு பந்தியை மேலும் வாசித்துக் காட்ட விரும்புகிறேன்:—

**மக்கள் படும் துன்பம்**

"துறைநீலாவணைக் கிராம மக்கள் பிற்போக்கு நிலையிலிருக்கிறார்கள். இந்தத் துரதிஷ்ட நிலைக்குக் காரணம் குடிநீர் வசதியின்மையே என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். இந்தக் கிராமத்தில் சுமார் 6000 மக்கள் வசிக்கிறார்கள் பெரும்பகுதியினர் இதில் கமக்காரர்கள் ஆவர். வருடத்தில் நாலு மாதங்களுக்கு இங்கே கிணறுகளில் சிறுநீர் கிடைக்கும் மிகுதி எட்டு மாதங்களுக்கு இக்கிணறுகள் நீர் வற்றி நெல் சேமித்து வைக்கும் களஞ்சியக் கிடங்குகள் போல் தோற்ற மளிக்கும்.

தமது கணவன்மரர் வயல்களுக்கு வேலைக்குப் போக, மனைவிமார் குழந்தைகளையும் குமர்ப்பெண்களையும் வீட்டில் தனியே விட்டு நீண்ட தூரம் நடந்து அயற் கிராமங்கட்கு நீர் தேடி [illegible] தகப்பன் மாரும் தாய் [illegible] இருக்க முடியாததனால் குழந்தைகளோ பாடசாலைகட்குச் செல்ல முடியாதிருக்கின்றது. அவர்களுடைய கல்வி கவனிக்கப்படுவதில்லை. நெடும் தூரம் நீர் தேடிச் செல்பவர்கள் படும் அவமானம் சொல்லும் தரமன்று. கிணற்றில் இருந்து நீர் மொள்ள விடுவதற்குப் பிரதியுபகாரமாக வீடு, வளவுகளைக் கூட்டும் படியோ விறகு தறிக்கும் படியோ அல்லது வேறு வகையிலோ இழிவாக இம் மக்களை நடத்துகிருர்கள், கிணற்றுச் சொந்தக்காரர்கள். நீர் வசதியின்மையினுல் குளிக்க முடியாது, குழந்தைகள் பல வித சரும நோய்களினுலும் குடல் நோய்களினுலும் பீடிக்கப்படுகிருர்கள்."

**பரீட்சைகள் நடந்தன**

இந்த விவாதத்தின் ஜனுப் முகமதலி, மேஜர் ஜெயவிக்கிரம, கலாநிதி கன்னங்கரா, எட்மன் சமரக்கொடி ஆகியோர் பேசியிருக்கிருர்கள். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறி இக்கிராமங்களுக்காய நீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதை அடுத்து திணைக்களத்தினர் பரீட்சார்த்தமாக கிணறென்றைத் தோண்டினுர்கள். 1954 நவம்பர் 30ந் திகதியிட்ட W. D. அடையாள எழுத்துக்களை உடைய கடிதத்தை நீர் விநியோக எஞ்சினியர் எனக்கு அனுப்பி இருந்தார். அதில் ஒரு பகுதியை வாசிக்கின்றேன்.

"இந் நீர் விநியோகத் திட்டத்திற்கு தண்ணீர் ஸ்தலமாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் கரவாகு வடக்கு கிராமசபை கந்தோருக்குப் பின்னுல் உள்ள இடத்தில் பரீட்சார்த்தமாக ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது. தொடர்ந்து மேலும் நடவடிக்கை எடுக்கு முன் நீர் ஊற்று வேகத்தை மதிப்பிடுவதற்கு மேலும் ஓர் பரீட்சை நடத்த வேண்டும். இது கோடை காலத்தில்தான் நிகழ வேண்டும். எனவே இப்பரீட்சைகளின் பின்னர்தான் இத் திட்டத்தில் மேலும் வேலை தொடர முடியும்" என்று முடிகிறது கடிதம்.

**திடீர் நிறுத்தம்**

1954ம் ஆண்டு நவம்பர் 30ந் திகதியோ அல்லது அந்த நாட்களிலோ பரீட்சை நடந்தது அதே நோக்தில் திட்டத்திற்கான மாதிரிப் படங்களும் தயாரிக்கப்பட்டன. திட்டத்தில் தொடர்ந்து வேலை நிகழ நடவடிக்கை எடுக்கப்பட்டது ஆனுல் 1956ல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் இத்திட்டத்து வேலையெல்லாம் ஸ்தம்பிதமாயின.

1957ஜ லா, 1958ஜ லா நிகழ்ந்த கிராம எல்லை நிர்ணயத்தில் இம் மூன்று கிராமங்களில் நற்பிட்டி முனை, சேனைக் குடி ஆகிய கிராமங்கள் கல்முனையுடன் சேர்க்கப்பட்டன. துறைநீலாவணை எனது தொகுதியிலேயே தொடர்ந்து இருந்தது.

1960ல் நான் மீண்டும் பாராளுமனறத்திற்கு வந்தபொழுது இத் திட்டம் மீண்டும் உயிர் பெற முயற்சி எடுத்தேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் உள்ளூராட்சி ஆணையாளரையும் கண்டு பேசி இத்திட்டத்தை ஆரமபிப்பதறகு 3½ லட்சம் ரூபா ஒதுக்குவித்தேன். சுமார் 1962 அளவில் இத திட்டத்திற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன. கேள்விப் பத்திரங்களைப் பரிசிலனை செய்ததும (கொந்தராத்து) ஒப்பந்தம் நிறைவேற்றப்படுமுன உள்ளூராட்சி அமைச்சரான மகாநாயசமரவீர ஏதோ மர்மமான காரணங்களுக்காக இத்திட்டத்தை நிறுத்தி வைத்தார்.

**அமைச்சரின் கீழ்ப்பான செய்கை**

அமைச்சரின் இந் நடத்தை பற்றி முன்னொரு சமயம் இச்சபையில் நான் பேசியிருக்கிறேன். அத்தருணம் அமைச்சருக்கெதிராகக் கடுமையான பலவற்றைக் கூறியிருக்கிறேன். அவற்றை நான் மீண்டும் இங்கு கூற விருப்பவில்லை. ஆனுல் அவர் செய்கை மிகவும வெறுக்கத்தக்கதும் ஓர் அமைச்சரின் தகுதிக்குக் கீழானதும் என்பதை மாத்திரம் இங்கு கூறி வைக்க விரும்புகிறேன திட்டத்தை அவர் நிறுத்தியதற்கான காரணம் நான் நன்ருக அறிவேன். ஆனுல் இச் சபையில் அதை நான் அம்பலப் படுத்த மனப் படவில்லை.

(13-ம் பக்கம் பார்க்க)

**அடுத்த இதழில்**

கல்குடா மாணிக்கம் செய்தது என்ன? இடம் பெறும்

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரூமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரூமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப் படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.

**மக்கள் குரல்**

## இனத்தை அழிக்கவா உங்கள் வாக்கு?

அன்று திரு. பொன்னம்பலம் இந்திய வம்சாவழியினருக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி இந்திய பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்துக்கு எதிராக நின்றிருந்தால் தமிழ் மக்கள் இன்று பிளவு பட்டிருக்க வேண்டிய நிலையே ஏற்பட்டிருக்காது பிரசாவுரிமைச் சட்டத்தில் இந்திய வம்சாவழியினரைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று உறுதி கூறியிருந்த திரு. பொன்னம்பலம் அதே சட்டத்துக்கு அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்தார். இதனுலேதான் இன்று தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகளிலும் கீழானுர்கள்...

தமிழ் இனத்துக்கே பச்சைத் துரோகம் செய்தவரான திரு. பொன்னம்பலத்துக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் தமிழ் பேசும்மக்கள் சமுதாயத்தை இந்நாட்டில் பூண்டோடு அழித்தொழிக்கக் கருதும் சக்திகளுக்குக் கொடுக்கப்படும் வாக்குகளாகும்.

செ. கருப்பையா

டிக்கோயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொன்னம்பலம் ஒரு வாலறுந்த நரி'

## குமாரசாமி வர்ணனை

## பதவியேற்பும் பாத வணக்கமும்

'உற்ற போரிற் கற்றது மறப்பாய்' என்று கர்ணனுக்கு பரசுராமர்சாபமிட்டதாக பாரதக்கதை கூறுகிறது. தமிழ் இனத்தின் உரிமைகளுக்காக என்றும் போராடுவேன் என போர்ப்பறை கொட்டி களம்புகுந்த காங்கிரசின் தனிப்பெருந் தலைவர் உற்றபோரிலே கற்றதை மறந்தார்! கர்ணனுக்கு பரசுராமர் இட்ட சாபம்; அதனால் உற்ற போரிற் கற்றதை மறந்தான். கர்ணனது நிலையை புரிந்துகொள்ள முடிகிறது. தனிப்பெருந் தலைவர் பொன்னம்பலம் அவர்களுக்கு யாரும் சாபம் போடவில்லை. பெரிய சேனநாயக்கா அமைச்சர்ப் பதவியென்ற எலும்புத்துண்டை வீசினார். காங்கிரஸ் தலைவர் உற்ற போரிற் கற்றதை மறந்து சரண்புகுந்தார். யாரும் என்றுமே மன்னிக்க முடியாத துரோகம்!

### காலில் விழுந்தார் பொன்னம்பலம்

இலங்கை குடியுரிமைச்சட்டம் இந்நாட்டு தமிழ் இனத்தின் சரிபாதிக்கு மேற்பட்டோரை பிறந்த நாட்டில் 'நாடற்றவர்' களாக்கிவிட்ட அநாகரீகச் சட்டம். அந்தச் சட்டம் பெரிய சேனநாயக்கா தலைமைதாங்கிய சிங்கள ஆட்சியாளரால் அவசர அவசரமாக, இலங்கைக்கு 'சுதந்திரம்' கிடைத்து முழுதாக ஏழு திங்கள் உருளுமுன், பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

சட்டத்தின்மீதான விவாதத்தின்போது தந்தை செல்வநாயகம் காங்கிரஸ் சார்பாக இதய சுத்தியோடு எதிர்த்துப்பேசி, எதிராக வாக்கும் அளிக்கிறார். ஆனால் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலமோ, முன்னேற்பாடாக பெரிய சேனநாயக்காவோடு செய்து கொண்ட இரகசிய ஏற்பாட்டின்படி மசோதாவுக்கு எதிராக ஒப்புக்கு கையுயர்த்திவிட்டு, அடுத்த சில வாரங்களில் அலரிமாளிகைக்குச் சென்று பதவிக்காக பெரிய சேனநாயக்காவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுகிறார்! இதைப் பச்சைத்துரோகம் என்று வர்ணிப்பதைவிட வேறு எவ்வாறு அழைப்பது?

### பதவிபற்றிய செய்தி

தனிப்பெருந் தலைவரின் அமைச்சர்பதவி ஏற்புவைபவத்திற்கு முன் யாழ்ப்பாணத்தில் தமிழ்காங்கிரஸ் காரியசபையின் கூட்டமும், முற்றவெளியில் ஒருபகிரங்க பொதுக்கூட்டமும் நடைபெற்றது. காரியசபைக் கூட்டம் திரு. பொன்னம்பலத்தின் மைத்துனர் கிளப்பாலசிங்கம் இல்லத்தில் நடந்தது. திரு சேனநாயக்காவின் அமைச்சரவையில்சேருவதுபற்றிய திட்டத்தை பொன்னம்பலம் அவர்கள் முதன்முதலாக இக்கூட்டத்தில் வெளிப்படுத்தினார். ஒரு முழு அமைச்சர்பதவியும், ஒரு அரை அமைச்சர் பதவியும் சேனநாயக்காவால் கொடுக்கப்படுமென்றும் திரு.பொன்னம்பலம் காரியசபைக்கு தெரிவித்தார்.

தனிப்பெருந் தலைவரது திட்டத்தை தந்தை செல்வநாயகம், மறைந்த தலைவர் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் (அப்போது மூதவை உறுப்பினர்) இவர்கள் மிக வன்மையாக எதிர்த்தனர். தமிழ்காங்கிரஸ் பிரதிநிதிகள் அமைச்சர்ப்பதவி ஏற்று பெரிய சேனநாயக்காவினுடைய ஆட்சியோடு ஒத்துழைப்பது, தமிழ் மக்களுக்கு தாங்கள் கொடுத்த உறுதிமொழிகளுக்கும் காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கும் மாறானதென்று மூவரும் வாதித்தனர்

### துரோகத்திற்கு துணைவாருங்கள்'

அவர்களை தனது திட்டத்துக்கு இசையவைக்க திரு. பொன்னம்பலம் அவர்கள் நயமாக பலமுறை பேசினார். தந்தை செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் இவர்களது ஆதரவைப் பெறாது அமைச்சர்ப்பதவியேற்று சிங்கள அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதினால் ஏற்படும் பாரதூரமான விளைவை பொன்னம்பலம் உள்ளூர நன்கு உணர்ந்திருக்கவேண்டும். கட்சியின் தலைவர் பொன்னம்பலமாக இருந்தாலும், காங்கிரசின் ஸ்தாபனத்தின் அமைப்பு ரீதியான பலத்தில் இப்போது 'பிடி' பெருமளவு இருந்தது. மேலும் தனது துரோகத்துக்கு மற்றவர்களும் துணைவரவேண்டுமென்றும், அப்படி வந்தாற்றான் மக்கள் மத்தியில் தனது துரோகத்திற்கு விளக்கம் கொடுப்பது சங்கடமாக இருக்காதென்றும் பொன்னம்பலம் கணக்குப்போட்டார். ஆனகாரணங்களினாற்றான் பொன்னம்பலம் பலமணி நேரம், தனது வழக்கமான 'நான்' 'நான்' என்ற ஆணவப் போக்கைவிட்டு சிறிது நயமாகப் பேசவேண்டிய கட்டாயம் இருந்தது.

ஆனால் பொன்னம்பலம் ஒரு நாளும் இல்லாத திருநாளாக இப்படி இறங்கி வந்து பேசியது அக்கூட்டத்தில் இருந்த ஒருவருக்கு கட்டோடு பிடிக்கவில்லை. காங்கிரஸ்தான் பொன்னம்பலம், பொன்னம்பலம்தான் காங்கிரஸ் என்று உலகம் ஒப்புக்கொண்டு அவரை தலைமேல் வைத்து கொண்டாடும் பொழுது, கேவலம் செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்றோர் 'ஆமாம்சாமி' போடாமல் எதிர்த்துப் பேசுவது அவருக்கு ஆத்திரத்தை கொடுத்தது.




(3)

### மச்சானின் யோசனை

இன்னொரு காரணமும் இருந்தது. காங்கிரஸ்காரர்களுக்கு பொன்னம்பலம் அதன் தலைவர்மட்டுமே, இவருக்கு அவர் தலைவர்மட்டுமல்ல, சொந்த மச்சான்! எனவே மச்சானுக்கு துணை போவதாக நினைத்துக் கொண்டு 'மச்சான்! இவங்கள் கிடக்கிறான்கள். நீ போய் சேரடா! இவங்கள் என்ன செய்கிறான்கள் என்பதை நான் ஒரு கைப்பார்த்துவிடுகிறேன்' என்று ஆவேசமாக கிளப் பாலசிங்கம் கத்தினார்.

இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன் விடுவாரா? கோட்டை கழற்றி எறிந்துவிட்டு பாலசிங்கம் மீது பாய்ந்தார்! கைகலப்பு ஏற்படாமல் சிலர் விலக்குப் பிடித்தனர். தந்தை செல்வநாயகம் பொன்னம்பலத்தைப்பார்த்து மிக நிதானமாகச் சொன்னார் 'உமக்கு உன்னுடைய மச்சான் 'அருமையான' ஆலோசனை கூறிவிட்டார். எனது ஆலோசனை இனி உமக்கு அவசியமில்லை.'

### முற்றவெளிக் கூட்டம்

அமைச்சரவையில்பதவி ஏற்பதென்ற தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால்நிறைவேறியது. தந்தை செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம், டாக்டர்நாகநாதன்முதலியோர் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

அன்று மாலை முற்றவெளியில் காங்கிரசின் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. விலகற் கடிதங்களைச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டே யு. என். பி. அரசாங்கத்தில் சேருவதாகவும், தமிழ் மக்களது உரிமைகளுக்கு அரசாங்கம் எப்போது ஊறுவிளைவிக்கஎண்ணுகிறதோ, அப்போது விலகற் கடிதங்களை வீசியெறிந்துவிட்டு வெளியேறுவோம் என்று திரு. பொன்னம்பலம் முழக்கமிட்டார். சாவகச்சேரி குமாரசுவாமி இன்னும் ஒருபடி மேலே போய் கோட்டை முனியப்பர்மீது சத்தியம் செய்து பேசினார் 'யு. என். பி. கட்சி உழவு தெரியாத மாடு. காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் அந்த மாட்டுக்கு உழவு பழக்கத்தான் பதவி ஏற்கிறோம்' என்றார்.

சட்டைப்பைக்குள்ளேயே வைத்துவிட்டு அதற்குள் தான் தன் விலகற் கடிதம் இருக்கிறதாகப்பாவனைசெய்துகாட்டிவிட்டு, நேரம்வரும்பொழுது அதில் கையெழுத்துப்போட்டுக் கொடுப்பதுதான் ஒரு வேலையாக இருக்குமென்றும் விளாசினார்.

### பொன்னம்பலம் பற்றி குமாரசாமி

விலகற் கடிதங்களை சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு பதவி ஏற்ற பொன்னம்பலம் 5 ஆண்டுகள் கழித்து 1953-வரை திரு. கொத்தலாவலையால் அமைச்சரவையிலிருந்து உதைத்துத் தள்ளுமட்டும்-பதவியில் ஒட்டியிருந்தார். சாவகச்சேரி குமாரசுவாமி

(14-ம் பக்கம் பார்க்க)

# முஸ்லீம்களின் உரிமைகளை பெற்றுத்தரவல்ல

## கட்சி ஒன்றே தான்

## அதுவே தமிழரசு

### எஸ். ஐ. எம். ஏ. ஜப்பார்

தேர்தல் வருகிறது தோழர்களே! தேர்தல் வருகிறது!

புனையும் எரிமலையைப் புன்னகை அருவி என நினைந்து, எங்கள் சின்னத்துக்கே உங்கள் வாக்குகளை அளியுங்கள். அப்பொழுதுதான் உங்கள் வாழ்விலே பூரிப்புப் பொங்கும், தெருவெல்லாம் தேனும் பாலும் வழிந்தோடும். என ஆசை மொழி பேசி, நேசமொழி உரைத்து, கடந்த சில ஆண்டுகளாக எல்லாம் ஆட்டிப் படைத்தவர்கள் மீண்டும் போட்டிபிட வந்துவிட்டனர்.

இந்த நேரத்தில் எந்தக் கட்சியை, சிறப்பாக தமிழ் பேசும் மக்கள், குறிப்பாக முஸ்லீம்கள் ஆதரிக்க வேண்டும்: என்ற கேள்வியை எழுப்பி விடை காணுவது நம் ஒவ்வொருவர் கடமையுமாகும்.

கட்டவிழ்த்து விடப்பட்ட மாடு கண்டபடி அலைந்து கொண்டிருக்கும். எந்த இடத்தில் தன் வயிற்றை நிரப்பிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறதோ அந்த இடத்திற்குள், நுழைந்து வயிற்றைநிரப்பிக்கொள்ளும். அது போன்றவர்கள்தான் — சுயேட்சை அபேட்சகர்கள் எந்தக் கொள்கையுமற்ற சுயநலவாதிகளான அவர்களை நாம் ஒதுக்கிவிடுவதே உகந்தது.

### பொதுவுடமைவாதிகள்

அடுத்து பொதுவுடமைவாதிகளை எடுத்துக்கொள்வோம். இவர்களுக்குள் இருபெரும் பிரிவுகள். 'கெனமன்' பிரிவை நாம் கவனித்தால், நிலையான கொள்கை ஒன்று அந்தப் பிரிவிற்கு இல்லை யாது என்பது தெளிவாகப் புலப்படும். மொஸ்கோவில் மழை பெய்தால் மருதானையில் குடைப் பிடிக்கும் இவர்களை எப்படி ஆதரிப்பது?

'ருஷ்யாவைப் பார்' என்றும் தொழிலாளி முதலாளி என்ற பேதத்தையும் வளர்ப்பவர்கள். இதைவிட 'மதம் மனிதனுக்கு அபின்' என்று கூறிய மார்க்சின் தத்துவத்தைப் பின்பற்றுபவர்களை, மார்க்கத்துக்காக மரணத் ... பற்ற முடியும்?

சண்முகதாசன் தலைமையிலுள்ள கொம்யூனிஸ்ட் கட்சியும் நமக்கு உதவாதது. ஏனெனில் இந்நாட்டை வெகு விரைவில் சீனாவுக்கு அடிமைச் சீட்டெழுதி வைத்துவிடத் துடிக்கும் கட்சி இது. அண்டை நாடுகளை அபகரிக்கும் புதிய ஏகாதிபத்திய நாடாக வளர்ந்து வரும் சீனாவைச் சார்பவர்கள் சமாதான வாழ்வைத் தர மாட்டார்கள்.

### சமசமாஜிகள்

அடுத்து உள்ளது சமசமாஜக் கட்சி! அதாவது சமதர்மக் கட்சி! இவர்களிடம் சமதர்மம் வார்த்தையளவில் தான் இருக்கிறதே தவிர, கட்சியோ செயலளவில் அது கிடையாது என்பதை கூட்டரசாங்கம் நடைபெற்ற காலம் காட்டிவிட்டது. சமதர்மம் பேசிவிட்டு சர்வாதிகாரத்திற்கு வித்திட முனைந்தவர்கள் இவர்கள்.

'தமிழ்பேசும் மக்களுக்காக கடைசி வரையில் போராடுவேன். தேர்தலில் தோல்வியுற்று பாராளுமன்றத்திற்கு வர முடியாது போனாலும் கூட என் கொள்கையில் நின்றும் தவற மாட்டேன்' என்று கொத்தலாவலை ஆட்சியின் போது முழக்கமிட்ட டாக்டர் என். எம். பெரேரா இன்று அதே வார்த்தைகளை மறந்துவிட்டார். தொழிலாளர்களின் உரிமைக்காக சகலவற்றையும் தியாகம் செய்யத் தயங்கமாட்டேன் என்று கூறிய டாக்டர் பெரேரா இன்று தமது மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்ட 21 அம்சக் கோரிக்கைகளையே உதாசீனம் செய்து விட்டார். சொல் ஒன்று செயல் ஒன்றாக நடக்கும் இக் கட்சி சிறுபான்மை இனத்தவர்களுக்கு விமோசனமளிக்க ஒரு சிறு விடயத்தையும் முடிக்கப் போவதில்லை. ஆகவே இக் கட்சியும் முஸ்லிம் மக்களுக்கு உதவாது.

(10-ம் பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 பெப்புருவரி மாதம் 7ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க விதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


# இருமுனைப்போராட்டம்

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இது ஒரு தீர்க்கமான பொதுத்தேர்தலாகும். தேர்தலின் முடிவு தமிழ்பேசும் இனத்தின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கும்.

தேசிய சிறுபான்மை இனமான தமிழ்பேசும் மக்கள், அபகரிக்கப்பட்ட தங்களின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காக ஒரு நீண்டகாலப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டம் இரு முனைகளிலே நடத்தப்பட்டு வருகிறது. ஒன்று பாராளுமன்றத்தில்—மற்றது மக்கள் மத்தியில். இவ்விரு போராட்டங்களும் வெவ்வேறு அரங்கில் நடைபெற்றாலும், அதற்கு ஓர் இணைப்பு இருத்தல் வேண்டும். அந்த இணைப்பை இதுவரை அளித்து வந்தது தமிழரசுத் தலைமையே. தலைமையின் நேர்மையும் துணிவும், அரசியல் ஞானமும், தீர்க்கதரிசனமும் இரு போராட்டங்களையும் ஒரே இலட்சியத்தை நோக்கிச் செலுத்துவதற்குப் பெரிதும் பயன்பட்டன.

தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்துள் ஒரு படையாகத் திரண்டு ஒரே அணியில் நின்று கட்டுப்பாட்டுடன் போராட்டத்தை நடத்தினர். பாராளுமன்றத்தில் ஒவ்வொரு தமிழரசுப் பிரதிநிதியும் ஒரு போர்வீரனாகவே சொற்போர் நடத்தினர். அவர்களிடம் அசைக்கமுடியாத கட்டுப்பாடு காணப்பட்டது. தமிழ்பேசும் மக்கள் வெளியில் ஒன்றுபட்டு நிற்பதைப்போல,பாராளுமன்றத்துள்ளும் தமிழரசு பிரதிநிதிகள் ஒன்றுபட்டு நின்றனர். அவர்கள் அங்கே தமிழ்பேசும் மக்களின் குரலைச் சதா எழுப்பிக்கொண்டிருந்ததுடன் சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் உலகறிய எடுத்துக் கூறினர்.

தமிழரசுப் பிரதிநிதிகள் அமைச்சர் பதவிகளைப்பெறுவதற்காகவோ சுயநல நோக்கங்களுக்காகவோ என்றுமே தங்களின் பாராளுமன்ற ஸ்தானங்களைப் பயன்படுத்தியதில்லை. இலட்சியங்களை விட்டுக்கொடுத்து ஆட்சியாளரிடம் சரணகதி அடைந்ததுமில்லை? எந்த நோக்கத்துக்காக அவர்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டனரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதிலேயே அவர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தனர்.

பாராளுமன்றத்தில் சொற்போர் நடத்துவதால் மட்டும் தமிழ்பேசும் இனத்தின் விடுதலையையும் உரிமைகளையும் பெற்றுவிட முடியாது. அப்படி முடியுமானால் காந்தி, நேரு, போஸ், பட்டேல், ஆஸாத், ராஜாஜிபோன்ற பாரதத் தலைவர்கள் பாராளுமன்றத்தில் பேசியே சுதந்திரத்தை இலகுவாகப் பெற்றிருப்பார்கள்,

உரிமைகளைப் பெற மக்கள் போராட்டமும் அவசியம் என்பதைச் சரியாக உணர்ந்துள்ளது தமிழரசுக் கட்சி. உயிர்த்தியாகம் உட்பட எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராயிருந்தாலன்றி மக்களின் போராட்டங்களை நடத்த இயலாது. தியாகம் செய்ய தமிழரசுப் படை தயாராயிருந்தமையாற்தான் மக்கள் போராட்டங்களுக்கு வழிகாட்ட முடிந்தது. காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம், சிறி எதிர்ப்புப் போர், திருமலை யாத்திரை, 1961ல் மகத்தான சத்தியாக்கிரகம் முதலிய உரிமைப் போராட்டங்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே நடத்தப்பட்டன. மக்கள் எழுச்சி பெற்றனர். எழுச்சிக்கு தமிழரசார் வழிகாட்டினர்.

இந்த மக்கள் இயக்கங்கள் அனைத்தும் காந்தி அடிகளின் மகத்தான ஆயுதமான அஹிம்சையின் அடிப்படையிலேயே நடைபெற்றன. ஆகையாற்தான் அந்தப் போராட்டங்கள் அனைத்தும் ஆன்மீகபலம் பெற்று விளங்கின.

மகாத்மாவின் சத்தியப் போராட்டங்களிலிருந்து எழும்பிய ஆன்மீக வலிமை எப்படி பிரிட்டிஷ் சிங்கத்தை அடிபணிய வைத்ததோ, அப்படி தமிழ் பேசும் மக்கள் நடத்திய சத்தியப் போராட்டங்களின் ஆன்மீக வலிமை கடந்த டிசம்பரில் இந்த அரசாங்கத்தையே வீழ்த்தியது.

மக்கள் இயக்கங்களைப் பற்றியோ அவற்றின் ஆத்மீக வலிமையைப் பற்றியோ, அந்த வலிமை எத்தகைய சக்தியையும் அடிபணிய வைத்துவிடும் என்பதைப் பற்றியோ தேர்தலுக்குத் தேர்தல் மேடையிற் தோன்றும் வாய்வீச்சு வீரர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

உரிமைப் போராட்டத்தை மக்கள் இடையிலே தளர்த்திவிடும் பிரச்சினையே எழவில்லை. எனவே மேற்கண்ட இருமுனைகளிலும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியேதீர வேண்டும். அதற்கு மக்கள் என்ன செய்ய வேண்டும்? இக்கேள்விக்கு விடையளிக்கும் வாய்ப்பை இத்தேர்தலில் மக்கள் பெற்றுள்ளனர்.

மாய்மாலப் பேச்சாளர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினால், நாலு வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் பேசி, நீண்ட நேரம் பேசியதாக மணிக்கணக்கைக் காட்டித் திருப்தி அடைவர். அத்துடன் சந்தர்ப்பம் பார்த்து, தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளைப் பலியிட்டு ஓரிரு அமைச்சர் பதவிகளைப் பெற்று ஒதுங்கிடுவர். இவ்வாறு அவர்களின் சொந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

"உரிமைகளைப் பெற்றுத் தராவிட்டால் உடனே ராஜிநாமாச் செய்வேன்" என்றெல்லாம் இன்று மார்தட்டி வீராப்புப் பேசும்பதவிப் பித்தர்கள்,நாளை பாராளுமன்றத்துள் நுழைந்தும் இனத்தின் உரிமைகளை விற்று அமைச்சர் பதவியைப் பெற்று, அதனின்று உதைத்து வெளியே தள்ளும் வரை அப்பதவிகளில் பசைபோல ஒட்டிக் கொண்டிருப்பர்.

அவர்களுக்கும் மக்கள் போராட்டங்களுக்கும் காத தூரம். தியாகம் என்பது அவர்களின் அகராதியிலேயே கிடையாது. பாராளுமன்ற முனையிற் போராடவே அவர்கள் தகுதியற்றவர்களென்றால், பாராளுமன்றத்துக்கு வெளியே அவர்கள் எங்ஙனம் போராட்டம் நடத்த முடியும்?

தமிழ் பேசும் மக்கள் இவற்றை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். பாராளுமன்றத்துள்ளும் புறமும் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடியவர்களையே இத் தேர்தலில் தெரிவு செய்யவேண்டும். அவர்கள் ஒரே அணியிற் திரண்டு நின்று ஒற்றுமையுடன் இருபோர் முனையிலும் செயலாற்றக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய போர்ப் படையொன்றினையே [illegible] கடமையை மக்களுக்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை.

# ஆளும்பொறுப்பையேற்றோர் எம்மை ஒதுக்குவது ஏனோ?

## சுதந்திர உரிமையில் பங்கு பெற வேண்டும்

பதினேழு வருடங்களாக சுதந்திரதினத்தை பெரும்பான்மை சிங்களவர்கள் கொண்டாடி வருகிறார்கள் தமிழ்பேசும் மக்களோ அன்றையதினத்தை குமுறும் இதயத்தோடு கரிநாளாகக் கருதுகிறனர். வெள்ளையன் வரும்போது சிங்களம் போல் தமிழும் தனி அரசோச்சியது. அந்நியனால் பௌத்தமும் சிங்களமும் சிதைந்ததானால் தமிழும், சைவம, கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகியனவும் சிதைந்திருக்கவேண்டுமே! அப்போ சிங்களத்தையும் பௌத்தத்தையும் மட்டும் புனருத்தாரணம புரியவேண்டும் என்ற பிதற்றல் உண்டாகக் காரணம் என்ன?

இந் நாட்டை விட்டு அந்நியரின் ஆதிக்கம் நீங்கி பதினேழு வருடங்களாகின்றன. வாத்தகத்துக்காக இங்கு வந்தவர்கள் நாடாளத் தலைப்பட்ட கதை ஓரளவு முடிவடைந்தது.

அந்நியர் இங்கு வரு முன்னும் அவர்கள் இங்கு வந்து ஆட்சியின் லகானைப் பிடித்த போதும், அவர்கள் தங்கள் வேட்டையை முடித்துவிட்டு இன்று சென்றுவிட்ட பின்னரும் இந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை அலசிப் பார்ப்பது இன்று அவசியமாகின்றது.

வெள்ளையன் இந்த நாட்டுக்குள் வரும்போது இலங்கை ஒரே நாடாக இருக்கவில்லை. இந்நாடு பல மன்னர்களால் பல்வேறு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது. தங்கள் தங்கள் பகைமைகளைத் தீர்க்கும் பரிகாரிகளாக வெள்ளையனைச் சரணடைந்தனர்.

### பூனை அப்பம்

இரு குரங்குகளின் அப்பத்தைப் பங்கு போட்ட பூனை எவ்வாறு அப்பத்தை அபகரித்ததோ, அவ்வாறே அந்நியனின் நீதி அவனுக்கே வாய்ப்பினை அளித்தது. ஒன்றரை நூற்றாண்டு அந்நியன் தன் ஆதிக்கத்தின் கீழ் இந்நாட்டை ஆண்டு வந்தான். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தவன் தனது வசதிக்கேற்ப சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு இலங்கையை ஒரே நாடாக்கி ஆண்டு வந்தான்.

அந்நியன் ஆண்டபோதும் இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை அவன் வழங்க மறுக்கவில்லை. இந்நாட்டு மக்களின் மொழிகளான சிங்களத்துக்கும் தமிழுக்கும் ஒரே மதிப்பினையே நல்கி வந்தான். இந்நாட்டில் வசித்த சகலமதங்களுக்கும் மதிப்புக் கொடுத்திருந்தான்.

அந்நியன் இந்நாட்டுக்குச் சுதந்திரத்தை வழங்கிவிட்டு வெளியேறிய போது, தான் முன்பு அபகரிக்கும் காலத்தில் பிளவுண்டிருந்தது போல் பிரித்துக் கொடுத்து விட்டுப் போகவில்லை. தனது ஆட்சிக்கு வசதிக்காக ஏற்படுத்திய பிணைப்பை மாற்றாமல் விட்டு விட்டுச் சென்றான்.

### வெள்ளையன் வஞ்சகனா?

வெள்ளையன் வெளியேறிய போது இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்புகளை பெரும்பான்மைச் சமூகத்தவர்களான சிங்களவர்களிடம் மட்டும் விட்டுச் சென்றிருப்பானேயானால் நிச்சயமாக வெள்ளையன் ஓர வஞ்சகன் ஆவான்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

இன்று நாட்டில் எழுந்துள்ள கூச்சல்களை அவதானிக்கப் புகின் வெள்ளையன் பாரபட்சமாகவே நடந்துள்ளான் என்று நாமும் எண்ணத் துணிகிறோம்.

"அந்நிய ஆதிக்க காலத்தில் சிங்கள மொழியும், பௌத்தமும் அடங்கி ஒடுங்கிப் போய்விட்டன. சுதந்திரம் கிடைத்து நமது ஆட்சி ஏற்பட்டுள்ளமையினால் சிங்களத்தையும் உரிய இடத்துக்கு உயர்த்த வேண்டும்" என்று ஓயாது ஓலமிடுகின்றனர், சிங்கள அரசியல் வாதிகள். அதே நேரத்தில் இங்கு அன்று தொடக்கம் இன்று வரை வாழ்ந்துவரும் தமிழ் மொழியையும் அம்மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட இந்து, இஸ்லாமிய, கிறிஸ்துவர்களையும் பற்றி எதுவித வரார்த்தைகளும் கூறப்படுவதாகயில்லை.

வெள்ளையன் இங்கு வந்த போது இந்நாட்டில்—வடக்கே தமிழ் மன்னனின் தனி ஆட்சி ஒன்று தழைத்தோங்கியிருந்தது என்பதனை எவர் மறுக்க முடியும்? அடிமைப் படுத்த வந்தவன் சிங்கள மன்னர்களை பேதம் செய்து சூழ்ச்சியால் சுற்றி வளைத்துக் கொண்டது போல், தமிழ் மன்னனையும் தன்னடிப்படுத்தினான். அவன் ஆண்டபோது இரு இன மக்களையும் ஒரே நெறியில்தான் கணித்தான். அவன் அகன்றதும் பெரும்பான்மை இனத்தவர்களுக்குண்டான சகல உரிமைகளும் சிறுபான்மையினருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதே நீதி.

### ஒரே குரல் கேட்கிறது

அந்நியன் அகன்றபின் சிங்களத்தையும் பௌத்தத்தையும் பற்றியே குரல் எழுகிறது.

சிங்களமும், பௌத்தமும் அந்நியனால் நசுக்கப்பட்டிருக்குமானால் அதே போன்று தமிழ்மொழியும், இந்து, இஸ்லாம, கிறிஸ்துவம் ஆகியவையும் நசுக்கப்பட்டே இருந்திருக்குமே!

பௌத்தத்துக்கும்சிங்களத்துக்கும புனருத்தாரணம் வேண்டும் என்று கூறுபவர்கள், அதேகாலத்தில் அந்நியரின் நசுக்கலுக்குள் சிக்கிய தமிழையும் ஏனைய மதங்களையும் புனருத்தாரணம் பண்ண வேண்டும் என்று ஒரு வார்த்தையேனும் கூறாதது ஏனோ?

பெரும்பான்மை சிறுபான்மை வித்தியாசங்களை வைத்து எடைபோட விரும்பாத அந்நியனிடமிருந்து ஆட்சியை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் சொந்தச் சகோதரர்களை விழுங்கி ஏப்பமிடத் துணிவது மனிதாபிமானமற்ற செயலாகாதா?

### யாருக்குச் சுதந்திரம்?

இந்நாட்டுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை பௌத்த—சிங்களவர்களைத் தவிர மற்றைய மக்கள் திரிகரணசுத்தியுடன் ஆண்டு அனுபவிக்கிறார்களா? கிடையவே கிடையாது. பெரும்பான்மையினத்தவர்கள் மட்டும்தான் இச் சுதந்திரத்தின் பரிபூரண பலாபலன்களையும் அனுபவித்துக் கொண்டுள்ளனர் நாட்டிலே வருடாவருடம் கொண்டாடப்படும் சுதந்திர தினம் தமிழ்பேசும் இந்து இஸ்லாமிய கிறிஸ்துவ மக்களால் கரிநாளாகக் கொண்டாடப்படுகிறது. சைக்கூலிப் பட்டாளத்தையும் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனவான்களையும் இணைத்துக் கொண்டு கோயில்களில் பிரார்த்தனை நடத்தி வெளியுலகிற்கு வேடிக்கை காட்டிவிடலாம்; ஆனால் இதனெல்லாம் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் குறைகளைக் களைந்து விட்டதாகக் கொள்ள முடியுமா?

ஒரு புறத்திலே எழுகின்ற வேடிக்கை விளையாட்டுகளிலும் பார்க்க மறுபுறத்திலே எழுகின்ற குமுறல் ஒலிகள் உலகத்தில் நாலாதிக்குகளுக்கும் சென்று எதிரொலித்துவிடுகின்றனவே!

### பகற்கனவு

பல்லாயிரம் ஆண்டுகள் இந்நாட்டில் தொடர்பாக வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டத்தை சூழ்ச்சிகளாலும் சூதுகளினாலும் அழித்து ஒழித்துவிட்டு ஆட்சிக்கு வரும் பெரும்பான்மை வர்க்கம் கனவு காணுமேயானால் நிச்சயம் அக்கனவுகள் பொடிப் பொடியாகிவிடும் என்பதை சரித்திர ரீதியாகவுள்ள எடுத்துக்காட்டுகள் மூலம் நிரூபிக்க முடியும்.

ஆகவே, பெரும்பான்மை இனத்தவர்கள் தங்கள் ஆதிக்க வெறிக்குச் சற்று ஆப்பு வைத்துவிட்டு இந்நாட்டில் சுபீட்சம் வளர வழி பண்ணுவார்களாக.

இலங்கையை போன்று தான் இந்தியாவிலும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தேசாதிபதி யார்?

## ஐ. தே. கட்சிக்குள் தோன்றியுள்ள பிரச்சினை

**இலங்கையின் அடுத்த மகாதேசாதிபதி யார் என்ற பிரச்சினை இப்பொழுதே அரசியற் கட்சிகள் மத்தியில் எழுந்துள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தால் முன்னுளைய பிரதம நீதியரசர் திரு. கேமா டி பசநாயக்கா மாதேசாதிபதியாகலாம் என்று பேசப்படுகிறது. அதே நேரத்தில் ஐ. தே கட்சிக்குள் ஒரு குழுவினர் முன்னுள் மாதேசாதிபதி திரு ஒலிவர் குணத்திலகாவையே மீண்டும் தேசாதிபதியாக நியமிக்க வேண்டும் என்று கூறுகிருர்களாம். இதற்கிடையே திரு. மெத்தானந்தாவும் இப்பதவியைப் பெற ஆசைப்படுகிருராம்.

தேர்தல் நடைபெற முன்னரே அடுத்த மாதேசாதிபதி பற்றிய பிரச்சினை அரசியற் கட்சிகள் மத்தியில் எழுந்துள்ளது. சுதந்திரக் கட்சி மீண்டும் பதவிக்கு வந்தால் இன்றைய தேசாதிபதி திரு. வில்லியம்கோபல்லாவே தொடர்ந்திருப்பாராம். ஐ. தே. கட்சி பதவிக்கு வந்தால் யாரை மாதேசாதிபதியாக நியமிப்பது என்பதில் ஒரு பிரச்சினை தோன்றக் கூடும் என்று தெரிகிறது.

முன்னுள் பிரதம நீதியரசர் திரு. கேமா டி. பசநாயக்காவை மாதேசாதிபதியாக்க வேண்டும் என்று பத்திரிகைகளும் ஐ. தே. கட்சியின் சூத்திரதாரியென்று கூறப்படும் ஒருவரும் வற்புறுத்துகிருர்களாம்.

ஆனல் ஐ. தே. கட்சியின் தலைவர், முன்னுள் மாதேசாதிபதி திரு. ஒலிவர் குணத்திலகாவே மாதேசாதிபதிப் பதவிக்குத் தகுதியானவர் என்றும், அவர் பாகுபாடற்ற முறையில் நடக்கக் கூடியவர் என்றும் கூறி வருகிருராம்.

பௌத்த பலவேகய தலைவர் திரு. மேத்தானந்தா 1956ம் ஆண்டு திரு. பண்டாரநாயக்காவின் வெற்றிக்காக அயராது உழைத்த பின்னர், தன்னை மாதேசாதிபதியாக்கும்படி திரு பண்டாரநாயக்காவிடம் கேட்டதாகவும்; அதற்கு திரு. பண்டாரநாயக்கா மறுத்துவிட்டதாகவும், முன்னர் கூறப்பட்டது. இப்பொழுது அவர் திடீரென ஐ. தே. கட்சிக்குச் சார்பாக அறிக்கைகள் விடுவதிலிருந்து அவர் மீண்டும் அந்தப் பதவியின் மீது கண் வைத்திருக்கிருர் என்று தெரிகிறது.

## இ. த. அ. க. கொழும்பு கிளையின் வேண்டுகோள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூவர்ணங்களையும் கொண்ட துவாய்கள் மீண்டும் விற்பனைக்கு வந்திருப்பதாக இ. த. அ. க. கொழும்பு கிளைச் செயலாளர் அறிவித்துள்ளார். துவாய்களைப்பெற விரும்புபவர்கள் 16, அல்பிறட் கவுஸ் தோட்டம், கொழும்பு-3ல் உள்ள கட்சிப் பணிமனையில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இளம் தமிழர் இயக்கம் வெளியிட்டுள்ள 'ஏன் தமிழரசு' என்ற நூல் கிளையின் பணிமனையில் விற்பனைக்கிருப்பதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார். கிளை உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் பல உறுப்பினர்களின் இருப்பிட முகவரிகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பதால், உறுப்பினர்கள் அனைவரையும் அவர்களது தற்போதைய முகவரியை 16, அல்பிறட் கவுஸ் தோட்டம், கொழும்பு -3க்கு தெரிவிக்கும் வண்ணம் வேண்டியுள்ளார்.

## ஆளும் பொறுப்பை....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஆதிக்க வெறிக்கும் உரிமை வேட்கைக்கும் போர் மூண்டு விட்டது.

பல மொழி பேசும் பல இனமக்கள் வாழும் ஒரு பெரும் பிரதேசத்தை ஆங்கில மொழி ஒன்றினலேயே வெள்ளையன் கட்டுப்படுத்தி வந்தான். இந்நாட்டினைப் போன்றே இந்தியாவையும் ஏகமாக ஆக்கிலன் ஒன்றுக்கிய நிலையிலேயே விட்டு விட்டுச் சென்முன. ஆதிக்க ஆசை பிடித்த பெரும்பான்மை இனம் தங்கள் மொழி என்னும் பாவத்தைக் கொண்டே இன ஒற்றுமையை ஏற்படுத்த முனைகிறது.

### இனிப்பு பூசிய விடம்

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் இந்த 'ஒற்றுமை'யினுள் பொதிந்துள்ள அந்தரங்கம் புரியாது. வெளிப்படையாக நன்மை புரியவல்லது என்று தோன்றலாம். பிரதேச மொழிக்கோ, கலைக்கோ, கலாச்சாரத்துக்கோ, பண்பாடுகளுக்கோ எதுவித ஆபத்துக்களும் ஏற்படாது என்று வார்த்தை அடுக்குகளால் வர்ணிக்கலாம். ஆனல் அவைகள் வெறும் இனிப்புத் தடவிய விடம்.

மொழித்திணிப்பால் சகல இனங்களையும் ஒன்றாக்கி ஒரே இனம், ஒரேமதம், ஒரேநாடென்ற ஏக தத்துவத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தி விடவே பெரும்பான்மை இனம் கனவு காணுகிறது.

### தமிழகத்துத் தியாகிகள்

இந்தக் கனவுகளைப் பொடிப்பொடியாக்கும் பணியில் தமிழகத்துத் தியாகிகள் வரிசை வரிசையாக அணிவகுத்துச் செல்லுகிறானர்.

மொழியால், இனத்தால், மதத்தால், கலையால், பண்பால் இணைந்து பட்ட இரு நாட்டுச் சிறுபான்மையினருக்கும் பிரச்சினைகள் ஒத்தனவே! இரு திறத்தாரின் போராட்ட முறைகளும் ஒன்றுனவையே! கோரிக்கைகளும் ஒத்தேயுள்ளன. காலமும் சமமானதாகவே உள்ளது. தமிழகத்து வாசலிலே இந்தி வெறி; இலங்கையிலே சிங்கள வெறி. இரு வெறிகளையும் இணைத்து அடக்கி ஒடுக்கி விட்டு அக்கோரப் பிடியிலிருந்து விடுதலை பெறும் நாளே தமிழ் பேசும் மகனுக்கு விடுதலைத் திருநாள்.

## சந்திக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன 'மீனிங்' (என்ன பொருள்)'' என்று எம்மிடம் விளக்கம் கேட்டிருக்கிருர்.

இவருக்கும் நாம் நம்மாலான உதவிகளை (பொருளுதவி மட்டும் கிடையாது) நிச்சயம் செய்வோம் என்று வாக்களித்துள்ளோம்.

—

### இந்திவெறியை கண்டிக்கும் நிர்மானம்

இலங்கைச் சட்டக் கல்லூரித் தமிழ்மன்றத்தின் பொதுச்சபைக் கூட்டம் இத்திங்கள் 2ம் நாள் மன்றத் தலைவர் திரு. க. குணரத்தினம் தலைமையில், தென்னக மக்கள்மீது இந்தியைத் திணிக்கும் இந்திய அரசின் கொடுங்கோன்மைக்கு கண்டனம் தெரிவிப்பதற்காக கூடியது.

இந்திய அரசின் ஏதேச்சாதிகார நடவடிக்கைகளைக் கண்டித்து பலர் உரை நிகழ்த்திய பின்னர், திரு சா. மு. சந்திரகாசன் ஒரு கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானத்தை திருவாளர்கள்: மு. திருநாவுக்கரசு, கா. தங்கவடிவேல் ஆகியோர் வழிமொழிந்தனர். தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## பத்திரிகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் பலமுறை சென்று ஏமாந்து திரும்பியதாகவும், 4ம் திகதி காலை அந்தத் தலைவரின் இல்லத்துக்கு நிருபர் சென்றதாகவும் தலைவரின் விகிதர் என்பவர் வீட்டு வேலைக்காரன் ஒருவருடன் சேர்ந்து நிருபரை அடித்ததாகவும் நிருபர் பொலிசில் புகார் செய்திருக்கிருர் என்று அறியப்படுகிறது.

பத்திரிகை நிருபருக்கும் தலைவர் வீட்டு விகிதருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, அதன் விளைவாக அவர் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நிருபர் தாக்கப்படுவதை வீட்டிலுள்ளவர்கள் தடுத்து நிறுத்த முற்படவில்லையென்றும் தெரிகிறது. இப்புகாரைப்பற்றி பொலீசார் விசாரணை செய்து வருகின்றனரென்றும் தெரிகிறது.

—

## தமிழரசாரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாரங்களுக்காகச் சென்றுவிட்டமையினுல், கொழும்பிலே உள்ள சில தமிழரசுப் பிரமுகர்களை இவ்வரசியற் கட்சிப் பிரமுகர்கள் வளைந்து வளைந்து சென்று கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சில சிங்களக் கட்சி முக்கியஸ்தர்கள், தமிழரசுக்கட்சி குறிப்பிட்ட கட்சிகளுடன் இணைந்தால், பலதரப்பட்ட உரிமைகளை வழங்கிவிடுவதாக வாக்களித்துள்ளனராம். இவர்களுடைய கோரிக்கைகள் எதையுமே தமிழரசுப் பிரமுகர்கள் ஏற்கமுடியாது என்றும் தலைவர்களும் கட்சிக் காரியசபையுமே அவற்றையிட்டுத் தீர்மானிக்க வேண்டும் என்றும் கூறிவருகின்றனராம்.

## யார் இந்த கூட்டணி....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழர்களை கோவணாண்டிகளாக அப்படத்தில் வரையப்பட்டுள்ளது.

கூட்டரசாங்கம் தோன்றிய பின்னர் தமிழர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டதாக வட இலங்கையில் போட்டியிடும் ஒரு சிறிமாவின் வேட்பாளர் முழங்கினராம்.

### எது சலுகைகள்?

தமிழ்பேசும் அரச ஊழியர்களைச் சேவையிலிருந்து வெளியேற்ற எடுத்த முயற்சிகளைச் சலுகைகள் என்பதா? அல்லது தமிழ்மொழியில் கருமமாற்றி சிங்களக் காசோலையைத் திருப்பி யனுப்பிய திருமலை நகராண்மைக்கழகத்தைக் கலைக்கத் திட்டம் வகுத்ததைச் சலுகைகள் என்பதா? அல்லது திருமலை நகராண்மைக்கழகத் தலைவரை அழைத்து அவமரியாதை செய்ததைச் சலுகைகள் என்பதா? அல்லது வட-கிழக்கு மாகாணத்திற்கு சிங்கள ஊழியர்களை அனுப்பிவந்ததைச் சலுகைகள் என்பதா? அல்லது அப்பாவித் தமிழர்களைக் கள்ளத்தோணிகள் என்று பிடித்து அடைப்பதைச் சலுகைகள் என்பதா? அல்லது இராணுவத்தைக்கொண்டு தமிழர்களை நாயினும் கேடாக நடாத்துவதைச் சலுகைகள் என்பதா? அல்லது புயல் நிவாரண உதவியில் வட-கிழக்கு மாகாணத்திலுள்ளவர்களைப் புறக்கணித்து கல்லோயாச்சிங்களவர்களுக்கு உதவி வழங்கியதைச் சலுகைகள் என்பதா? அல்லது ஐந்தேகாருக்கும் தமிழ்பேசும் மக்கள் நாடு கடத்தவும், குடியுரிமைபெறும் கொஞ்ச நஞ்சம் தமிழர்களை தனிவாக்காளர் இடப்பில் போட்டு இனவொதுக்கல் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ளுவதைச் சலுகைகள் என்பதா? எந்தச் சலுகை என்று கேட்கிருேம். இவை தான் கூட்டரசாங்கம் தமிழர்களுக்குச் செய்த சலுகைகள்!

### சமசமாச- கொம்யூனிஸ்டுக்கு ஆதரவா?

சுதந்திரக்கட்சி அரசாங்கம் தமிழர்களை அடக்கி ஒடுக்கியது. தோழர் டாக்டர் என். எம். பெரேராவை நிதி அமைச்சராகக் கொண்ட கூட்டரசாங்கம் அடக்கியொடுக்கியதுடன் ஒழித்து அழிக்கவும் செய்தது. இந்த உண்மையை யாரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது!


## உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினுலும் மந்திர சக்தியினுலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.



**வியப்பூட்டும் வகையில் சுத்தம் செய்கின்றன**

அவற்றில் சிலிகோன்ஸ் உண்டு!




இதோ இருக்கிறது, காரைத் துப்புரவு செய்யும் கருமத்தைச் சுலபமாக்கும் ஒரு கார் பொளிஷ்-இது இரு கருமங்களைச்செய்கிறது... ஒட்டோபிறைட் சுலபமான ஒரே பாவனையில் துப்புரவு செய்து மினுக்குகிறது

இதோ இருக்கிறது, கண்ணுடியையும், உலோகத்தையும் சுத்தம் செய்து, மினுக்கி, கூடவே எவற்றிற்குப் பாதுகாப்பும் அளிக்கும் ஒரு பொளிஷ், உங்களுக்கு ஏற்ற மிகச் சிறந்த பொருள் ஈஸி-ஓவ் ஏனெனில், உலகின் அதியுன்னத சுத்திகரிப்பு வஸ்தான அம்மோனியா அதில் சேர்ந்திருக்கிறது.




பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்
மக்கல்லம் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# மக்களால், மக்களுக்காகவே!...

செம்பியன்செல்வன்

நீண்ட நாட்களின் பின் கந்தையா அம்மான் மனதில் நம்பிக்கை சுடர் பூத்துச்சிரித்தது.

'இனி எப்படியும் என்ர குமருகள் கரை சேந்திடும்!...' நினைவே பட்ட மரத்தின் பசுந்தளிராக துளிர்த்துச் சிரித்தது.

'என்ன இருந்தாலும் பாளிமேந்து அரசாங்கம் ஒரு அரசாங்கம் தான். இல்லாட்டா என்ர சீவியத்தில இப்படியெல்லாம் மக்களுக்கு அரசாங்கம் உதவி செய்ததைக் கண்டிருப்பனே, அல்லது கேட்டுத்தானிருப்பனே! முருகேசு மாஸ்டர் சொல்லச் சொல்ல எனக்கும் ஒரே ஆச்சரியமாப் போச்சு!

நானும் என்ர வயதான காலத்தில பிறந்த ரெண்டு பெட்டைக் குமருகளை எப்படிக் கரையேத்துறது எண்டு கொஞ்ச நஞ்சமே கவலைப்பட்டுக் கொண்டிருந்தனான். மூத்தவளுக்கும் இல்லையெண்டாலும் இந்த ஆவணியோட இருவத்துமூண்டு வயது முடியப்போகுது...அடுத்தவளுக்கும் இருவதாயிடும்... இப்ப பொண் புரசுகளை கரையேத்துறது எண்டாச் சும்மாவே...கடையில நிக்கிற பொடியங்களும் மூணு கொண்டா! நாலு கொண்டா எண்டா நாங்க என்ன செய்யிறது. நானும் என்ன கொட்டிக் குமிச்சே வைச்சிருக்கிறன்! நானும் இண்டைக்கும் மழையோ தண்ணியோ வெளியில பிழைப்புக்கு போகத் தவர்றதில்லை. அப்படி போய்க் கிடைக்கிற மூண்டு நாலு ரூபாவில தான் நாலு சீவன் காலத்தைக் கடத்துறதெண்டா சும்மாவே!

ஏதோ அப்பு அந்தக் காலத்திலே எழுதி வைச் சுட்டுப்போன பத்துப் பரப்புக் காணியும், அதில கிடைக்கிற பிரியோசனமும் இல்லையெண்டா நான் எப்பவோ காத்தாப் பறந்திருப்பன்.

அண்டைக்கும் மூத்தவளைப் பாக்க வந்த பொடியன் மூவாயிரத்துக்கு நகையும், இரண்டாயிரம் ாசாத் தந்தா கலியாணம் கட்டுறது எண்டவன். நான் எங்க பணத்துக்குப் போவன். இருக்கிறது இந்த நிலம் ஒண்டு தான், அதை வித்துப் போட்டு பின்னடிக் காலங்களிலே யார் கஷ்டப்படுகிறது. அது ஈட்டில வைக்கிறதெண்டாலும் ஊரில அநியாய வட்டி கேக்கிறுங்க. இந்த அறுவாங்க விட்ட ஈடு வைச்சாப் பிறகு மீட்கவும் முடியுமே!

இதுகளுக்காண்டித் தான் அரசாங்கம் காணி மேலே கடன் கொடுக்குதாம். குறைஞ்ச வட்டியில் ஏழை மக்களுக்கெண்டு தான் அரசாங்கம் இந்த உதவி செய்யுதாம். எங்கட உறுதியைக் கொண்டு போய்க் காட்டினு கடன் தருவினமாம் ஒரு ஐயாயிரமெண்டாலும் கடன் எடுத்துப் போட்டா, எப்படியோ உள்ளதைக் கொண்டு கொட்டிப் புரட்டிச் சமாளித்து இரண்டையும் கரையேத்திடலாம். பின்னால எப்படியும் கஷ்டப்பட்டு உழைச்சுக் காணியை மீட்கலாம். மருமகப் பொடியங்கட்ட விசயத்தைச் சொன்னு உதவாமயே போயிடுவாங்கள். மருமவனு வர முந்தித்தான் எடுப்புக் காட்டி ற்கிறது. இப்படித்தான் அன்னம்மாட மருமோனும் கலியாணத்துக்கு அது கொண்டா இது கொண்டா எண்டு நிண்டவன். இண்டைக்கு என்னடாண்டா மாமி வீட்ட விட்டு வெளியில வரக்கூட பொண்டாட்டிட்டயும், மாமியிட்டயும் கைகட்டி அனுமதிக்கல்ல நிற்கிறுன். இந்தக் கால பொடியங்களே இப்படித் தான்.

நான் ஏதோ விசர் யோசனையில கிடக்கிறன். வீட்ட போய் முதலில உறுதியைத் தேடிப்பிடிக்க வேணும். அது எங்க கிடக்கோ—எப்பவோ அப்பற்ற காலத்தில கண்ணால பாத்தது. மனுசியைத் தான் கேட்கோணும். அது பத்திரமா தன்ர அடுக்குப் பெட்டியுக்க வைச்சிருக்கும்.

நாளைக்கு முருகேசு மாஸ்டர் வாறன் எண்டு சொன்னவர். மனுசன் நல்ல ஆள். ஆக்களுக்கு உதவி செய்யிறதில வலு விண்ணன். ஆனு ஆளுக்கு கொஞ்சம் காசில பிடிப்புக் கூட. இப்ப இந்தக் காலத்தில யாருக்குத்தான் காசாசை இல்ல. ஏதோ நல்லபடி முடிச்சுக் குடுத்தா ஐஞ்சைப் பத்தக் கொடுக்க வேணும்.... அடிக்கடி ஆள் பனையானில போடும். அதுக்கும் செலவளிக்கத்தான் வேணும்...அதுவும் செலவளிக்காட்டி எப்படிக் காரியம் நடக்கும். மனுசி கொஞ்சக் காசு வைச்சிருக்கிறு போலகிடக்கு அவாட்டத்தான் கேள்க்கணும்... அட! நினைப்பில வீடு வந்தது கூடத் தெரியேல்ல...?

(2)

'இதென்னடா பெரிய கரச்சலாப்போச்சு, ஏதோ எங்கட காணி தானே. உறுதியைக் காட்டி ஈடு வைச்சுப் பணம் எடுக்கலாம் எண்டுதான் நினைச்சன். இப்ப பாக்க எல்லா விசயமும் புரியுது.

முருகேசு மாஸ்டர் ஏதோ கடன் வாங்கிற பத்திரம் எண்டு ஒண்டு 'மக்கள் வங்கி'யில வாங்கி வந்தார். அதில அவங்கள் என்னென்ன கேள்வியெல்லாம் கேட்டிருக்கிறுங்க—என்ற முப்பாட்டன்ர அப்பன்ர பேர் என்னண்டா, எனக்கென்ன தெரியும்.

என்ர தொழில் என்ன?... வருமானம் என்ன? ...எண்டெல்லாம் கேட்டிருக்கு... எனக்கெண்டு ஒரு தொழிலே?...வயல்ல வரம்பு கட்டுவன் இன்னொரு நாளைக்கு கிணறு இறைப்பன், விறகு கொத்துவன்... உதெல்லாம் கூலி வேலையாம் முருகேசு மாஸ்டர் சொல்லுறார்... வருமானம் ஆருக்குத் தெரியுது. ஒரு நாளைக்கு வேலைக்கே போகாம வீட்டில சும்மா குந்தியிருப்பன்...இது என்ன வருமானம்?மாஸ்டர் சொல்லுறார். வருமானத்த சரியாக் காட்டாட்டி கடன் தராயினமாம்... மாஸ்டர் இருநூறு எண்டு போட்டிருக்கிறார்...ஏனெண்டா அப்படிப் போட்டாத்தான் கடனை நம்பித் தருவினமாம். இப்படி போட்டா மட்டும் போதாம்...விதானையாரும் இத விசாரிச்சு சரியெண்டு கடதாசி கொடுக்கோணுமாம்...இதுக்குள்ள இன்னொரு சங்கடம், நாங்க எங்கட உறுதி மட்டும் அனுப்பின மட்டும் போதாதாம—இதுக்கு முந்திய முப்பத்தைஞ்சு வருட உறுதியும் எடுத்து அனுப்போணுமாம். ஏனெண்டா எனக்கே தெரியாம எங்கட அப்பு வேறு யாருக்காவது ஈடு வைச்சிருக்கிறுரா எண்டு தெரியோணுமாம்!

இப்ப இந்த உறுதி எடுக்க வெண்டு புறக்கிராசியாரிட்ட அம்பது ரூபா கொடுத்திட்டு வந்திருக்கு. நாளண்டைக்கு வரச் சொன்னவர். நாளண்டைக்கு புறக்கிராசியார் உறுதி தரு மட்டும் சும்மாதான் இருக்கோணும்.

இதுக்கிடேல்லையே எல்லாச் செலவும் எண்பது தொண்ணூறு எண்டு வந்திட்டுது. பணம் எடுக்கிறன் பணம் எடுக்கிறனெண்டு வீட்டில கிடக்கிற கொஞ்ச நஞ்சக் காசையும் கரியாக்கிறனெண்டு மனுசி ஒரே ஒப்பாரி வைக்குது. பெண்டுகளே உப்புடித்தான். நாலு காசை செலவழிச்சாத்தான் பணம் எடுக்க முடியும். கலியாணமும் ஒப்பேறும்.

இதுக்குள்ள விதானையாரும் எரியிற வீட்டில்ல புடுங்கினது லாபம் எண்டு நிக்கிறார். என்ர வருமானக் கணக்கு அவ்வளவு சரியில்லயாம். மாஸ்டர் சொல்லுறார் அவர் ஏதோ ஐஞ்சப் பத்தை எதிர்பார்க்கிறார் எண்டு. இலையளுக்கெல்லாம் கொட்டிக் கொடுக்கத்தான் எடுக்கிற பணம் பத்தும்போல கிடக்கு. ஏதோ காலை விட்டாச்சு...ஒரு கை பாக்காம விடப்படாது. விதானையார் தான், இப்ப எதையும் கொடுத்து வைச்சா பின்னடியில ஏதும் உதவியெண்டா போய்ப் பார்க்கலாம்.

எல்லாம் செய்ய வேண்டியதைச் செய்து போட்டுப் பாத்தா, கடைசியில இப்படி ஒரு இடியைக் கொண்டந்திருக்கிறார் மாஸ்டர். விண்ணப்பத்தோட இருநூத்தைம்பது ரூபாவும் கட்டி அனுப்போணுமாம். அப்படியெண்டாத்தான் கொழும்பில எங்கட காணி விசயத்தைக் கவனிச்சுப் பாப்பினமாம். எங்கட உறுதிகள் எல்லாம் சரியேண்டு பாக்கிறதுக்கான செலவாம் இது. அப்படியெண்டா நாங்க பொய்யே எழுதி அனுப்புறம். இப்ப நான் இருநூத்தைம்பது ரூபாவுக்கு எங்க போறது. மூத்த பெட்டையின்ற கழுத்தில கிடக்கிர சங்கிலியைக் கொண்டுபோய் ஏதேனும் செய்தாத்தான் ஏதும் கிடைக்கும். இந்தச் சங்கதி தெரிந்தா மனுசி உயிரையே விட்டிடும். பிள்ளையிட்ட மட்டும் ரகசியமா விசயத்த சொல்லி காசு வங்கியால வந்தோடன உன்ர சங்கிலியத்தான் முதலில தாறது எண்டு சொல்லிக்கவனமா வாங்கோனும் ... இப்பவே ஐநூறுக்கு மேலே போட்டுது...கடவுளே ஏழைக்கு கவுண்மேந்து உதவி செய்யுது எண்டு இதில தலைய நுழைச்சிட்டன் ... நீதான் காப்பாத்தோணும்.

(3)

மக்கள் வங்கில வீட்டுக்கு பதில் வருமெண்டு சொல்லிச்சினம். ஒவ்வொரு நாளும் தபாலப் பாத்துப் பாத்து மண்டை வெடிச்சுப் போட்டுது...ஒரு நாளா இருநாளா மூண்டுமாதமா ஒரு இளவையும் காணேம் முருகா...கந்தசாமிக் கடவுளே...இதுவும் உன்ர சோதனையா! ...உதென்ன புள்ள கடதாசியே!

அப்பாடி! இண்டைக்குத் தான் பதில் வந்தது. எனக்கு கையும் விளங்கேல்ல...காலும் விளங்கேல்ல மாஸ்டரிட்ட கொண்டு போய்க் காட்டோணும்.

'அம்மான் நீங்க ஒண்டுக்கும் பயப்படாதிங்க! எப்படியும் பணம் நான் எடுத்துத் தாறன்' எண்டு மாஸ்டர் சொல்ல எனக்கு அடி வயித்தக் கலக்குது.

'என்ன மாஸ்டர் சொல்லுறீயள்!'

'நீர் பெற விரும்பும் பணத்திற்கேற்ற வருமானம் தங்கட்கு இல்லையாதலால்—தங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்...' எண்டு பதில் வந்திருக்குதாம்.

அப்ப என்ன மாஸ்டர் என்ர கதி! வீட்ட கிடந்ததுகளையும் வித்துச் சுட்டுச் செலவளிச்சா இப்படி பதில் எழுதியிருக்கிறுங்களே! ... இதுதான் ஏழைகளுக்கு செய்யிற உதவியா? ஏழைகளுக்கு என்ன ஆயிரம் ரூபாவா வருமானம் வரும், அப்படி வந்தா ஏன் இப்படி வங்கிப் பணத்துக்கு தவண்ட அடிக்கிறோம்...நல்ல அரசாங்கமும்...அதன் உதவியும்...

மாஸ்டர் சொல்லுறார் மறு பரிசிலனையாக இன்னொரு விண்ணப்பம் அனுப்பலாமாம். இதுக்கு முந்தினமாதிரி இருநூத்தைம்பது ரூபா கூடத் தேவையில்லையாம். ஆனு வருமானத்த கூட்டிப் போடலாமாம்...அப்படி வெண்டா ஒருவேளை கடன் தருவாங்களாம்... அதுவும் நிச்சயமில்லை... எதுக்கும் முயற்சிப்பம்... வீட்டில ஆர் பதில் சொல்லி மாளுறது!

இப்ப நாங்க நினைச்சபடி வருமானத்த காட்ட முடியுமே. விதானையுமல்ல உடன்பட வேணும்... அவன் தன்னிலே கேள்வி வரும் எண்டு முறுக்கிறுன். இப்பவும் கொஞ்ச ஏதோ செலவோட செலவு! பாப்பம். இந்த முறை என்ன பதில் வருது எண்டு. இப்ப கவனமா எங்கட பத்திரத்தை நிரப்பி எழுதியிருக்கிறம். முந்தி கூலி எண்டு போட்டம். இப்ப அதோ ஒரு கடையும் புதிசா வைச்சிருக்கிறம் எண்டு எழுதியிருக்கு. திடீர் எண்டு எப்படி வருமானம் கூடிச்சு எண்டு கேட்டா பதில் சொல்ல வேண்டாமே! இது விதானையார் சொல்லித் தந்த வழி...இனியாவது கடவுள் கண் முழிக்கிறுரா வெண்டு பாப்பம்.

(4)

'அட! என்ன இந்த முறை கெதியா பதில் வந்துட்டுது' நல்ல வேளை முருகேசு வாத்தியாரும் பக்கத்தில இருக்கேக்கயே வந்தது நல்லதாப் போச்சு! வாத்தியாரும் சிரிப்போடுதான் கடிதத்த உடைக்கிறுர்— கடவுளே! என்னப்பனே! நீ நல்ல சொல்லுக்குடு மாஸ்டர்! மாஸ்டர்!...என்ன என்ன ஒரு மாதிரி இருக்கிறீங்க! படியுங்க...

'உங்கள் விண்ணப்பப் படி நீங்கள் வருமானவரி கட்டுபவராக இருக்க வேண்டும். நீங்கள் ஒழுங்காக உங்கள் வருமான வரியைக் கட்டி வருகிறீரா என்பதனை அறிந்தபின்பே உமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும். அப்படி இதுவரை நீர் வருமான வரி கட்டியிரா விட்டால் உம்மீது அரசாங்க நடவடிக்கை எடுக்கப்படும். உமது பக்க விதானையார் இதுபற்றி விசாரிக்க வருவார்'.

ஐயோ!...என்ர பணம்!... வரி!...வங்கி! ...சங்கிலி... முருகா—கந்தையா அம்மான் மயங்கிச் சாய்கின்றார்.

(யாவும் கற்பனை)

## முஸ்லீம்களின் உரிமைகளை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டை பொன் கொழிக்குப்பூமியாக மாற்றி தங்கள் உடல் பொருளாவியை ஈந்துவரும் மலைவாழ் தொழிலாளர்களை நன்றி கெட்ட நிலையில் நடுக்கடலுக்குள் ஆழ்த்தத் திட்டமிட்டது இக்கட்சி. சிங்களபௌத்தரல்லாதோர் இந்நாட்டில் இருக்கவே முடியாத சூழ்நிலையினை ஏற்படுத்தி வருகிறது. இக்கட்சிக்கு எந்த உண்மை முஸ்லிமும் ஆதரவுதலகமாட்டான்.

### யு. என். பி.

இன ஒழிப்பு அத்தியாயத்தின் முதல் அங்கத்[illegible] [illegible]திட்டிய ஐக்கியதேசியக் கட்சியை முஸ்லிம்கள் ஆதரிப்பதானது தங்கள் அழிவுக்கு தாங்களே பாதை அமைப்பதற்கொப்பாகும்.

மக்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி ஏமாற்றிவோட்டுப் பெற்றதும் மாற்றமடைந்துவிடும் எத்தனையோ கட்சிகள் இந்நாட்டில் உள. இவை எல்லாம் [illegible] [illegible]யும் அளிக்கக்கூடிய அடிப்படைத் திட்டங்களைக் கொண்டதாக இல்லை.

தியாகத் தழும்புகளை ஏற்று தீவிரமான போராட்டங்களைக் கண்ட கட்சி தமிழரசுக்கட்சியே. ஈழத்துக் காந்தி எனப் போற்றப்படும் தந்தை செல்வநாயகத்தின் தலைமையிலே இந்நாட்டின் சிறுபான்மை இன மக்கள் அணிதிரண்டு விடுதலை காண அறப் போர்க்களம் புக அதோ காத்துநிற்கின்றனர்;

காந்தி காட்டிய சாந்தி மார்க்கத்திலே சத்தியப் போர் புரிந்து நமது உரிமைகளைப்பெற இலங்கைவாழ் தமிழ்பேசும் முஸ்லிம்கள் அனைவரும்ஒன்றுசேருவோமாக. வாரீர்! வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாக்காச் செட்டியார்களின் வரலாறு

## தமிழ்ப் பண்பாடு தனித் தன்மையைக் காத்துளது

தமிழ் நாட்டிலிருந்து முற்காலத்தில் வணிகர்களே பிற நாடுகளுக்குச் சென்றார்கள். இடைக்காலத்திலும், இக்காலத்திற்போல வணிகர்கள் பிற நாடுகளுக்குச் சென்று தம் தொழிலை நடத்தினர். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வணிகத் தொழிலில் ஈடுபட்டவர்களைப் பொதுவாகச் 'செட்டிகள்' என வழங்கும்வழக்கு உண்டாயிற்று கி. பி. பதினாலாம் நூற்றாண்டளவில் மலாக்காவுக்குச்சென்ற தமிழர்களிற் பெரும் பகுதியினர் வணிகத்துக்காகச் சென்றிருக்கலாம். இவர்கள் யாவரையும் அக்காலத்து மக்கள் 'செட்டிகள்' என்று அழைத்திருப்பர். எனவே இந்தப் பெயரே மலாக்காவிலே தங்கி வாழ்ந்த தமிழ் மக்களுக்கு உரிய பெயராயிற்று. இம் மக்கள் இப்பொழுது வணிகத்தொழிலில் ஈடுபடாமல் வாழ்கின்றனரெனினும் இவர்களுடைய முன்னைய பெயரான 'செட்டிகள்' என்பதாலேயே இன்றும் அழைக்கப்படுகின்றனர்.

இந்த மலாக்காச் செட்டிகளின் வாழ்வும் வரலாறும் ஆய்ந்து பயன்பெறத்தக்கனவாகும். பிற இனமக்களிடை நாலைந்து நூற்றாண்டுகள் தொடர்ந்து வாழும் ஓரின மக்கள் எத்தகைய வாழ்வினை வாழ்வார்கள்? அவர்களின் வாழ்வியலைப் பாதிக்கும் தாக்கங்கள் யாவை? அவர்களுடைய இனத்தின் வாழ்வியலின் எந்தக் கூறுகள் மாற்றமடையும்; எந்தக் கூறுகள் நிலைத்துநிற்கும். அவர்களின் உளவியல்பு எவ்வாறு மிளிரும். முதலிய பலவற்றை ஆராய்ந்து அறிதற்கு மலாக்காச் செட்டியார்களின் வாழ்வும் வரலாறும் வாய்ப்பளிக்கின்றன.

### ஒரு படிப்பினை

இலங்கையிலும் இந்தியாவிலும் சில நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வாழும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் முதலானோரின் வழித்தோன்றல்களின் வாழ்வியலை நாம் நன்கு அறிவோம். நம் தமிழினத்தவர் இவ்வாறு வேற்று நாட்டிலே சில நூற்றாண்டுகள் தங்கித்தாய்நாட்டின் தொடர்பின்றி வாழ்ந்தால் எவ்வாறு வாழ்வார்கள் என்பதை மலாக்காச் செட்டியார்களே இன்று நமக்குப் புலப்படுத்துகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை வரலாறு இன்னும் ஆராய்ந்து எழுதப்படவில்லை.

எனவே, இவர்கள் வாழும் பகுதிக்குச் சென்று இவர்களை நேரிற்கண்டு கலந்துரையாடிப் பெறத்தக்க செய்திகளைத்தொகுத்தற்கும் இவர்களின் வாழ்க்கை முறைகளை அறிதற்கும் மலாயாப் பல்கலைக் கழகச் சார்பிலே நாங்கள் பதின்மர் முயன்றோம்.

எங்களிற் பெரும்பாலானோருக்கு இப் பயணமே மலாக்காவுக்கு முதற்பயணமாகையால் நாங்கள், எங்களுக்குமலாக்காவிலே உதவி செய்யத்தக்க அன்பர்கள் சிலரின் உதவியை நாடினோம். மலாக்காவிலே தமிழ் மக்களின் நலத்துக்காகப் பெரிதும் உழைக்கும் பொதுநலத் தொண்டர் திரு. எஸ். எஸ். மணியம் அவர்களும், திரு. சுந்தரம் அவர்களும் அவருடைய மனைவியார் அன்னலட்சுமி அவர்களும் இவர்களுடைய மருமகன் டாக்டர் நாதன் அவர்களும் எங்களை வரவேற்று விருந்து நல்கி வேண்டிய உதவிகளை யெல்லாஞ் செய்து எமது பயணத்தை வெற்றிபெறச் செய்தனர்.

திரு. மணியம் அவர்கள் சீனக் கம்பெனி ஒன்றினை வாங்கிச் சிறந்த முறையில் வியாபாரத்தை நடத்தி வருகிறார். மலாக்காச் செட்டியார்கள் வாழும் பகுதிக்கு எங்களை அழைத்துச் சென்று, எங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி அருந்தொண்டு ஆற்றியவர் இவரேயாவர்.

### தமிழ் மறந்த தமிழர்கள்

மலாக்காச் செட்டியார்கள் என்று வழங்கப்படுபவர்களிடை பிள்ளை, கோனார், படையாச்சி, நாயுடு முதலிய பல வகுப்பினர் உளர். இவர்களிற் பலர் மலாயாவின் பல பகுதிகளிலும் சென்று வாழ்கின்றனர். இப்பொழுது மலாக்காவில் ஏறக்குறைய நாற்பது குடும்பங்களே உண்டு.

இவர்களிற் பெரும்பாலார் தமிழை மறந்துவிட்டனர். முதியவர்கள் சிலரே தமிழறிவு உடையவர்களாகஇருக்கின்றனர். மலாக்காவிலுள்ள தமிழர்களின் பெரு முயற்சியால் இப்பொழுது இவர்கள் தமிழ் கற்கின்றனர்.

தமிழர்களுடைய—சிறப்பாகச் சைவர்களுடைய—பழக்க வழக்கங்களும் சமயச் சடங்குகளும் இவர்களிடம் இன்னும் காணப்படுகின்றன. தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி முதலியவற்றைக் கொண்டாடி வருகின்றனர். சில விரதங்களையும் அநுட்டிக்கின்றனர். நவராத்திரியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

தமிழ்ப் பெண்களையே பெருயபாலும் மணஞ்செய்தாலும் சீனப் பெண்களையும் மலாய்ப் பெண்களையும் மணக்கும் வழக்கமும் உண்டு. சிலருக்கு இரண்டு மூன்று மனைவிகளும் உளர். எந்த இனப் பெண்ணை மணந்தாலும் தாலிகட்டும் வழக்கத்தை இவர்கள் இன்னுங் கைவிடவில்லை. பெண்கள் பூச்சூடிப் பொட்டிட்டுத் தம்மை அணியுறுத்துகின்றனர்.

இவர்கள் வாழும் பகுதி சிறியதெனினும் இங்கு பல கோயில்கள் உள. பிள்ளையார், முருகன், ஐயனார், மாரியம்மன் முதலிய தெய்வங்களுக்குக் கோயில்கட்டி வணங்கி வருகிறார்கள். பண்டாரங்களே கோயிற் பூசகர்களாகக் கடமை ஆற்றுகின்றனர்.


தமிழ் தெரியாதவர்கள் கோயில்களில் வணங்கும் பொழுது தெய்வத்தின் பெயரைச்சொல்லி மலாய்மொழியில் வணங்குகிறார்கள் சுப்பிரமணியர் தோத்திரம், அம்மன் தோத்திரம் முதலிய வற்றைப் பாராயணஞ் செய்வாரும் உளர். நூறு ஆண்டுக்கு முன் எழுதப்பட்ட சுப்பிரமணியர் தோத்திரப் பிரதி ஒன்றினை ஒருவர் எமக்குக் காட்டினர். இப் பிரதியை அவர் பொன் போற் பொதிந்து காத்துவருகின்றார்.

### லிஸ்பனில் தமிழ்

இவர்களின் முன்னோர் லிஸ்பன் நகரில் உள்ள போர்த்துக்கீச அரசருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியுளர். இந்த விண்ணப்பம் தமிழில் எழுதப்பட்டது. இப்பொழுதும் இது லிஸ்பன் நகர் நூலநிலையத்திலுளது. தமிழில் கிடைக்கும் மிகப் பழையகையெழுத்துப் பிரதி இந்த விண்ணப்பமே எனக் கூறுகின்றனர்.

பிற இடங்களிலுள்ள தமிழர்களுடன் தொடர்பு கொள்ளாமையாலும் சூழலாலுமே. இம் மலாக்காச் செட்டியார்கள் தம் தாய் மொழியைத் தொடர்ந்து வழங்க முடியாதவர்களாயினர். எனினும், அயலிலுள்ள மலாயருடனோ, சீனருடனோ இவர்கள் கலந்து தம் தனித் தன்மையை இழக்காதிருப்பது விதந்து குறிப்பிடத்தக்கது. தமிழரின் பழக்க வழக்கங்களும், சைவநெறியுமே இவர்களைத் தனித்துவாழச் செய்துள.

இப்பொழுது தமிழ்மக்களின் தொடர்பு இவர்களுக்குக் கிடைத்திருப்பதால் தம் தாய்மொழியாம் தமிழை ஆர்வத்துடன் கற்றுவருகின்றனர்.




(11)




## அழகு சுடும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி ஏதோ 'கசமுச' வென்று சிங்களத்தில் பேசியது கணேசனுக்குப் புரியவேயில்லை. அத்தனை பெண்களையும் அலட்சியப்படுத்தி, அவர்களைப் பற்றித்தான் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை என்று காட்டிக் கொள்ளும் பாவனையில் குளிக்க ஆரம்பித்தான் கணேசன்.

ஊரில் என்றால் சாதாரணமாக ஐந்து நிமிஷம் போதும் கணேசனுக்குக் குளிப்பதற்கு இங்கு என்னடாவென்றால், ஆற்றில் இறங்கி அரைமணியாகியும், ஆற்றை விட்டுக் கரைசேர அவனுக்கு மனம் வரவில்லை. அவன் முன்னால் குளித்துக் கொண்டிருந்த பல 'அழகு'கள் அவனை அப்படி நீரில் ஊறப் பண்ணிக் கொண்டிருந்தன.

ஒரு படியாகக் குளித்துவிட்டுக் கரை ஏறினான் கணேசன். அவனுக்கு முன்னாலேயே குளித்துவிட்டு, தன் சட்டையாலேயே ஈரத்தைத் துடைத்து மீண்டும் அதே சட்டையை அப்படியே போட்டுக் கொண்டு, ஈரக் காற் சட்டையையும், இரச் சட்டையையும் தன் 'மேல் சூட்டால்' காயவைத்துக் கொண்டு தயாராக நின்று கொண்டிருந்தான் கிருஷ்ணன். அவன் நின்ற திசை நோக்கி, ஈர உடையும், ஈர மேனியும் 'வெட வெட'க்க ஓர் உயிர்ச்சிலை நடைபயன்று வந்து கொண்டிருந்தது!

## இசைக் கலா மன்றம்

நயினாதீவு இசைக்கலாமன்றம் கடந்த சனவரித் திங்கள் 24ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஜெம்பட்டா வீதியிலுள் 155/31 இல்லத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது பின்வருபவர்கள் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு. எஸ். நடராசா, செயலாளர்: திரு. ஆர். எம் நடராசா, பொருளாளர்: திரு. இ. சோமசுந்தரம்.




## சங்கப் பலகை

### கலை விழா மலர்

வெளியீடு: விஜயரத்தினம் மாவித்தியாலயம், நீர்கொழும்பு
விலை ரூ 2-00

(பெறுமதியை போதிய தபால் தலைகளை அனுப்பியே பெற்றுக் கொள்ளலாம்)

முத்தமிழ் அன்னைக்கு முத்து மாலைகள் கோத்து அலங்கரிப்பது தமிழ் மக்களின் தனிச் சிறப்புகளுள் ஒன்று. மூவகைத் தமிழிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்முத்துக்களைச் சேர்த்து 'கலைவிழா மலர்' என்ற மகுடமிட்டு நீர்கொழும்பு விசயரத்தினம் மாவித்தியாலய (முன்னாள் விவேகானந்த வித்தியாலயம்) ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு இதனழ [illegible] இலங்கையிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் பல தமிழறிஞர்கள் கட்டுரைகளையும், கவிதைகளையும் நல்கி இம் மலர்த் தொடையை அழகுற வைத்துள்ளனர். வாழ்த்து மடல்களும், அதிபரின் அறிக்கை, கல்விக்கூடத்தின் வாழ்வுக்குப் பாடுபட்டோர் வரிசை முதலிய சம்பிரதாய முறைகள் நீங்கலாக இலக்கியம் மதம், உளவியல், வாழ்வியல், அறிவியல், அழகியல், கல்வித்துறை, நாடகவியல் முதலிய பல்வேறு துறைகளையும் ஆராயும் கட்டுரைகள் கவிதைகளை இச் சிறு வெளியீட்டிலே அடக்கியுள்ளனர். பள்ளிக்கூட வெளியீடானமையினால் ஆசிரிய—மாணவர் முதலியவர்களின் படங்களும் இடம் பெற்றுள்ளன.

மாணவர்களும் மும்மொழியிலும் தங்கள் திறனை வெளிப்படுத்தியுள்ளனர்.

1964ம் ஆண்டு வெளியீடான இம்மலர் விடயப் பொலிவினால் காலம் கடந்தும் மணம் பரப்பும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய சிறப்பான மலரை வெளியிட்டு தமிழ் அன்னையை அலங்கரித்த இம் மாவித்தியாலய அதிபர் வித்துவான் இ. சி. சேதிநாதன் அவர்களையும், ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.

— 'பானு'

## சென். தோமாஸ் சன சமூக நிலையம்

மாதகல் சென். தோமாஸ் சனசமூக நிலையத்தின் புது வருடப் பதவியாளர்கள் விபரம்:

தலைவர்: ச. பா. யோசவ், துணைத் தலைவர்: அ. சத்தியோகு, செயலாளர்: இ. ம. நீற்றர், துணைச் செயலாளர்: தோ. செபஸ்ரியாம்பிள்ளை, பொருளாளர்: ஆ. அன்ரனி பெர்னாண்டோ, விளையாட்டுத் தலைவர்: அ. ஊரிஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. கழகத்திற்கு மாபெரும் வெற்றி

## இந்தித் திணிப்பில் ஆட்சி பின் வாங்கியது

இந்தி எதிர்ப்புப் போராட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழ் நாட்டு மாணவர்களுக்கும் பெரும் வெற்றியைக் கொடுத்துள்ளது. சனவரி 26ம் நாள் இந்தி ஆட்சி மொழியாக அமுல் நடாத்தப்படுவதைப் பற்றி மீண்டும் புனராலோசனை செய்ய முடியாது என்று அடித்துக் கூறிய பாரதப்பிரதமர் திரு. லால்பகதூர் சாத்திரி அவர்கள் சனவரித் திங்கள் 29ம் நாள் இந்தி எதிர்ப்பாளர்களுக்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

'நமது பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளுவோம்; முடியாவிட்டால் மத்தியஸ்த வழிமைப் பின் பற்றுவோம் என்று மன்றுட்டமாக வேண்டினர். திரு. சாத்திரியின் வேண்டுகோள் தமிழ் நாட்டு மக்களுக்கு குறிப்பாக தி. மு. கவிற்கு ஒரு மாபெரும்வெற்றியாகும்.

தமிழ் நாட்டு மாணவர்களைச் சந்திக்க முடியாது, பேட்டி கொடுக்கமாட்டேன் என்று வாய் வீராப்புப் பேசிய தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. பக்தத்வசலம் அவர்கள் 29ம் திகதி மாணவர்களுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்தார். 'இந்தி எவ்விதம் பாதிக்கிறது என்பதை விளக்க மாணவர்கள் விரும்பினுல் நான் பேட்டி கொடுக்கத் தயார் மாணவர்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க ஆவலுடன்இருக்கிறேன்,' என்று மன்ருட்டமாக வேண்டினர்.

### மாபெரும் வெற்றி

மாணவர்களின் ஆர்ப்பாட்டம் கைமேற் பலனைக் கொடுத்துள்ளது. இவ்விரு சம்பவங்களும் இந்தி எதிர்ப்பாளர்களுக்கு, குறிப்பாக தி.மு.க., தமிழ்நாட்டு மாணவர்கள் ஆகியோருக்கு மாபெரும் வெற்றியென்றே கூறவேண்டும்.

மாணவர்களின் கிளர்ச்சியும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் கட்டுப்பாடான எதிர்ப்பும் தமிழ் நாட்டு காங்கிரஸ் ஆளவந்தாரை மட்டுமல்ல, தில்லி அரசையே கலங்கவைத்துள்ளது சாத்திரி அறிக்கைவிட்டார், பக்தவத்சலம் மன்ருடினர், நந்தா பணிந்தார் சுப்பிரமணியம் மாநாடு கூட்டினர், காமராசர் வளமையான தொனியைத் தாழ்த்தினர். சகல காங்கிரசாரும் கலங்கிப் போனுர்கள்.

இந்தி எதிர்ப்பாளரின் அமைதியான போராட்டம் முழு வெற்றி பெற்றது. ஆளவந்தாரின ஆணவம் அடங்கியது.

### அண்ணு அறிக்கை

இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சி காரணமாக தமிழ் நாட்டில் சிறை வைக்கப்பட்ட அனைவரும்விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் ஓரளவு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் குறைந்து காணப்பட்ட போதும் கிளர்ச்சிகள் முற்ருக அடங்கிவிட்டதாகக் கூறுவதற்கில்லை.

கல்லூரிகள் இத் திங்கள் எட்டாம் நாளுக்குப் பின்னரே திறக்கப்படும் என்று தமிழ் நாட்டு அரசு அறிக்கை விட்டுள்ளது சிறையிலிருந்து விடுதலையான அறிஞர் அண்ணு நிலைமையைதெளிவுபடுத்தி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார். 'ஆட்சி மொழியாகஇந்தியைப் பயன்படுத்துவதைக் காலவரையறையின்றி நிறுத்தி வைப்பதற்கு அரசியற் சட்டத்தை திருத்த வேண்டும்' என்றும் 'மறைந்த பிரதமர் நேருவின் உறுதி மொழி சட்டத்தில் இடம் பெற வேண்டும்' என்றும் அறிக்கையில் அறிஞர் அண்ணு வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற சம்பவங்களைஒட்டி 'அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் அடிக்கப்பட்டிருக்கின்றனர். ஒரு மாணவர் குண்டுக்கு இரையானதையும், மற்றும் பலர் காயமடைந்ததையும் அறியும்போது வேதனை அதிகமாகின்றது. மாணவர்கள் மட்டுமின்றி பேராசிரியர்களும் வார்டன்களும் தாக்கப்பட்டிருக்கின்றனர். இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டதற்கு அவர்கள் எதிர்ப்புக் காட்டியதைத் தவிர வேறு என்ன செய்தார்கள்?' என்று அந்த அறிக்கையில் அறிஞர் அண்ணு கேட்டிருக்கிருர்.

சென்னை மாணவர் மன்றம் விடுத்த அறிக்கையில் பொலிசாரினதும், காங்கிரஸ் கடையர்களினதும் நடத்தையை வன்மையாகக்கண்டித்திருப்பதுடன், இந்தித்திணிப்பினுல்நேரடியாகப்பாதிக்கப்படுபவர்கள் மாணவர்கள் என்றும் எனவேதான் தமிழ் நாடு பூராவிலுமுள்ள மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

### பொலிசாரின் அட்டகாசம்

இந்தித் திணிப்பும் அதனுல் விளையக் கூடிய ஆபத்தும் ஒரு புறமிருக்க, சனவரி 25, 26, 27ம் திகதிகளில் தமிழ் நாட்டு ஆளவந்தார் நடந்து கொண்டுள்ள முறை அதிர்ச்சியையும் அருவருப்பையும் கொடுப்பதாக உள்ளது தமிழ் நாட்டு அரசின் கீழுள்ள பொலிசார் இந்தி எதிர்ப்பாளர்களை மிருகத்தனமான முறையில் மிகவும் கேவலமாக நடாத்தியுள்ளார்கள்.

சட்டத்தையும் அமைதியையும் காக்க வேண்டிய பொலிசார் காங்கிரஸ் காடையர்களுடன் சேர்ந்து அமைதியான முறையில் இந்தித் திணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த மாணவர்கள் மீது மிருகத்தனமான தாக்குதலை மேற் கொண்டுள்ளார்கள்.

பொலிசாரின் நடாத்தையைப் பல கல்லூரி முதல்வர்களே பகிரங்கமாகக்கண்டித்துள்ளார்கள், மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி முதல்வர் பொலிசாரின் நடாத்தையை கண்டித்து விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளார். 'பொலிசாரினது அட்டகாசத்தை கண்டு பயந்து, அறைகளைப் பூட்டி விட்டு இருந்த மாணவர்களையும் வெளியில் இழுத்துவந்து உதைத்திருக்கிருர்கள்' என்றும் சில கல்லூரி மாணவர்களின் அறைகளுக்குள் கண்ணீர் புகைக் குண்டுகளை வெடித்தார்கள் பொலிசார்' என்றும் கல்லூரி முதல்வர் கூறியுள்ளார்.

சென்னை வெங்கடேசுவரா மாணவர் மனையுள் பொலிசார் புகுந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிருர்கள். தூங்கிக் கொண்டிருந்த மாணவர்களைக் கூட வெளியிலிழுத்துவந்து உதைத்தார்கள் பொலிசார் என்று மாணவர்மனை வார்டன் அறிக்கை வெளிவிட்டுள்ளார்.

கல்லூரி ஆசிரியர்களும் பேராசிரியர்களும் கூடத் தாக்கப்பட்டுள்ளார்கள். ஒரு விரிவுரையாளரின் தோள் பட்டை பொலிசாரின் அடியால் முறிந்து விட்டது.

### தினமணி நிருபர் தாக்கப்பட்டார்

அமைதியாகத் துக்கங் கொண்டாடிய பொது மக்களின் விடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளனர் பொலிசார். காங்கிரஸ் காடையர்கள் கறுப்புக் கொடியேற்றியவர்களை அடித்து நொருக்கும் பொழுது பொலிசாரும் துணை போயிருக்கிருர்கள். ஒரு விட்டின மீது கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடியை அகற்று [illegible] கொண்டிருப்பதைப் படம் பிடித்த பிரபல தினசரிப் பத்திரிகையான 'தினமணி' யின் நிருபரை பொலிசார் தாக்கியதுடன், பொலிசார் செய்த குற்றத்திற்கு ருசு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகஅவரின் புகைப்படக் கருவியையும் சேதப்படுத்தியுள்ளார்கள்.

இத்தனையும் காந்திஜியின் காங்கிரஸ் ஆட்சியில், பச்சைத் தமிழன் பகத்தவத்சலத்தின் ஆட்சியில் நடைபெற்றிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கையில் அதிர்ச்சி ஏற்படுகிறது. பாரத நாட்டின் சுதந்திரத்திற்காக அடிபலபட்டு சிறை சென்ற பக்தவத்சலத்தின் நிர்வாகம் இத்தனை மிலேச்சத்தனமான செயல்களில் ஈடுபட்டிருப்பது கண்டு உலகத் தமிழன் கண்ணீர் வடிக்கிருன் இது தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சியின் அழிவுக்கு அறிகுறியாகும்.

### நேரு மீது களங்கம் கற்பிக்கிருர்கள்

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றி பாரதப் பிரதமர் திரு. சாத்திரி விடுத்துள்ள அறிக்கையில்மறைந்த பிரதமர் நேரு மீது களங்கம் கற்பித்துள்ளார். 'இந்தியை ஆட்சி மொழியாககுவது பற்றி நான் (சாத்திரி) எதுவும் புதிதாகச் செய்யவில்லை, பழைய முடிவையே அமுல் நடாத்துகிறேன்' என்று ஒரு அறிக்கையில் கூறியுள்ளார். திரு. சாத்திரி அவர்கள் தான் புதிதாக எந்த முடிவையும் செய்யவில்லை, இது நேரு அவர்களின் முடிவு என்று கூருமற் கூறி மறைந்த மேதை மீது கேவலமானமுறையில் பழி சுமத்துகிருர்.

1963 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழி மசோதாவுக்கு யார் காரணம் என்பது ஆழ்ந்திய அரசியலை ஊன்றிக் கவனிப்பவர்களுக்குப் புரியும். ஆட்சிமொழிமசோதாபற்றி அன்று தென்னுட்டுப் பத்திரிகைகள் அனைத்தும் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களில் திரு சாத்திரி அவர்களைப் பகிரங்கமாகக் கண்டித்திருந்தன.

இந்த நிலையில் திரு. சாத்திரி அவர்கள் குற்றத்தை மறைந்த ஒருவர் மீது சுமத்தி தப்பித்துக் கொள்ள முனைவது அரசியல் அநாகரீகமானது மட்டுமல்ல படுபாதகமான கோழைத்தனமானதுமாகும்.

### அறிக்கையில் முரண்பாடு

ஆட்சி மொழி பற்றி பாரதப் பிரதமர் திரு. சாத்திரி வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் 'இந்தியை ஆட்சி மொழியாக்குவதென முதலமைச்சர்கள் மாநாட்டில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டு விட்டது என்று அடித்துக் கூறியுள்ளார். ஆனுல் சென்னை முதலமைச்சர் திரு. 'பக்தவாச்சலம் 'இந்தியைத் திணிக்கும் மத்திய அரசாங்கத்தின் முயற்சிகளை எப்போதுமே சென்னை அரசாங்கம் எதிர்த்து வந்திருக்கிறது. சென்னை அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை என்று கூறுவது தவறு' என்று ஒரு அறிக்கையில் பன்னிப் பன்னிக் கூறியுள்ளார்.

இதில் யார் கூறுவது உண்மை? பாரதப் பிரதமர் கூறுவது உண்மையா? சென்னை முதலமைச்சர் கூறுவது உண்மையா?

ஒரு உண்மையை யாரும் மறுக்க முடியாது. தமிழ் நாட்டுக் காங்கிரசார்நடந்து கொள்ளும் முறை திரு. சாத்திரி அவர்களின் கூற்றை உண்மையாக்கியுள்ளது. மேலும் ஆட்சி மொழிச் சட்டம் தமிழ் நாட்டுக் காங்கிரசாரால் எதிப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே திரு. பக்தவத்சலம் இந்திக்கு துதிபாடி வரவேற்றிருக்கிருர். இந்தியப் பொதுப் பத்திரிகைகள் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கங்களும் இதை நிரூபிக்கின்றன. எனவே இந்தியை தில்லி அரசு திணிப்பதை தமிழ் நாட்டு காங்கிரசார் வரவேற்றுள்ளார்கள். இதை யாரும் மறுக்க முடியாது.

### மக்கள் கடமை

இந்தி தமிழ் நாட்டில் புகுவதைத் தடுக்க வேண்டுமென்ருல், தமிழ் நாட்டின் நிர்வாகம் காங்கிரசார் கையிலிருந்து மாற வேண்டும் தமிழ் நாட்டில் இந்தி புகுவதை எதிர்ப்பவர்களின் முன்னணியில் நிற்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அவர்களின் அணியை தமிழ் நாட்டு மாணவர் பட்டாளமும் இன்று வரவேற்கிறது இதை தமிழ் நாட்டுப் பொது மக்களும் உணர்ந்து ஆவன செய்வார்களாக. தமிழ் நாட்டு மக்களின் நிலையை உலகத் தமிழர் ஊன்றிக் கவனிக்கிருர்கள்.

தமிழ் நாட்டு அரசியல் நிர்வாகம் காங்கிரசார் கையிலிருந்து மாருதவரையில் இந்தி தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவதை தடுக்க முடியாதுஎன்பதைத் தமிழ் நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

காங்கிரசாரின் இன்றையமுயற்சியை தி. மு கழகத்தினரும், மாணவர்களும் ஓரளவு முறியடித்து வெற்றி கண்டிருக்கலாம்; ஆனுல், நிரந்த வெற்றிகாண தமிழ் நாட்டு ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரஸ் கட்சியை நிரந்தரமாக வெளியேற்ற வேண்டும்.

—சங்கிலியன்

## சர்மாந்துறையில் பொது நல வாலிபர் சம்மேளனம்

நாட்டின் பொது நலன்களைக் கருதியும், சீர்திருத்தங்கருதியும உழைக்கும் பொருட்டு சம்மாந்துறையின் எல்லாத் திக்குகளிலும் வாழக்கூடிய வாலிபர்களைக் கொண்ட ஒரு சம்மேளனம் மகா வித்தியாலயத்தில் அங்குராரப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் கொள்கைகளையும் இலட்சியங்களையும் எடுத்துப் பேசிய கனம் யூ. செயின் "இச் சம்மேளனம் சமூகத்தின் நலன் கருதி தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடும்" என்று கூறினர். மேலும் ஜனுப்களான எம். மீரா முகையதீன், ஏ. எச். எம். முஸ்தபா, எம். ஏ. கபூர் ஆகியோரும் பேசினர். ஜனுப் ஏ. ஏ. ஜப்பார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

சம்மேளத்தின் போது தெரிவு செய்யப்பட்ட முக்கிய உத்தியோகத்தர்களின் விபரம்!

பெருந்தலைவர்: ஈழமேகம் எம். ஐ. எல். பகீர்த்தம்பி, தலைவர்: எம். ஏ. கபூர், உபதலைவர்: திரு. எஸ் வடிவேல், செயலாளர்: கனம் யூ. செயின், துணைச் செயலாளர்கள்: ஜனுப்கள் ஏ. எச். எம். முஸ்தபா, யூ. அலியார், பொருளாளர்: ஏ. எம்.முகையதீன், துணைப் பொருளாளர்கள்: லெ. இஸ்மாயில், எம். முகம்மதுத்தம்பி, கணக்குப் பரிசோதகர்: எம். மீரா முகையதீன்.

இறுதியாக, தற்போது ஏற்பட்ட சூருவளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

## இ. தொ. க. அலுவலகம் இடமாற்றம்

குருகலை 17 பழைய கடை வீதி என்ற முகவரியில் இயங்கி வந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கிளை அலுவலகம் அங்கு இட வசதி போதாக் குறைவினுல் குருகலை ஸ்ரவ் லோட் வீதி 37ம் இலக்க கட்டத்தில் (அதாவது விலுக்கு தோட்டம் போகும் வழியில்) 1—1—1965 முதல் இயங்கி வருகிறது என்று இ. தொ. க. மாவட்டச் செயலாளர் அறிவிக்கிருர்.


## 'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு வந்துள்ள சர்வதேச திரைக் கலைஞர்கள்

இந்தியாவில் நடைபெற்ற மூன்ருவது சர்வதேசப் படவிழாவில் பங்குகொள்ள வந்திருந்த வெளிநாட்டுக் கலைஞர்கள் 28ம் திகதி சென்னைக்கு வந்திருந்தார்கள்.


சென்னை சினிமாக் கலைஞர்கள் சங்கம் சர்வதேசக் கலைஞர்களையும் வரவேற்று சென்னை ஓட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு வரவேற்பு அளித்தது. சினிமா உலகப் பிரமுகர்கள் பலரும் இவ் வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

டைரக்டர் சங்கர், ஒளிப்பதிவாளர் தப்பு, படத்தயாரிப்பாளர் கிருஷ்ணசாமி ஆகியோர் கலைஞர்களை வரவேற்றனர் அமெரிக்கா, பிரான்ஸ், ருஷ்யா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாட்டுக் கலைஞர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தனர்.

இவ் வைபவத்தைத் தொடர்ந்து தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கமும் கலைஞர்களுக்கு ஒரு மாபெரும் வரவேற்பை அளித்தது திரு. டி. என். ராமச்சந்திரன் கலைஞர்களை அறிமுகப்படுத்தி வைக்க திரு. ஜாம்பவன் சதாசிவம் கலைஞர்களுக்கு மாலை அணிவித்தார். திருவாளர்கள்: சீனிவாசன், ஜோசப், சண்முகம், ஆகியோர் பேசினர்கள்.

### சந்திரலேகா அவன் யார்

பத்திரிகையாளர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பிரெஞ்சுக் கலைஞர் திரு. செடால் தாம் 15 படங்களைப் பார்த்ததாகவும் அவற்றில் 'சந்திரலேகா', 'அவன் யார்' படமும் சிறப்பாக விருந்தன வென்றும் கூறினர். பாடல்களும் நடனங்களும் தம்மை வெகுவாகக் கவர்ந்தன என்றும் அவர் கூறினர்.




சினிமாஸ் நிறுவனத்தினர் தயாரித்து வரும் பிரமாண்டமான சிங்களச் சித்திரமான 'சண்டியா'வில் காமினி பொன்சேகாவும் அனுலா கருணாதிலகவும் இப்படிக் காட்சி அளிக்கின்றனர்.

## எமது விமர்சனம்

# கற்பகம்

இரு இள உள்ளங்களுக்கிடையே காதலை மூட்டிவிட்டு நெருக்கமாக இருவரையும் பழக விட்டு, பாலுணர்ச்சியையும் தூண்டிவிட்டு, உணர்ச்சிப் பிரவாகம் மடைந்திறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடும்போது திடீரென ஒரு அணையைப் போட்டு விட்டால் எப்படியிருக்கும், இதே கைங்கரியத்தைக் கதாசிரியர், வசனகர்த்தா, இயக்குநரான கே. எஸ். கோபால கிருஷ்ணன் செய்துவிட்டு விடுகிருர்.

'சாரதா', 'தெய்வத்தின் தெய்வம்', இப்பொழுது சினிமாஸ் திரைகளுக்கு வந்துள்ள 'கற்பகம்' ஆகிய மூன்று படங்களின் கதை, வசன, டைரக்ஷன் பொறுப்புகளை ஏற்றவர் கோபால கிருஷ்ணனே இம் மூன்று படங்களிலும் மேற் கூறியது போன்று இள உள்ளங்களின் ஆசைகள் ஈடேற முடியாது ஏற்படும் தவிப்புக்களை மையமாக வைத்துக் கொண்டே கதைகளை அமைத்து இரசிகர்களைக் கவர்வதில் வெற்றியும் கண்டுள்ளார் அவர்.



நடிகையர் திலகம் சாவித்திரிக்கு கற்பகத்தில் ஒரு சிறு பாத்திரமே தரப்பட்டுள்ளது. புத்தம் புது மலரெனத் தோன்றி நன்கு நடித்துள்ளார். ஜெமினி கணேசன் சிற சில இடங்களில் மெச்சத் தகுந்தபடி நடித்திருக்கிருர். புதுமுகம் கே. ஆர். விஜயா திரைக்குப் புதியவர் என்று கூற முடியாதபடி வருகிருர் ரங்காராவ் பண்பின சிகரமாகத் தோன்றியுள்ளார். நாதா வழக்கம் போல் கூத்தடிக்கிருர் முத்துராமன், வி கே. ராமசாமி முதலாஞேரும் தோன்றுகின்றனர்.

வாலி எழுதிய நான்கே நான்கு பாடல்களும், இசை இரட்டையர்களின் இசையும் படத்தின் மெருகுக்கு மேலும் சிறப்பளிக்கின்றன. அருவசியமான ஆடல்களும் பாடல்களும் கிடையாது.

கோபக்காரர்கள் சண்டையிடுவதைப் பார்த்திருப்பீர்கள், கற்பகத்தில் பல தடவைகளில் நடைபெறுவது அன்புப் போர், அப்பப்பா...! அப்போர்க் கட்டங்கள் வெகு அற்புதம்.

குழந்தை நட்சத்திரமான பேபி ஷகிலா (மன்னிக்கவும் நடிப்பில் மட்டும் அது குழந்தையல்ல.....) போடும் போடு! அவளுக்காகவே பல முறை கற்பகத்தைப் பார்க்கலாமே.

—நாதன்!

## ஆயிரம் ரூபாய்

பணம் வைத்துக் கொள்ளுவதற்கும் தகுதி வேண்டாமா? ஒரு ஆயிரம் ரூபாயை வைத்துக் கொள்ளும் தகுதியேயில்லாத வளானவனிடம் அப்பணம் சிக்கிக்கொண்டதனுல் அவனுக்கு மட்டுமல்ல அவனைச் சுற்றியுள்ள சகலருக்குமே பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகின்றன.

இத்தகைய சிக்கல்களை வைத்தே டைரக்டர் கே எஸ் கோபாலகிருஷ்ணனின் ஒத்துழைப்புடன் திரு. சின்ன அண்ணமலை 'ஆயிரம் ரூபா' படத்தை உருவாக்கியுள்ளார்.

ஜெமினி கணேசன், சாவித்திரி சேர்ந்து நடித்துள்ள இப்படம் வெகு விரைவில் சிலோன் [illegible] மைடன் திரைகளுக்கு [illegible] கிறது.

## கலைப் பூஞ்சோலை

### சத்திய ஜித் ரோய் வழியில்...

மூன்ருவது சர்வதேசத் திரைப்பட விழாவில் முதலாவது பரிசான தங்கமயிலை 'கம்பெரலிய' என்ற சிங்களப் படம் பெற்றதல்லவா? இப்படத்தின் இயக்குனரான திரு. லிஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் தாம் பிரபல இயக்குநரான சத்திய ஜித் ரோயின் உத்திகளையே கையாண்டு வெற்றியடைந்திருப்பதாகக் கூறினர்.

சிங்களப் படம் முதலாவது பரிசைப் பெற்றது தமிழக சினிமா உலகிலேயே ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

### நடக்கவிருப்பவை

#### அச்சுவேலியில் பெட்டிப் பாம்பு

எதிர்வரும் வைகாசி மாதத்தில் அச்சுவேலியில் நடைபெறவுள்ள முத்தமிழ் நிதி விழாக்காக கொழும்பு சிவசக்தி கலை அரங்கினர் 'பெட்டிப் பாம்பு' என்ற நகைச் சுவை நாடகத்தை அச்சுவேலியில் 20-2-65-ல் நடத்த விருக்கின்றனர்.

இதற்கான ஆயத்தங்களை சிவசக்தி கலை அரங்கின் செயலாளர் திரு. ஆர். ஜெகசோதி செய்து வருகிருர்.

#### கற்பிட்டியில் கலை விழா

கற்பிட்டி 'உதய சூரியன் கலா மன்றத்தினா' கற்பிட்டி முஸ்லீம் கலாசாலை மண்டபத்தில் ஒரு கலை விழாவை, அதே கலாசாலை அதிபர் எம். என் ஐ. நெய்னு மரைக்கார் தலைமையில் 6—2—65 மாலை 5 மணிக்கு நடாத்துகின்றனர்

புயல் நிவாரண நிதிக்காக நடைபெறும் இவ் விழாவின் இறுதியில் திரு. வெற்றிவேந்தன் கதை, வசனம், பாடல் அமைத்திருக்கும் 'மாண்டவள் மீண்டும்...?' என்ற தப்பறியும் நாடகமும் நடைபெறும்!

இந்த நாடகத்தில் வெற்றி வேந்தன், சந்திரகலா இருவரும் முக்கிய பாகம் ஏற்று நடிக்கின்ருர்கள். திரு. ஜே. ஆனந்தாவும், ஜே. போலும் இசையமைக்கும் இந்நாடகத்தில் குமரிகள்: அமீனு பேகம், செல்வயோகம், எஸ். அன்வர், எம். அன்வர் பதூர்தீன், ஜுனைத், [illegible] பங்கு பற்றுகின்றனர்.

### 'பொருமை'

அர்ச் செபஸ்தியார் திருநாளை முன்னிட்டு பொகவந்தலா தோட்டத்திலுள்ள அர்ச் செபஸ்தியார் ஆலயத்தில் பங்கு குருவானவர் வண. பிதா சின்னப்பு அவர்களால் ஆராதனை நடத்தப் பட்டது.

இறுதியில் இராப் பாடசாலை மாணவர்களால் 'பொருமை' என்னும் நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

இந்நாடகத்தில் பவுல் ராஜ் அந்தோனிமுத்து, அந்தோனிசாமி, ஜோசப், செபஸ்தியான் ஆகியோர் பிரதம பாகமேற்று சிறப்பாக நடித்தனர். இதன் கதை, வசனத்தை செல்வராஜும் இசையமைப்பை பொகவந்தலா இசைக் குழுவினரும் ஏற்றிருந்தனர்

### 'சுதந்திர விழா' கைவிடப்பட்டது

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக மஸ்கெலியாவைச் சேர்ந்த பிரன்ஸ்விக் தோட்டத்தில் பெப்புரவரி 4-ம் திகதியில் சுதந்திர தினக் கொண்டாட்டம் என்ற பெயரில் நடைபெற்று வந்த தமிழ் இனத் துரோகச் செயல் இவ்வருடம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அன்று தொட்டு இது சில வயது முதிர்ந்த தமிழர்களின் அரசியல் அறியாமையினுலும் சில சிங்களவர்களின் தூண்டுதலின் பேரிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. ஆனல் இவ்வருடம் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலரும் இலங்கைத் தொழிலாளர் கழக அங்கத்தவர்களும் எடுத்த கூட்டு முயற்சியால் இத்துரோகச் செயல் தோட்ட நிர்வாகத்தால் கைவிடப்பட்டுவிட்டது. தமிழரசுக் கட்சியின் வருகையால் மலையகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சிக்கு இது போதிய சான்று பகர்கின்றது.

# தண்ணீர் வழங்கத்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

1954 சனவரி 6-ல் பின்வரும் தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப் பட்டது [ஹன்சாட் 1953-54 தொகுதி 16, பந்தி 1803]

"துறைநீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடி ஆகிய கிராமங்கட்குத் தேவைக்குரிய குழாய் நீர் வினியோக வசதி ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இச்சபை கருதுகிறது."

இந்தத் தீர்மானத்தை அடுத்து இத் திட்டத்தை ஆராய்வதற்கு உள்ளூர் ஆட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. ஆராய்ச்சிகள் நடந்தன; கொழும்பிலும் மட்டக்களப்பிலும் மநாடுகள் நடந்தன; இறுதியில் திட்டம் ஏற்கப்பட்டு மாதிரிப் படங்களும் அமைப்புகளும் முடிவாக்கப் பட்டன. நீர் ஊற்றில் இருந்து பெறக் கூடிய நீர் அளவு பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இலங்கை அனைத்திலும் உள்ள கிராமப்புற நீர்வினியோகத் திட்டம் அனைத்திலும் பார்க்க இத்திட்டத்திற்கு முதலிடம் கொடுத்த பொழுதிலும் சமீபகாலம் வரை இத் திட்டம் கவனிக்கப்படவில்லை. அண்மையில் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன. கொந்தராத்துக்காரர் தெரிந்து எடுக்கப்பட்டார் என்றே நம்புகிறேன். ஆனுல் (கொந்தராத்து) ஒப்பந்தம் கையொப்பம் ஆகப் போகும் இச் சந்தர்ப்பத்தில் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தி, அதிலிருந்து துறைநீலாவணையை தவிர்ப்பதற்கு நீங்கள் யோசிப்பதாக அறிகிறேன்.

### திட்டத்தில் மாற்றம் ஏன?

இதற்குரிய காரணம் தான் என்னவோ? பிரந்தாப திட்டத்தில் 6000 மக்கள் கொண்ட துறைநீலாவணைதான் மிகப் பெரிய கிராமம். இக் கிராமத்து மக்கள் வருடத்தில் எட்டு மாதங்கட்கு குடிநீர் பெறுவதில் அடையும் கஷ்ட நஷ்டங்கள் மட்டக்களப்புப் பகுதிகளிலே பழமொழிகளில் கூட இடம் பெற்றுவிட்டன. எந்தக் கிராமத்திலும் பார்க்க இந்தக் கிராமத்து மக்களின் வேதனைகள் இம்மியும் குறைந்ததல்ல

1952—1956ம் ஆண்டுகளில் இப்பகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதியாக இத் திட்டத்தில் நான் பெரும் கரிசனை எடுத்திருக்கிறேன், இத்திட்டத்தின் பல்வேறு படிகளிலும் இதைப் போஷித்து வந்திருக்கின்றேன்.'

1952-ம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக் குழு இத்திட்டத்தின் அவசியம் பற்றி இடையருது வற்புறுத்தி வந்துளது. நீங்கள் இவ்வாறு இப்போ மாற்றம் செய்ய விரும்புவது ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை. சிலசமயம் யாராவது உண்மை நிலையை உங்களுக்கு திரித்துக் கூறியிருப்பார்களோ...?"

(அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலேச்சத்தனமான வன்முறைகளை உடன் கைவிடுக

## பக்தவத்சலத்துக்கு ஈழத் தமிழர் வேண்டுகோள்

"தமிழ் நாட்டில் 25ம் திகதி முதல் நடைபெற்று வரும் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடக்கி ஒடுக்கும் முறையில் அநாகரீகமான, மிலேச்சத்தனமான வன்முறைகளைக் கையாண்டமையையும், அதை யொட்டி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களையும், தொண்டர்களையும், மாணவமன்றத்தலைவர்களையும் சிறையிட்டமையையும் மாணவர்களை துப்பாக்கிக்குப் பலியாக்கியதையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், சிறைப்பட்டவர்களை விடுவிக்குமாறும், தங்களது கண்மூடித்தனமான அட்டூழியங்களை உடனடியாகக் கைவிடுமாறு இக்கூட்டம் வேண்டுகிறது." என்று கூறும் தீர்மானம் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. பக்த்துவாச்சலம் அவர்கட்கு இந்திய தூதுவரகம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

தென்னாட்டு மக்கள் மீது அவர்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தி மொழியினைப் புகுத்துவதைக் கண்டிக்குமுகமாகவும், இந்தியை எதிர்த்து தங்கள் உடலில் தீ மூட்டி உயிர்த்தியாகம் செய்த திரு. ரங்கராசன், சிவலிங்கம் நஞ்சு குடித்து இறந்த திரு. முத்து ஆகிய தியாகிகளையும் சிதம்பரத்திலும் மதுரையிலும் பொலீசாரின் வன்முறையினால் உயிர் நீத்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும் கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கைத்தமிழரசுக்கட்சி' இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய வற்றின் கொழும்புக்கிளைகளின் ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. இரா. பத்மநா[illegible]ன் தலைமை தாங்கினார்.

திரு. ஈழவேந்தன், திரு. இளஞ்செழியன், திரு. கம்பனதாசன், திரு. மணவைத் தம்பி, திரு. இசைநாவரசன், பல்கலைக் கழக மாணவன் திரு. எம். எஸ். கிருபராசா, திரு. ஏ. வி. நாதன், திரு. கரிகாலன், திரு. சங்கர் ஆகியோர் உரையாற்றினர்.

திரு. எஸ். மயில்வாகனம் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்.

திரு. லடீஸ் வீரமணி மறைந்த தியாகிகளின் பேரில் அஞ்சலிக் கீதங்களிசைத்தார்.

சென்னை மானில முதலமைச்சருக்கும் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் திரு. லால்பகதூர் சாத்திரிக்கும் அனுப்பி வைக்கப்படுவதற்கு மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்கள் யாவும் அடுத்த நாள் திங்கட்கிழமை 1-2-65 காலையில் இந்தியத் தூதுவரகத்தில் சேர்க்கப்பட்டன.

### சாத்திரிக்கு...

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் பாரத பிரதம அமைச்சர் திரு. லால் பகதூர் சாத்திரி அவர்கட்கு இலங்கையிலுள்ள இந்திய தூதுவரகத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டது.

"சுதந்திரம் மக்களின் பிறப்புரிமை பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து இந்தியத் துணைக் கண்டத்தை விடுவிப்பதற்கு தாங்களும், தங்கள் இயக்கத்தினரும் மேற்கொண்ட மகத்தான தியாகங்கள் சுதந்திரத்தின் மேன்மையையும், சுதந்திர வேட்கையின் வன்மையையும் உணர்த்துவதாகும் அதே உணர்வோடும், ஊக்கத்தோடும் இந்தித் திணிப்பை எதிர்க்கும் மக்கள் மீது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் முறையைக் கைக்கொண்டு இந்தி மொழியை இந்தி பேசாத மக்கள் மீது திணிக்க முயல்வது அடிப்படை சனநாயக தத்துவத்தை மீறுவதாகும்."

'சீன ஆக்கிரமிப்பின் போது இந்திய தேசியத்தைக் காக்க, ஒத்துழைத்த மக்கள் மீது நன்றி கொல்லும் முறையில் ஆதிக்க வெறி கொண்டு செயலாற்றுவது வருந்தத் தக்கதாகும். தமது பிறப்புரிமைக்காகப் போராடும் இந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளை மதிக்கும் முறையில் உடனடியாக இந்திய அரசியற் சட்டத்தின் 17ம் பிரிவை மாற்றியமைக்கும் வண்ணம் இக்கூட்டம் தங்களைக் கேட்டுக் கொள்வதுடன், அம் மக்களின் எதிர்ப்பைத் தாங்கள் புறக்கணிப்பது இந்தியத் துணைக் கண்டத்தின் பாதுகாப்புக்கு பாதகமான பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப் பணிவுடன் அறிவிக்கிறது."

### அனுதாபத் தீர்மானம்

இந்தியை எதிர்த்து உயிர் நீத்த தியாகிகளை நினைந்து பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"காலத்திற்குக் காலம் தமிழகத்திற்குள் நுழைந்த இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து களப்பலி கொடுத்த தமிழ் மறவர்களின் பாரம்பரிய பெருமைகளை நிலைநாட்டும் முறையிலும் அண்மையில் இந்தித்திணிப்பிற்கு எதிராக தம்மை அர்ப்பணித்த தமிழ்த் தியாகிகளுக்கு இக்கூட்டம் தலை தாழ்த்தி வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு இரங்கல் உரையை தெரிவிக்க கூட்ட அமைப்பாளர்களுக்கு உரிமை வழங்குகிறது."

## முற்போக்கு திரைகிழித்த முகர் மதலி



ஏழை எளியவர்களுக்கு வாழ்வு அளிக்கவும் தொழிலாளர்களுக்கு - நலமளிக்கவும் வேண்டுமென்பதில் விருப்பம் கொள்ளாதவர்கள் இருப்பார்களானால் அவர்கள் சமூகவிரோதிகளாவார். தொழிலாளி நல்வாழ்வு, எளியவர் புனர்வாழ்வு முதலிய சொற்களை உபயோகித்து அவற்றைத் தங்கள் சொந்த வாழ்வு உயர்ச்சிக்கு ஏணியாகப் பாவிக்கும் சாலவித்தைக்காரர்கள்தான் இன்று நாட்டில் தோன்றியுள்ள முற்போக்கு வாய்ப்பந்தற்காரர். இலகுவாக இளம் உள்ளங்களை வசீகரித்துவிடுவார்கள். சுய சிந்தனை எழுச்சியினால் தூண்டப்பட்ட இளைஞர்கள் வெகு விரைவில் இந்த முற்போக்கு போலிவேஷத் திரையைக்கிழித்தெறிந்துவிட்டு முன்னேறுவார்கள்.

இந்தரீதியில் தான் ஜனப் எம். ஈ. எச். முகம்மதலி தமது வாலிபப் பருவத்தில் ஒரு கொம்யூனிஸ்டாகவிருந்து பின்னர் வெளியேறினார். இலங்கையிலுள்ள கொம்யூனிஸ்டுகளின் உள்ளந்தரங்க நோக்கம் பற்றி ஜனப் முகம்மதலி தெரிந்து கொள்ள அதிக நாட்கள் ஆகவில்லை.

கிண்ணியாவின் முதலாவது கிராமச் சங்கத் தலைவராகவிருந்த அண்மையில் காலஞ்சென்ற ஜனப் எம். எம். எச். எம். எஹூத்தார் ஹாஜியாரின் மூத்த புதல்வரான ஜனப் முகம்மதலிகிண்ணியாவில் ஆரம்பக் கல்வி பயின்ற பின்னர் திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிலும் கல்வி கற்று, கொழும்பு சுதேச வைத்தியக் கல்லூரியில் படித்து வைத்தியராகவும் பதிவு செய்து கொண்டார்.

1951ம் ஆண்டு முதல் கிராமச்சங்க அங்கத்தவராகவும், 1952 தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினராகவும இருந்தார். இயல்பாகவே தமிழ் மொழியில் பெரு நாட்டம் கொண்டவரான ஜனப் முகம்மதலி 1961ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் பெரும் பங்கு கொண்டுழைத்தார். 1962ம் ஆண்டு மூதூர் முதல்வர் அமரர் ஏகாம்பரத்தின் இடத்தை நிரப்பும் வகையில் தமிழரசுக் கட்சி வேட்புரிமை பெற்று பாராளுமன்றத்துள் பிரவேசித்தார். இப்பொழுது இவர் கட்சியின் உபதலைவர்களுள் ஒருவர். 1962ல் உபதேர்தலில் இவருடன் போட்டியிட்ட திரு சுந்தரலிங்கம் ஆக மொத்தம் 433 வாக்குகளே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சேவை மனப்பான்மையும் செயலாற்றும் நோக்கும் கொண்ட பண்பாளரை இம்முறையும் மூதூர் மக்கள் தங்கள் தலைவராகக் கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## ஆண்டவன் பணியில் 25 வருடங்கள்

கொழும்பிலே உள்ள சைவ ஆலயங்களுள் கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயக மூர்த்தி கோயில் தனிச் சிறப்புடன் இயங்கிவருகிறது. இக் கோயிலில் கடந்த 25 வருடங்களாக குருவாகப் பணி புரிந்து வந்திருக்கிறார் திரு. பா. சண்முகரத்ன சாமா அவர்கள். விரைவில் இவருடைய சேவையைப் பாராட்டு முகமாக வெள்ளி விழா நடைபெறவிருப்பதாக தெரிகிறது.



பா. சண்முகரத்ன சர்மா

இருபத்தி நான்கு வயது இளைஞராக இருக்கும்போது திரு சர்மா அவர்கள இக் கோயிலில் பணிபுரிய வந்தார் அந்தக்காலம் கப்பித்தாவத்தை இன்றுள்ள நிலையில் இருக்கவில்லை. மிகவும் மோசமான நிலையிலிருந்த இவ்வாலயம் திரு சர்மா அவர்களின் வருகையின்பின்னரே படிப்படியாக முன்னேற்றமடைந்து இன்று சிறப்புற்று விளங்குகின்றதென்றால் மிகையாகாது.

1942-ம் வருடம் ஜப்பானியக் குண்டுவீச்சின்போது கொழும்பு மாநகரைவிட்டே சகல மக்களும் வெளியேறி, பல சைவ ஆலயங்கள் நித்திய பூசைகளின்றி மூடப்பட்டிருந்த வேளையிலும், பாலசெல்வ விநாயகர் ஆலயத்தில் முக்காலமும் தவறாது பூசைகள் நடைபெற வழிவகை செய்தவர் திரு. சண்முகரத்தின சர்மா அவர்களே. இனக் கலவரங்கள் எழுந்த போதிலும்கூட திரு. சர்மா அவர்கள் விநாயகப் பெருமானின் துணையுடன் ஆலயத்திலேயே தங்கியிருந்தார்.

1958-ல் பாணந்துறையில் வைத்து கோயிலுள் கொடூரமாக கொலை செய்யப்பட்டவரான திரு. சுந்தரராசசர்மா இவருடைய சகோதரராவார். கலவரங்கள் உச்சக் கட்டத்திலிருந்தபோதிலும்கூட தமது சகோதரரின் அந்திமக் கிரியைகளைச் செய்து முடித்திருக்கிறார்.

விநாயகப் பெருமானின் அருளால் சகல செல்வங்களையும் பெற்ற திரு. சர்மா அவர்களுக்கு குழந்தைச் செல்வமும் குறைவின்றி உள்ளது. பதினொரு குழந்தைகளை இவருக்கு விநாயகர் அருளியுள்ளார்.

இந்நாட்டின் பிரபல அரசியல்வாதிகளின் குடும்பங்களில் நடைபெறும் மதச் சடங்குகளில் பங்கு [illegible]னுபவரான திரு. சர்மா இசைத்துறையிலும் பெரும் ஈடுபாடுள்ளவர். மறைந்த இசைமேதை காருக்குறிச்சி அருணசலம்பிள்ளையை கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகரின் கும்பாபிஷேகவைபவத்திற்கு அழைத்து வந்தவரும் இவரே. இருவரும் அத்தியந்த நண்பர்களாகவிருந்தவர்கள். காருக்குறிச்சியின் மறைவினை இலங்கையின் முதன் முதலில் அறிந்தவரும் திரு. சர்மா அவர்களே ஆவார்.

கோவில் குருவாக கடந்த இருபத்தைந்து ஆண்டுகளும் தொடர்ந்து இருந்து சேவை புரிந்த திரு. சர்மா அவர்களின் தொண்டு மேன்மேலும் வளர வேண்டும் [illegible] பெருமானின் வேண்டு[illegible] இன்றும்.

## பொன்னம்பலம்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தனது குருவையே மிஞ்சிய யாறுக்காரனார்.

பொன்னம்பலம் கட்டாயத்தின் பேரில் அமைச்சர் பதவியை விட்டு விலகிய பின்பும் குமாரசுவாமி (தமிழ் காங்கிரஸ் கட்சியின் இன்றைய கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர்) பதவியை கெட்டியாக கட்டிப்பிடித்தார். 'பொன்னம்பலம்ஒரு வாலறுந்த நரி தன்னுடையவாலை அறுத்துவிட்டு எனனுடைய வாலையும் அறுக்கச் சொல்கிறார்.' இப்படி பத்திரிகையில் அரை அமைச்சராக இருந்தபொழுது அறிக்கை விட்டார் திரு. குமாரசாமி!

(இரண்டு வாரங்களுக்கு முந்திக்கூட அவரது அடிப்படை முன்னணி சார்பில் கிளிநொச்சியில் கூட்டம்போட்டு பொன்னம்பலத்தையும் அவரது காங்கிரசையும் வைதுதீர்த்தார். திரு. பொன்னம்பலமும் அதே நாளில் காங்கிரஸ் கூட்டம்போட்டு திரு. குமாரசுவாமியையும் அவரது அடிப்படை முன்னணியையும் திட்டித்தீர்த்தார். இது நடந்தது 9 1-65ல்! ஆனால் 11-1-65ல் இரண்டுநாட்கள் தள்ளி அதே குமாரசுவாமிக்கு அதே பொன்னம்பலம் காங்கிரஸ் 'லேபல்' கொடுத்து கிளிநொச்சித் தொகுதிக்கு நிறுத்தியிருக்கிறார்! கொள்கைக் குழப்பத்திற்கும் அரசியல் குத்துக்கரணத்துக்கும் இதைவிட வேறு அழகான எடுத்துக்காட்டு உலகில் இருக்கிறதா?)

### அலரிமாளிகை நாடகம்

காங்கிரஸ் காரியசபையும், முற்றவெளிப் பகிரங்கக் கூட்டமும் கனிப்பெருந் தலைவர் விரும்பியவாறே அவரது அமைச்சர் பதவி ஏற்புக்கு 'பச்சை விளக்குக் காட்டவே திரு பொன்னம்பலம் கொழும்புக்கு வாயு வேகத்தில் விழுந்தடித்துப் பறந்து போனார் கொழும்பில் கால் வைத்ததுதான் தாமதம் அவரது கார் அலரிமாளிகையை நோக்கி விரைந்தது அன்று அலரிமாளிகையில் தமிழினத்தின் வரலாற்றில் மிக்க களங்கமான துடைக்கமுடியாத அவமானம் நிறைந்த ஒரு நாடகம் நடந்தேறியது அந்தநாடகத்தின் 'அண்மைக் காட்சியை' அடுத்த வாரம் காண்போம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(33)

—அன்ரனி பெர்ணுண்டோ, கிரிலப்பனை—

## கண்கள் வேண்டாம் எனக்கு!

பார்ப்பதற்குக் கண்கள் தேவையா? "எனக்குக் கண்கள் தேவையில்லை கண்களின் உதவி இல்லாமலே என்னுற் பார்க்க முடியும்" என்கிருள் சோவியத் நாட்டைச் சேர்ந்த பதினெரு வயதுச் சிறுமி வேரா பெற்ருேவா. நாம் கண்களால் பார்ப்பதை அவள் பார்ப்பதற்கு தேகத்திலுள்ள தோல் மட்டுமே போதுமானதாக இருப்பதாற் தான் அவளுக்குக் கண்கள் அவசியமில்லை.

அவளைப் போல் கண்களின் உதவியின்றி தோலினுல் பார்க்கும் ஆற்றலுள்ள இன்னும் இரு சோவியத் சிறுமியர் இருக்கின்றனர். லீனு பிலிஸ்நோவா, ரோசா குலெஷோவா என்ற அவ்விருவரையும் விட தோலினுல் பார்ப்பதில் வேரா தான் திறமைசாலியாக இருக்கிருள்.

வேராவின் தந்தை மைக்கல் பெற்ருேவா ஒரு காகித அட்டைத் தொழிற்சாலையின் அதிபராகப் பணியாற்றுகிருர். மிதமிஞ்சிய வேலைகள் காரணமாக ஒரு நாள் அவர் வீடு செல்லத் தாமதித்துவிட்டது. சிறுமி வேரா அவரைத் தேடிக் கொண்டு காரியாலயத்திற்கு வந்துவிட்டாள். வேராவைக் கண்ட பெற்ருேவா அவளை ஓரிடத்தில் அமரச் செய்துவிட்டுத் தன் வேலைகளில் ஈடுபட்டார். வேராவின் பார்வை அறையினுள் இருந்த பெரிய இரும்புப் பீரோவில் இலயித் திருந்தது அவள் அதனருகில் சென்று அதைத் தன் கையினுல் தொட்டுப் பார்த்தாள்.

'எதற்காக அப்பா, இவ்வளவு முத்திரைகள் சேகரித்து வைத்திருக்கிறீர்கள்" என்று வேரா கேட்டாள். தன் மகளை நோக்கிய பெற்ருேவா பின்னர் பீரோவைக் கவனித்துப்பார்த்தார். பீரோவைப் பூட்டுவதற்கு மறந்துவிட்டேனே என்று அவருக்குச் சந்தேகம். உடனே எழுந்து பீரோவினருகில் சென்று அதன் கதவை இழுத்துப் பார்த்தார். அது நன்ருகப் பூட்டப்பட்டிருந்தது. 'பீரோவினுள் முத்திரைகள் இருப்பது மகளுக்கு எப்படித் தெரியும்' என்று பெற்ருேவா மிகுந்த வியப்புடன் வேராவிடம் கேட்டார். வேரா அதோடு நில்லாது பீரோவினுள் இருக்கும் முத்திரைகளைப் பற்றிய விபரங்களை வேறு சரியாகவும் விரிவாகவும் கூறவாரம்பித்தாள்.

வேராவைப் பற்றி டி. டி. பெடோவ் அவர்களின் தலைமையில் அறிவர்களின் குழுவொன்று. பல பரிசோதனைகளை நடத்தியது. மற்றவர்களுக்கு இருப்பது போல வேரோவுக்கும் சாதாரண நாடித்துடிப்பே இருக்கிறதென அவர்கள் கண்டறிந்தனர்.

சிவப்புநிறச் சேவலொன்றின் படத்தையுடைய சிறு கடுதாசி ஒன்று தடித்த பாயொன்றின் அடியில் மறைத்து வைக்கப்பட்டது. கால்களில் மேஸ்கள் அணிந்து கொண்டு, கண்களை மூடிக்கொண்டு பாயின் மேல் நடந்து சென்ற வேரா பின்னர் மறைக்கப்பட்டிருந்த கடுதாசியில் இருந்த படத்தையும் அதன் நிறத்தையும் தப்பின்றிச் சொன்ஞள். இதைப்போலவே அவளுக்கு தடித்த சுவரினூடே அல்லது கதவினூடே பார்க்கக் கூடிய ஆற்றல் இருப்பதை பரிசோதனைகளின் வாயிலாக அறிய முடிந்தது.

சோவியத் தேசத்தில் பிரபல கண் ஆராய்ச்சியாளர்களுள் ஒருவரான டாக்டர் ஈ. ராப்கின் அவர்களின் கருத்துப்படி, ஒளியை அடிப்படையாகக் கொண்டு தோலில் உண்டாகும் ஒருவித இரசாயன இயக்கத்தின் விளைவால் மூளைக்குச் செய்திகள் செல்கின்றன எனினும், சிலரிடம் காணப்படும் இந்த அபூர்வ ஆற்றல் பற்றி ஒரு இறுதியான தீர்மானத்திற்கு வர அறிவர்களால் முடியாமலிருக்கிறது.

சில அறிவர்கள் இதுபற்றி மாறுபட்ட கருத்துக் கொண்டுள்ளனர். உலகில் முதல் முதல் தோன்றிய உயிர்களின் கூட்டத்திற்கு இந்த அபூர்வ ஆற்றல் இருந்ததென அவர்கள் கருதுகின்றனர். எது எப்படியிருப்பினும் கண்ணின்றி மெய்யினுல் பார்க்கும் இந்த ஆற்றல்' நமக்கும் கிட்டுமாஞல், "கண்கள் வேண்டாம் எமக்கு' என்று நாமும் பயமின்றிச் சொல்லலாமன்ருே?




நகைச் சுவைச் சித்திரம்

## ஆண்டு விழா!

வளர்மதி வாணன்

அகில இலங்கை தாடி சக குடுமி வளர்ப்பாளர் கழகத்தின் பொதுச் செயலாளன் என்ற உரிமையில் அடியேன் இதை எழுதப் புகுந்தேன். நம் கழகத்தைப்பற்றியும், குறிப்பாக அண்மையில் நடந்தேறிய ஆண்டு விழாவைப்பற்றியும் நாலுபேர் அறிந்திருக்க வேண்டுமென்ற பேரவாவால் உந்தப்பட்டு உருவாகியதுதான் இந்த 'சோகத் திறனுய்வு.'

எங்கள் கழகத்தில் சுளையாக மொத்தம் நாலாயிரம் அங்கத்தவர்கள் இருக்கிருர்கள் என்ற உண்மையை அறியும் உங்களிற் பலர் மூக்கின் மேல் விரல் வைப்பதை இதோ, அடியேனின் அகக் கண்ணுல் பார்க்கிறேன். ஏனென்ருல், இவ்வளவு அங்கத்தினரைக் கொண்ட இம் மாபெரும் கழகத்தைப் பற்றி, அக்கழகம் விளைவித்த கலகங்களைப்பற்றி இதுவரை எந்தப் பத்திரிகையிலாவது செய்தி வந்தது கிடையாதே என்பதுதான்.

ஆம், முதுகெலும்பு உள்ள ஆறு பேரையாவது அங்கத்தவராகப் பெறும் அருகதையற்ற மழைக்காளான் சங்கங்களைப்பற்றியும் அவற்றின் கையாலாகாத தீர சூர சாதனைகளைப் பற்றி யெல்லாம் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பத்திபத்தியாக காட்சியளிக்கும்போது, மனதார நாலாயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட இக் கழகத்தைப் பற்றி எந்தப் பத்திரிகையிலாவது நாலெழுத்துச் செய்தியொன்ருவது வந்தது கிடையாதேயென்று நேயர்கள் ஆச்சரியப்படுவது உண்மைதான். 'சும்மா விட்டுத் தள்ளுங்கள், சார், இந்த மாதிரி சில்லரை விளம்பரங்கள் எல்லாம் அகிலம் போற்றும் நம் சிரஞ்சீவிக் கழகத்திற்கு அவசியமில்லை' என்று நம் கழகச் செயற்குழுவின் முக்காலே மூன்று விகிதத்தினர் பரந்த நோக்கோடு அபிப்பிராயப் படுவதுதான் காரணம்.

சரி, இனி நம் ஆண்டுவிழாவன்று நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றிக் கவனிப்போம். அன்று பிரதான விருந்தினராக வரவிருந்த அகில உலக தாடி சக குடுமி வளர்ப்போர் கூட்டணியின் பிரதம கொறடா வெண்ணை வெட்டி டம்பாச்சாரி அவர்கள், தான் அருமைபெருமையாக ஈன்றெடுத்த கன்றுக்குட்டி (தப்பு; தவப்புதல்வி) தமரா தாட்சண்ய தேவி, கொட்டைப்பாக்கை சூப்பிக் கொண்டிருந்த பொழுது அது (துர்) அதிட்டவசமாக தொண்டையில் சிக்கி பரிதாப மரணத்திற்காளானதன் காரணமாக வரமுடியாமற் போய்விட்டதென்பதை உங்களுக்கு மிக அனுதாபத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த (அ) மங்களச் செய்தியோடும், கழகப் பொருளாளர் மூவன்ஞ மூக்கன் அவர்களின் அருமைச் செல்வி கமலா அம்பிகாபதியின் விக்கல் குரற் சோக வாழ்த்தோடும் விழா கூடிற்று. விழாவின் ஆரம்பத்தில் இணைச்செயலாளர் இம்மனுவேல் சோனுச்சலம் இக்கழகத்திற்கு 'வளர்ந்து வரும் பொதுமக்கள் பேராதரவையும், இக்கழகத்தின் முக்கியத்துவத்தையும், எதிர்காலத்தில் இக்கழகம் 'சிரைக்க' விருக்கும் அரும் பெரும் காரியங்களையும் தெட்டத்தெளிவாக எதுகை மோனையோடு எடுத்தியம்பினுர்.

அடுத்தபடியாக பின்வரும் பிரேரணைகள் எல்லோராலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:-

(1) அகில இலங்கை தாடி சக குடுமி வளர்ப்போர்கழக அங்கத்தினர் நாற்பது நூறு பேரும் கையெழுத்திட்டு, 'சசிலேகா' தேச வர்த்தினியின் விலையை அரைவாசிக் கரைவாசி குறைக்கவேண்டுமென்று ஓர் முடங்கலை சம்மேளன அதிபர் சிவசங்கராச்சார்ய மூர்த்தி மூலம் 'சசிலேகா மில்ஸ்' உரிமையாளர் உஞ்சதேவர் உமாபதி அவர்களுக்கு அனுப்பி வைப்பது.

(2) மாதக் கடைசியில், 'செலூ'னுக்குக் கொடுக்க அல்லது சவர 'பிளேட்' வாங்க 'வெள்ளையப்ப' னுக்கு தட்டுப்பாடு ஏற்படும் 'கோர்ணமே'ந்து பதினேராங்கட்டைகள் முதல் கொழும்பு மாநகர் புளியமரத்தடிச் சந்தி 'யங்கி'கள் ஈருக மயிர் வளர்ப்பில் அக்கரை உள்ள இல்லாத அத்தனைபேரும் அங்கத்தினர்களாக்கச் சேர கழகச் சட்ட நிபந்தனைச் சரத்துகளில் விசேட மாற்றங்களும் சலுகைகளும் செய்துகொடுப்பது.

(3) இச்சலுகைகளைமுன்னிட்டு அடுத்த வருடம் ஆவணி மாதம் ஆருந்திகதிக்கு முன் இக்கழக அங்கத்தினர் தொகை அறுபதிஞயிரம் பேருக்கு அரைப்பேர்குறைந்தாலும், அகில ஈழ 'அர்த்தால்' ஒன்று நடத்தி (அதாவது: ஆளுக்கொரு பசுமரத்தின் உச்சியில் ஏறி நின்று) அத்தனை 'சலூ'ன்களையும் ஒதுக்குவது. இப்படிச் செய்வதன்மூலம் குறைந்த கணக்கு அரை லட்சம் அங்கத்தவர்களாவது சேர்க்கலாம்.

இப் பிரேரணைகள், பிரசன்னமாயிருந்த மகான்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டபின் கழகம் இனிது கலைந்தது.

பின்குறிப்பு:- அன்று நடந்த விசேட 'சோசிய'லின் போது, 'ஸ்பெச'லாக தயார் செய்த 'மொச்சக் கொட்டை' வறுவல் எல்லோருக்கும் பரிமாறப்பட்டதோடு உழைஞர் வெண்ணைவெட்டி டம்பாச்சாரியின் புதல்வியின் அகால மறைவின் காரணமாக அவரின் ஆன்மா சர்வ சாந்திபெற மூன்றே முக்கால் மணிநேர மௌனமும் அனுட்டிக்கப்பட்டது என்பதை நேயர்களுக்கு சொல்லிவைக்க விரும்புகிறேன். (சங்க அங்கத்தவர் தொகை நாலாயிரம் என்ருலும், பிரசன்னமாயிருந்தோர் தொகை 64 பேர் தான். விழாவின் இறுதியில் தேநீர் விருந்தோடு கற்கண்டும் வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்ததால் அக்கம் பக்கத்திலிருந்து வந்த 'சுண்டைக்காய்' பையன்கள் தொகை மாத்திரம் 56).

# மறைந்த சாணக்கியர்

—சி. சுதந்திரராஜா, தாவடி—

சேற்றின் மத்தியில் நற் செந்தாமரை மலர்ந்தது போல், இரண்டாவது உலக மாயுத்தத்திற்கோர் விடிவெள்ளியாக சர்வின்ஸ்டன் சர்ச்சில் 1874ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ம் திகதி ரண்டால்ப் சர்ச்சிலுக்கும் அமெரிக்கா மாது ஒருவருக்கும் முதற் புத்திரஞக பிறந்தார்.

இளமைப் பருவத்திலேயே பற்பல கலைகளையும் பயின்று, தமது இருபத்தோராவது வயதில் இராணுவத்தில் சேர்ந்து கியூபா, எகிப்து, இந்தியா ஆகிய நாடுகளில் பல இராணுவ சேவைகளைச் செய்தார்.

1900ம் ஆண்டில் முதன் முதலாக பாராளுமன்றத்தில் பிரவேசித்து, 1906 ல் ஆட்சி பீடத்திற்கு வந்த லிபரல் அரசாங்கத்தில் பதவியேற்ருர். சர்ச்சில் தமது முப்பத்திநான்காவது வயதில் ஒரு இராணுவ அதிகாரியின் மகளான செல்வி கிளமைன்னுடன் கொய்ஸரை திருமணம் செய்தார்.

பிரிட்டனின் உள்நாட்டமைச்சராக 1910 லிருந்து 1915 வரை ஐந்தாண்டு காலம் அருந்தொண்டாற்றினுர். கன்சர் வேட்டிவ் கட்சிப் பிரதிநிதியாக 1924 ல் தெரிவு செய்யப்பட்ட சர்ச்சில், பால்ட்வின் அரசாங்கத்தில் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஆரும் ஜோர்ஜ் மன்னர், பிரிட்டனில் ஏற்பட்ட கூட்டரசாங்கத்தில் யுத்த தலைவராகக் கடமையாற்ற இவரை அழைத்தார். அப்போழுது இவரது வயது அறுபத்தைந்திருக்கும். 1941 ல் அமெரிக்க சனதிபதி ரூஸ்வெல்ட்டுடன் சேர்ந்து அத்திலாந்திச் சாசனத்தைத் தயாரித்த பெருமை இவரையே சாரும்.

1951ம் ஆண்டில் சர்வின்ஸ்டன் சர்ச்சில் கன்ச வேட்டிவ் கட்சியைத் தலைமை தாங்கி மக்களுள்ளங்களில் என்றுமழியா இடத்தைப் பெற்றுக் கொண்டார். பின்னர் அந்தனி ஈடனுக்கு அப்பதவியை கொடுக்கும் நோக்குடன் 1955 ல் பதவியிலிருந்து வெளியேறினுர்.

இவர் சிறந்த ஓர் போர் வீரனுகவும், இராச தந்திரியாகவும், நூலாசிரியராகவும், விரிவுரையாளராகவும், இலக்கிய இரசிகராகவும், அரசியல் ஞானியாகவும் திகழ்ந்தார். இரண்டாம் உலக மாயுத்தத்தின் போது பிரிட்டிஷ் மக்களிற்கு, கூட்டரசாங்கத் தலைவராயிருந்து மாபெரும் வெற்றியீட்டிக் கொடுத்தார். நெஞ்சுறுதிக்கு, தன்னம்பிக்கைக்கும் சான்று இவரேதான்.

ஆசிய நாட்டு மக்களைப் பற்றி குறிப்பாக இந்திய நாட்டு மக்களைப் பற்றி இவர் கொண்டிருந்த கருத்து தவருனது. அடி [illegible] தலைக் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்க இவர் கையாண்ட முறைகள் கண்டிக்கத்தக்கசது என்ருலும் அவரின் அரசியற் சாணக்கியம் பாராட்டிற்குரியது.

ஈற்றில் சர் வின்ஸ்டன் சர்ச்சில் கடும் சுகவீனமாகவிருந்து 1965ம் ஆண்டு தைமாதம் 24ம் திகதி காலை எட்டு மணியளவில் காலமாஞர். இவர் தமது தந்தையாரின் 70 வது மரண தினத்தன்றுதான் மரணமாஞர். இவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு மறைந்து விடாது!

## காலைக் காட்சி

—"மணி மொழி"—

கிழக்கு வானம் வெளுத்திடவே
கிளிகள் கீதம் பாடிடவே
குயில்கள் குரலிசை கேட்டிடவே
குழந்தைகள் எங்கும் எழுந்தனரே.

மலர்கள் பலவும் விரிந்திடவே
மனிதர் பலரும் எழுந்திடவே
இலையில் பனித்துளி மறைந்திடவே
இரவி எழுந்தனன் கிழக்கினிலே

ஆலய மணியோசை கேட்டிடவே
அமுத கானம் சொரிந்திடவே
பயிர்கள் எங்கும் செழிப்புறவே
பகலவன் மகிழ்ந்தான் பகலினிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெமினி கணேஷ் : சும்மா திறந்து கிடந்துச்சேன்னு படுக்கலாம்னு வந்தேன்.

சாவித்திரி : யோவ், திறந்து கிடக்கிற இடத்திலே தான் கேட்டு நுழையணும். மூடிக்கிடக்கிற இடத்திலே எப்படி நுழைவே?

விரைவில்!

கலாசித்ராவின் **ஆயிரம் ரூபாய்**

சாவித்திரியின் துடுக்கும் மிடுக்கும் நிறைந்த நடிப்பு

உங்களைப் பரவசப்படுத்தும்! மெய் சிலிர்க்க வைக்கும்

ஜெமினி கணேசன்-சாவித்திரி-எம். ஆர். ராதா - ராகினி-நாகேஷ்

மற்றும் பலர் நடிக்கும்

இவ்வுன்னத சித்திரத்தை கே. எஸ். கோபால கிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்



| | | | |
|---|---|---|---|
| முருகன்<br>ஜிந்துப்பிட்டி<br>சிவாஜி—சரோஜாதேவி<br>நடிக்கும்<br>**இருவர் உள்ளம்** | ராணி<br>யாழ்ப்பாணம்<br>கல்யாணகுமார் — விஜயகுமாரி<br>நடிக்கும்<br>**மணி ஓசை** | ஈஸ்வரன்<br>கிளிநொச்சி<br>நாகேஸ்வரராவ்—சாவித்திரி<br>நடிக்கும்<br>**அனுராதா** | லிபேர்ட்டி<br>அட்டன்<br>நாகேஸ்வரராவ்— அஞ்சலிதேவி<br>நடிக்கும்<br>**மங்கையின் சபதம்** |

வெற்றி முரசு கொட்டும் 2-வது மாதம்!

ஜீவராணி—ரவிந்திர ரூபசேன—ஆனந்த ஜயரத்ன—லீனுடி சில்வா—சாந்திய குமாரி நடித்த

**சுயாகே ரஹஸ (சுயாவின் ரகசியம்)**



6 வது வாரம்!

கொட்டடியில்



**கல்யாணியின் கணவன்**

2வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
வின்சர் (யாழ்ப்பாணம்)
இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை)
ரீகல் (கம்பளை)
ரீகல் (கண்டி)
தாஜ்மகால் (மாத்தளை)
ஸ்ரீ முருகன் (வவுனியா)



எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—அசோகன்
புஷ்பலதா—சௌகார் ஜானகி — நாகேஷ் நடித்த

**அல்லி**

# இப்பொழுது நடைபெறுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜயா (அம்பாறை)


விஜிதா [அட்டன்] மொடேர்ன் [பதுளை] கல்யாணி [நாவலப்பிட்டி] கிறசன்ட் [புத்தளம்]

ஆகிய திரைகளில்!

பெற்றோரிடம் காணாத பரிவையும், பாசத்தையும் அத்தையின் மடியில் காண்கிறாள் குழந்தை மீனாட்சி. அன்பு ஊற்றாகத் திகழும் அந்த அத்தைதான்......

அமர் ஜோதி மூவீசார் அளிக்கும்

**கற்பகம்**



நடிகர்கள்:
ஜெமினி கணேசன், சாவித்திரி, கே. ஆர் விஜயா, ரங்காராவ், எம். ஆர். ராதா, முத்துராமன், ஷீலா, வி. கே. ராமசாமி

பாடல்கள் : வாலி—பின்னணி : சுசிலா—இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 19¼ ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் பெப்புருவரி மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org